MUSLIM ARTS COLLEGE
A Muslim Minority Institution - Estd 1982
Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Recognized u/s 2(f) & 12(B) of UGC Act.
Azhagiamandapam, Thiruvithancode - 629 174, Kanyakumari District, Tamil Nadu, India.
Phone : +91 4651 248397, 248842 / website : www.muslimartscollege.in / email : muslimartscollege@gmail.com
ISO 9001:2000
Reg. No. : RQ91/3688

# Regional language to English: Translated copy of Print Journal

| Sl.No | Name of the author/s | Department of the teacher | Title of paper |
|---|---|---|---|
| | 2022-2023 | | |
| 1 | Dr.A.Anto Nishanthi | Tamil | Ayumperukapiyathil Uruva Oviyankal velipaduthum Alakiyal |
| | 2021-2022 | | |
| 2 | Dr.T.Mini | Tamil | Thiruvattar Athikesava Perumal kovil kalai vadivam |
| 3 | Dr.T.Mini | Tamil | Purananuril Nadukal Valipadu |
| | 2020-2021 | | |
| 4 | Dr.J.G.Joney Jeba Malar | Tamil | Moontampalina Ilakiya varalarum Puthumai Sinthanaikalum |
| 5 | Dr.J.Lali Ethaz | Tamil | Sadankugal Nampikaikal |
| | 2019-2020 | | |
| 6 | Dr.Y.Rani | Tamil | Kurinchinila Unavum Marabum |
| 7 | Dr.J.Lali Ethaz | Tamil | Sankakala kavithaikal kattum sinthanaikal |
| 8 | Dr.N.R.Shibaja | Tamil | Devarathil Aynthinai valvum Akaporul Nerium |
| 9 | Dr.J.Lali Ethaz | Tamil | Sanka kavithaikal Pesum Aarukalin Sirappu |
| 10 | Dr.Y.Rani | Tamil | Akananooru Kurum sirappiyavukal |
| 11 | Dr.V.Genitha Vins | Tamil | Akananootil Ulaviyal |
| 12 | Dr.T.Mini | Tamil | Purananootil Neer Nilaikal |
| 13 | Dr.N.R.Shibaja | Tamil | Valviyal Sinthanaikal kurum Sirupanattupadai |
| | 2018-2019 | | |
| 14 | Dr.J.Lali Ethaz | Tamil | Neethi Noolkal valiyuruthum Ilvalkai Nerikal |
| 15 | Dr.D.Merlin Mini | Tamil | Purananootil valviyal Aram |

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2022-2023**

## S.No:1

**Title of paper** : **Ayumperukapiyathil Uruva Oviyankal velipaduthum Alakiyal**

**Name of journal** : **Puthupunal**

**Year of publication** : 2023

**ISSN number** : 2278-1641


**Link to article** : https://www.muslimartscollege.in/naac/ANTO_NISHANTHINI_UGC_CARE_LIST.pdf

ISSN 2278 - 1641
UGC Care Listed Journal

# புதுப்புனல்

கலை இலக்கிய மாத இதழ்

மலர் : 14 இதழ் : 5 ரூ. 100/- மே 2023



33. தமிழ் - சமஸ்கிருத உயிர்ற்றும் புணரியல் ஒப்பீடு
ஞா.ரூபன்சுபராஜ் 104
34. ஆசாரக்கோவையில் கல்வி ஒழுக்க மதிப்பீடுகள்
ச.மரியஜெயந்தி 106
35. குறுந்தொகையில் பெண் ஆளுமை
அ.ஆன்சி 109
36. ஐம்பெருங்காப்பியத்தில் உருவ ஓவியங்கள் வெளிப்படுத்தும் அழகியல்
ஆ.ஆன்றோ நிஷாந்தி 111
37. இஸ்லாமியத் தமிழ் சிறுகதைகளில் குறிக்கோளியல் நெறிமுறைகளும் இஸ்லாமியர்களின் வாழ்வியலும்
பா. அப்துல்லா 113
38. எட்டுத்தொகை நூல்கள் கூறும் ஈதல் அறம் ச. இராமேஸ்வரி 117
39. கி.ராஜநாராயணனின் படைப்புகளில் சமூகவியல் சிந்தனைகள் வே.எவரெஸ்ட் மேரி 120
40. பழமொழி நானூறு வழி அரசியல் அ.ஐவி 122
41. இனவரைவியல் பார்வையில் நீல பத்மநாபனின் தலைமுறைகள் ச.ப.கணேஷ் 124
42. குரவைக்கூத்தில் திணை சார்ந்த மக்களின் பங்களிப்பு
ரெ.பரமேஷ் 127
43. சங்க இலக்கியத்தில் மகளிரின் வாழ்வியற் பண்பாடு
து.புனிதா ஜூலியட்ரூபி 130
44. சங்க இலக்கியத்தில் கொற்றவை வழிபாடு
மா. ரேவதி 133
45. சீவக சிந்தாமணி உணர்த்தும் சமூக, சமயச் சிந்தனைகள் க. சங்கர் 136
46. திருவருட்பிரகாச வள்ளலார் பிள்ளைத் தமிழில் வாழ்வியல் நே. சங்கீதா 139
47. புறப்பொருள் வெண்பாமாலை சுட்டும் போர் மரபுகள்
க.சண்முகம் 141
48. குமரி வட்டார நாவல்களில் பெண் புனைவுகள்
ச.வ.சஜி ரேகா 145
49. சிவவாக்கியரும் தத்துவமும் கொ.பரிமளம் 148
50. திருக்குறள் காட்டும் அறிவு களஞ்சியங்கள்
செ.சூரியா 150
51. சிங்கை மா. இளங்கண்ணனின் எண்ணங்கள் நிலையானவை அல்ல சிறுகதை - ஒரு சமுதாயப் பார்வை செல்வராணி 152
52. சித்த மருத்துவ மேம்பாட்டு சிந்தனைகள்
சு.செல்வி 154
53. புறநானூற்றில் பாணர் வாழ்வியல்
கோ.சி.கோலப்பதாஸ் 156
54. சேக்கிழாரின் திருநாவுக்கரசர் புராணத்தில் சமயங்களில் நிலை சி. சுந்தரமூர்த்தி 159
55. புறநானூற்றில் காஞ்சித்திணைக் கூறுகள்
மோ. டயனா ஜெயந்தி 162
56. செந்நெல் நாவலில் சமூக உறவுகள்
டோனிஷா சோ 164
57. மறுபக்கம் நாவல் உணர்த்தும் நாட்டார் வழிபாட்டு மரபுகள் த. அனுஷா 167
58. திருக்குறளில் அரசியல் சிந்தனைகள் சங்கத் தமிழ் நூல்களுடன் ஒப்புமைப் பார்வை வி.ரஞ்சித் 169
59. கல்வெட்டியல் நோக்கில் சங்க இலக்கியம்
இர.தினகர் 17
60. நற்றிணையின் பார்வையில் பலாமரம்
நி.அமிருதீன் 17
61. நாஞ்சில் நாடன் கவிதைகளில் அறச்சீற்றமும் அங்கதமும் து.பிரபாகரன் 17
62. சு.வேணுகோபால் சிறுகதைகளில் கைவிடப்பட்ட மனிதர்கள் வே. நிஷா 18
63. சிறுபாணாற்றுப்படையில் நாட்டுவளம்
ப.பியூலா 18
64. பெரியாழ்வார் திருமொழியில் வருணனைகள்
சௌ.பிருந்தா 18
65. அன்றும், இன்றும் - வரியும்
அ.அமுல்செல்வராணி 19
66. புறநானூற்றில் ஔவையார் கூறும் அறங்கள்
பொ.கலைச்செல்வன் 19
67. தமிழர் பெண்களின் அணிகலன்களில் அழகியல்
த.மகிலாஜெனி 19
68. தமிழ்ப் புரவலர் புலவர் மரபில் பாரியும் - கபிலரும்
மு. மஞ்சுளா 20
69. செல்லாத பணம் நாவலில் பாத்திரப் படைப்பு
மி.மாலினி 20
70. தோப்பில் முகமது மீரான் நாவல்களில் விளிம்புநிலை மக்கள் மு.பாபு 20
71. உலகச் செம்மொழிகளும் தமிழும் சு.இளமாறன் 20
72. திருமந்திரம் கூறும் வாழ்வியல் விழுமியங்கள்
ரா.ராட்லின்ஜினு 21
73. தெற்கில் உதித்த ஆதவன் அய்யா வைகுண்டர்
து.வைகுண்டகண்ணன் 21
74. முல்லை நிலமக்களின் விருந்தோம்பல்
கு.ச.ஜெயஸ்ரீ 21
75. கவிஞர் மேத்தா கவிதைகளில் மானுடவியல்
கு.ஜெலின் சுஜி 21
76. சிலம்பக் கலையின் அடவு முறைகள் த.ரதீஷ் 22
77. தோற்பாவை நிழற்கூத்தும் வழிபாட்டு மரபும்
ப.முருகன் 22
78. புதிய தலைமுறை கவிஞர்களின் கவிதைகளில் வாழ்வின் வலிகள் ஹெ.மார்டின்ராபர்ட் 22
79. தலித் கவிதைகளில் சாதியச் சிந்தனைகள்
இ.மதன் 2
80. அகநானூற்றில் சடங்கு முறைகள்
மு.மகேஷ்குமார் 23
81. சமகால தமிழ்நடையியலில் புதுப்பாட்டு கவிதை யாக்கம் - ஓர் ஒப்பீடு சே.கிருஷ்ணவேணி 23
82. பதினெண்கீழ்க்கணக்கில் தலைவி - தோழி குறித்த உறவு க.மாலதி 23

# ஐம்பெருங்காப்பியத்தில் உருவ ஓவியங்கள் வெளிப்படுத்தும் அழகியல்

ஆய்வாளர்
**ஆ. ஆன்றோ நிஷாந்தி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு

**முன்னுரை**

பண்டைத் தமிழர் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். இயற்கையினால் அனுவித்த அழகியல் இன்பத்தை ஓவியமாகப் பதிவு செய்து மகிழ்ந்தனர். தமிழர்களின் உளநிலையும், போலச்செய்யும் கருத்து நிலையும் ஓவிய உருவாக்கத்திற்கு அடிப்படையாக இருந்தன. உருவ ஓவியத்தின் தொடக்கமானது ஆதிமனிதன் வாழ்ந்த குகை மற்றும் பாறை ஓவியங்களிலிருந்து ஆரம்பித்தன. மனித வடிவங்களையும், பொருட்களின் வடிவங்களையும் உள்ளவாறு வரையும் முறை உருவ ஓவியமாகும். அத்தகைய உருவ ஓவியங்களை வரையும் பழக்கம் காப்பியக்காலத்தில் வழக்கிலிருந்தது. ஆகவே ஐம்பெருங்காப்பியத்தில் காணலாகும் உருவ ஓவியங்கள் குறித்த கருத்துகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

**உருவ ஓவியம் விளக்கம்**

வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்அல்லது மறைந்து போனவர்களின் உருவத்தை உள்ளதுஉள்ளவாறு வரைந்து காட்டக்கூடிய ஓவியம் உருவ ஓவியமாகும். உருவ ஓவியங்களை வரையும் திறன் Portrait and Model என்று வழங்கப்படுகிறது. கடவுளின்திருவுருவங்கள், அரசன் அரசி உருவங்கள், தலைவர்களின் உருவங்கள், பறவைகள், விலங்குகள், பழங்கள், பூக்கள் என உருவ ஓவியங்கள் வரையப்படுகின்றன. "நல்ல ஓவியம் அல்லது கலையூட்டும் ஓவியம் பார்போருக்கு வெறுமனே காட்சியாக இடம் பெறாது. ஆழ்ந்த தரிசனமாக மாறி வருகின்றது. இதன் காரணமாக வழிபாட்டு நிலையங்களிலே ஓவியங்கள் தீட்டப்பெற்றன." சமயக் கருத்துகளை மையமாக கொண்டு அதிக அளவில் உருவ ஓவியங்கள் வரையப்படுகின்றன. சிறிய அளவில் உருவ ஓவியங்களாக வரையப்படுபவை சிற்றுருவ ஓவியங்கள் (Miniature Painting) எனப்படும்.

உருவ ஓவிய வகைகள் உருவ ஓவியம் என்பது அச்சுப்பிசகாமல் நகலெடுக்கும் அற்புத ஓவியக்கலையாகும். பார்க்கின்றவர்களைப் பரவசப்படுத்தும் வகையிலும், எழுச்சியூட்டும் வகையிலும் உருவ ஓவியங்கள் அமைகின்றன. எனவே உருவ ஓவியங்கள் தெய்வத் திருவுருவ ஓவியங்கள், இயற்கை உருவ ஓவியங்கள், கற்பனை உருவ ஓவியங்கள், சித்திரப்பிரதிமை (மனித உருவ ஓவியங்கள்) என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**தெய்வத் திருவுருவ ஓவியங்கள்**

தெய்வங்களை உருவ ஓவியமாக வரைந்து வணங்கும் மரபு பண்டைக்காலம் முதல் இன்று வரை தொடர்கின்றது. ஓவியன் கைவண்ணத்தில் உருவான தெய்வத் திருவுருவங்கள் வழிபாட்டுத் தலங்களிலும், பூஜை அறைகளிலும் இடம் பெறுகின்றன. எந்த உருவமும் இல்லாத ஓரிடத்தில் இறைவனை எண்ணி வழிபடுவது சாதாரண மனிதனுக்குச் சற்றுக் கடினம் என்பதை உணர்ந்து தான் வழிபடும் இடங்களில் சிற்பங்களிலும், சித்திரங்களிலும் வடிவங்களை அமைத்திருக்கிறார்கள். "தமது குலக்குறியை ஓவியங்களாகப் புனையும் மரபும் அவற்றைப் புனிதமாகக் கருதும் மரபும் தொன்மையான ஓவியப்புனைவுகளிலே காணப்படுகின்றன." வரம் தருவதற்கான தெய்வ உருவங்களை வரையும் ஓவியக்கலைஞர்குழுவை 'ஓவியமாக்கள்' என்று அழைத்தனர். இவர்கள் தெய்வங்களை உருவாக்கும் பூலோக பிரம்மாக்கள் ஆவர்.

"வரந்தர வெழுதிய ஓவிய மாக்களும்" (மணி.28:38)

பார்போரின் மனதை உருக்கி வழிபடத் தூண்டும் வகையில் நேர்த்தியாக தெய்வ உருவங்களை வரையும் கலைஞர் குழுக்கள் காப்பியக்காலத்தில் இருந்தனர்.

**இயற்கை உருவ ஓவியங்கள்**

இயற்கையின் வடிவங்களை ஓவியப் பொருண்மைகளாகக் கொண்டு வரைந்த ஓவியங்கள் இயற்கை உருவ ஓவியங்கள் எனப்படும். சீவகனுக்கும் தந்தைக்கும் திருமணம் நடைபெற அழகு மண்டபம் உருவாக்கப்பட்டது. அம்மண்டபத்தின் பளிங்குச்சுவரில் அழகிய களிறும் (ஆண் யானையும்), பெண்யானையும், அதனுடைய குட்டியும், மானும், அதன் துணையும், குளங்களும், அதில் மலர்ந்த அழகிய தாமரை மலர்களும், பறவைகளும், காண்போரை மயக்கும் பொற்பாவைகளும் ஓவியமாகத் தீட்டி வைத்துள்ளனர்.

"காமர்களி றும்பிடியுங் கன்றுங்கலை மானும்
தாமரைய வாவிகளும் புள்ளுந்தகை நலத்தின்
ஏமுறுவ பாவையினொ டியக்கிநிலை யெழுதி"
(சீவக. 596)

பளிங்குச் சுவரிலுள்ள ஓவியத்தைப் பார்ப்பவர்களுக்கு வெளிப்புறம், உட்புறம் எதுவென்று உணர முடியாதவாறு அழகாக ஓவியம் தீட்டப்பட்டிருந்தது.

**பறவை, விலங்கு உருவ ஓவியங்கள்**

உண்மையான பறவைகளும், விலங்குகளும் பளிங்குச் சுவரில் வரையப்பட்டுள்ள பறவைகளையும், விலங்குகளையும் கண்டு அவை தம்மை விழுங்கிக் கொன்றுவிடும் என்றெண்ணி பயந்து அவ்வோவியத்தை நெருங்கவில்லை. ஓவியக்கலையில் பலகாலம் சிறப்புற்று விளங்கியவரும், கண்டு வியந்து மகிழும் வகையில் பளிங்குச்சுவர் பறவை, விலங்கு ஓவியங்கள் சிறந்து விளங்கின.

"உழந்தவரு நோக்கி மகிழ் தூங்கவெளி வாயிந்து
விழுங்குமெனப் பறவைகளும் பிற விலங்கும்அடைய."
(சீவக.597:1-2)

ஓவியத்தில் வரையப்படும் உருவம், உண்மையான உருவத்தினைப் போன்று உயிரோட்டமாகக் காட்சியளிப்பது சிறந்த ஓவியக்கலைப் படைப்பாகும். இவ்வகை ஓவியத்தை நன்கு புலமைப் பெற்ற ஓவியர்களால் மட்டுமே தீட்ட முடியும். காப்பியக்காலத்தில் உயிரோட்டமான உருவ ஓவியங்களை வரையும் ஓவியர்கள் இருந்துள்ளமை புலனாகிறது.

**கற்பனை உருவ ஓவியங்கள்**

கற்பனை என்பதற்கு இல்லாததை இருக்குமாறு நினைத்தல் 3 என்று தமிழ் அகராதி பொருள்தருகிறது. ஓவியன் எண்ணமெனும் கற்பனை உணர்வுக்கு உருவம் கொடுத்து வரையும் ஓவியங்கள் கற்பனை உருவ ஓவியங்களாகும். காப்பியகாலத்தில் மகளிர் உருவ ஓவியம் வரைவதில் வல்லவராக இருந்துள்ளனர் என்பதற்கு குண்டலகேசி உதாரணமாகும். குண்டலகேசி இளம் வயதிலேயே ஓவியம் வரைவதில் சிறப்புற்று விளங்கியவள். ஒருநாள் குண்டலகேசி தோழிகளுடன் அமர்ந்து ஓவியம் வரைந்து கொண்டிருந்தபோது, தோழியொருத்தி குண்டலகேசியின் வருங்கால கணவனைக் கற்பனையாக வரைந்து காட்டும்படி கூறியபோது, தனது கற்பனையிலுள்ள வருங்கால கணவனை உருவ ஓவியமாக வரைந்தாள்.

"பாங்கியரைத் தோழியரைப் பாணியரை வைத்தாள்
ஓங்குபெருங் குன்றமுடன் ஓவியஞ்சேர் காவும்
பாங்கிலுற ஆவணவும் பாண்மையுறச் செய்தான்"
(கு. கேசி1:34)

அச்சு அசலாக ஓர்ஆண்மகனின் உருவத்தை கற்பனையாகத் தீட்டும் திறமை ஓவியக்கலையில் திறமை பெற்றவர்களால் மட்டுமே சாத்தியமாகும்.

**சித்திரப் பிரதிமை**

பிரதிமை என்றால் உருவம் என்று பொருள். "மனித உருவங்களை ஓவியமாகத் தீட்டுவதை சித்திரப்பிரதிமை"[4] என்று குறிப்பிடுவர். இதனை ஆங்கிலத்தில் போர்ட்ரைட்டார் (portraiture) என்பர்.மனித வடிவங்களான ஆண், பெண் உருவங்களை நேரில் பார்த்த வடிவில் மிகத்துல்லியமாக வரையும் கலைமுறை சித்திரப்பிரதிமையாகும். சோழ மன்னனின் நடன அரங்கமானது சிற்பநூலோர் குறிப்பிட்ட இயல்புகளிலிருந்து சிறிதும் மாறுபடாமல் அமைக்கப் பட்டது. அவ்வரங்கின் மேல்நிலையில் அனைவரும் வணங்கிப் போற்றுமாறு அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர், என்னும் நால்வகை வருணப் பாகுபாட்டினரின் உருவங்களை ஓவியமாக வரைந்து வைத்துள்ளனர்.

"தோன்றிய அரங்கில் தொழுதனர் ஏத்த
பூதரை எழுதி, மேல் நிலை வைத்து"
(சிலம்பு .3:106-107)

ஆண் பெண் சித்திரப் பிரதிமை சீவகன் மேல் மோகமுற்ற அநங்கமாலை ஓர் ஓவியம் வரைந்தாள். அவ்வோவியத்தில் அநங்கமாலை நடனம் ஆடுவது போன்றும், சீவகன் அந்நடனத்தை விரும்பிப் பார்ப்பது போன்றும் உருவ ஓவியமாகத் தீட்டினாள். அவ்வாறு வரைந்த ஓவியத்தில் சீவகனுக்கு மாலையணிவித்து வணங்கியதை,

"என்ன நாளுமர ற்றபெறான் விருப்பப்போகியின்மழைகள்
மொய்த்
தன்னந்துஞ்சுமடிக் குடிலினுள்ளன்றியான் கொண்ட
நாடகத்தினைத்
துன்னிநம்பியுருவு தீட்டித் தொங்கல் வேய்ந்து
தொழுதாற்றரீ
மன்னர்மன்னமதி நோய்குடையாய் மகளிர் காமமறைத்
தொழிதியோ" (சீவக.2.588)

என்று சீவகசிந்தாமணி தெளிவுப்படுத்துகிறது.

**முடிவுரை**

ஓவியம் என்பது உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களுக்கு உருவம் கொடுப்பதாகும். ஓவிய கலை அழகுணர்ச்சியாலும், அடிமன உந்துதலாலும் பட்டறிவை வெளிப்படுத்தும் ஆர்வத்தாலும், தோன்றியதாகும். வரி வடிவக் கலைக்கு அச்சாணியாக நின்றது ஓவியக்கலையேயாகும். காப்பியக் கலத்தில் தெய்வ உருவங்களையும், மனித உருவங்களையும், பறவை, விலங்கு, கொடிகள், போன்றவற்றை மிகத் துல்லியமாக வரையும் ஓவியர்கள் இருந்துள்ளனர். மங்கலப்பொருள்ஒன்றைத் துயில் எழுந்ததும் காண்பது நன்னிமித்தமாகக் கருதப்பட்டதே சுவரில் உருவ ஓவியங்கள் வரைவதற்கான காரணமாகும். மேலும் அரசர்களும், மகளிரும் உருவ ஓவியம் வரைவதில் கைத்தேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். இதன் மூலம் ஐம்பொருள் காப்பியக் காலத்தில் அழகியலை வெளிப்படுத்தும் உருவ ஓவியக்கலை சிறப்புற்றிருந்தமை தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. கலையும் ஓவியமும், ஜெயராசா, ப.51., 1999,போஸ்கோ பதிப்பகம், நல்லூர், யாழ்ப்பாணம்.
2. மேலது., ப.17.
3. லியோ தமிழ் அகராதி., மூர்த்தி. அ.கி., ப.129.,2018., லியோ புக் பப்ளிஷர்ஸ், தி.நகர், சென்னை.
4. ஓவியக்கலை., நந்தலால்போஸ் ,ப.67., 1956., லலிதா பிரிண்டர்ஸ், 18 வடக்கு வெளிவீதி, மதுரை.

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2021-2022**

## S.No:2

**Title of paper** : **Thiruvattar Athikesava Perumal kovil kalai vadivam**

**Name of journal** : **International Tamil Aaivithal**

**Year of publication** : 2021

**ISSN number** : 2582-1113

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/mini_(2).pdf

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில் கலை வடிவங்கள்

ISSN 2582-1113

தி. அலபாகிரேஸ் [அ]*, த. மினி [அ]

[அ] தமிழாய்வு மையம், முஸ்லிம் கலைக் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி) திருவிதாங்கோடு-629174, இந்தியா

UGC care under Group... 

# Art Forms of Thiruvattar Adikesava Perumal Temple

irjt.iorpress.org

T. Alpha Grace [a]*, T. Mini [a]

[a] Department of Tamil, Muslim Art's College, (Manonmaniam Sundaranar University, Abhishekapati, Thirunelveli), Thiruvithancode-629174, India.

* Corresponding Author: [illegible]@gmail.com

Received: 12-06-2021
Revised: 16-09-2021
Accepted: 27-10-2021
Published: 30-10-2021

ABSTRACT

Sculpture is one of the traditional arts of Tamils. Arts are a cultural sign of human civilization. Apart from that, all our art forms have a long history. Sculptures can be seen everywhere like the floor, wall, pillars, plane, tower etc. of the temple building. There are no temples without sculptures. We can cite the sculptures and pictorial art forms of Tiruvattar temple as evidence that our forefathers built temples for deity worship as art galleries.

Keywords: Thiruvattar Adikesava Perumal, Sculptures, pillars, Serpents, Temple

Check for updates

## முன்னுரை

பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வரும் இந்த கிராமத்தின் உயிர் துடிப்பினைதிருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில் சிற்பங்களில் காண முடியும். அதுமட்டுமின்றி, நமது சமூகத்தில் வாழ்ந்து மறைந்த அனைத்து துறைகளிலும் உள்ளவர்கள், கிராமவாசிகள் பக்க சுவர்களிலும் கல் தூண்களிலும் வரிசையாக நின்று நம்மிடம் பேசுவது போன்று தோன்றுமாறு காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதாவது ஆண்கள், பெண்கள் வேலையாட்கள், சுமட்டு தொழிலாளிகள், ரோகிதர்கள், மேலாளர்கள், கிழாளர்கள், அரசர்கள், ராணிமார்கள்,தேவர்கள், அப்ஸரஸ்கள், கந்தர்வர்கள், அரக்கர்கள், முனிவர்கள், யோகிகள், வாயில் காவலர்கள், ஆலய காப்பாளர்கள், நவக்கிரகங்கள், அஷ்டதிக் பாலகர்கள் ஆலய வடிவமைப்புக்கு பயன்படுத்தப்பட்ட அளவு கருவிகள், தந்திர சக்கரங்கள் போன்றவையும் கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. குறிப்பாக நாகரிகம் மற்றும் அநாகரிகமான தோற்றங்களைக் கலை அழகில் காட்டுகின்ற சிலைகளும் இக்கோவிலில் உள்ளன. பறவைகள், விலங்குகள், சர்ப்பங்கள், புராண மனிதர்கள், போர்க்களங்கள், திருவிழாக் கோலங்கள் போன்ற நிகழ்ச்சிகளும் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளது கலை வடிவங்களுக்கு சான்றாக அமைகிறது.

## சிற்பக்கலை

"சிற்பக்கலை மனிதர், விலங்கு, பறவை, தாவரம் முதலான உலகத்திலுள்ள பொருள்களின் வடிவத்தையும், கற்பனையாகக் கற்பித்து அமைக்கப்பட்ட பொருள்களின் உருவத்தையும், அழகு பட அமைப்பது இந்த சிற்பக்கலை." (Venkadasamy, 2003)

உயர் துடிப்புள்ள இந்த கலை வடிவங்கள் அனைத்து காலத்திற்கும் விலைமதிப்புள்ள பொக்கிஷங்களாகும். புராண கதைகளைக் காட்சிப்படுத்தும் விதத்தில் இங்கு அத்ரி முனிவரின் மனைவி அனுசூயா அம்மையாரின் கற்புடைய வாழ்க்கையைப் பறைசாற்றும் விதமாகநிகழ்ந்த கதையானது சபா மண்டபத்தில் சிற்பமாக காட்சியளிக்கிறது.ஆனால் சிற்பத்தை பலவிதமாக சேதப்படுத்திய நிலையில் தற்போது நாம் பார்க்க முடியும்.அழகு கலைகள் மனித நாகரீகத்தின் பண்பாடாக விளங்குகின்றன [Venkatasamy, 2006]. உலகம் எங்கும் நாகரிகம் பெற்ற மனிதர் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அழகு கலைகள் வளர்க்கப்பட்டுள்ளன என்பதற்கு சான்றாக திருவட்டார் கோவிலையும் கூறலாம்.

## வியாளி வடிவங்கள்

கோவிலுக்குள் ஏராளம் வியாளி வடிவங்களை நாம் பார்க்க முடியும். யானையின் துதிக்கையும் சிங்கத்தின் முகம் உள்ள ஒரு விலங்கு. இது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு விலங்கின் வடிவம் என்று கருதலாம். பலிக்கல் மண்டபத்தின் மேற்கு பிரகாரத்தில் மட்டும் ஆறு வியாளிசிற்பங்கள் உள்ளன. ஆயுதமேந்திய வீரர்கள் பெரிய வியாளியின்மேல் அமர்ந்து பாய்ந்து செல்வது போன்ற ரூபங்கள் மண்டபத்தின் நுழைவு வாயில் அழகு பெறச் செய்கிறது. இங்குள்ள சிற்பங்களில் வடிவமைக்கப்பட்ட பறவைகள் ஊர்வன விலங்குகள் போன்றவைகளின்தோற்றங்கள் அனைத்தும் இன்றைய கால வடிவங்களில் இருந்து வேறுபட்டுள்ளதையும் கண்கூடாக பார்க்க முடியும்.இன்று நாம் பார்க்கின்ற பறவைகள் மிருகங்கள் போன்றவையின் வடிவங்களை விட அதாவது பரிணாம மாற்றம் வருவதற்கு முன் உள்ளவற்றை கல் தூண்களிலும் சுவர்களிலும் நாம் பார்க்கும் போது நம்மை சிந்திக்க வைப்பதாக அமைகிறது.

## சபா மண்டப கலை வடிவங்கள்

சபா மண்டபம் என்று கூறப்படும் பலிக்கல் முறையில் இரு பக்கங்களிலும் காணப்படும் சிலைகள் ராமாயண யுத்த காண்டத்தில் உள்ள நிகழ்ச்சிகள் என்றும் மகாபாரத காட்சிகள் என்றும் கூறுகிறவர்கள் உள்ளனர். பலிக்கல்புரையை கடந்து சென்றால் வலது பக்கமாக தோற்றமளிக்கும் மனோகரமான இந்திரஜித்தின் சிற்பமானது இடப்பக்கம் நிற்கும் அர்ஜுனனை நாகஸ்திரம் அனுப்பி கீழ்ப்படுத்துகின்ற காட்சி என்றும் கர்ணன் அர்ஜுனனும் போர் புரியும் காட்சி என்றும் கூறுகிறார்கள். அதே சிலையின் பக்கங்களில் சர்வாக சுந்தரியான ஒரு அப்சர கன்னிகையின் கையில் வரணமாலையுடன் வெற்றி வீரனின் கழுத்தில் சார்த்த இருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கோவில் சிற்பங்கள் அனைத்தும் கவர்ச்சியும் அழகும் மிகுந்தவையாக காட்சியளிக்கிறது. அதுமட்டுமின்றி சபா மண்டபத்தில் இரு பக்கங்களில் உள்ள சிற்பங்கள் மிகவும் நுணுக்கமான சிற்பக் கலையைப் பறைசாற்றுவதாகவும் சிற்ப சாஸ்திர விதிகளை கருத்தில் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

சபா மண்டபத்தின் வலது பக்கம் இரண்டாவதாக தெரியும் தூணில் மிக அழகான வேணுகோபால மூர்த்தியை செதுக்கி உள்ளனர். அது பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் விதமாய் பகவத்கீதை சுட்டுகிற கிருஷ்ணரின் வேணு நாதத்தில் மயங்கி, தன்னுடைய இயற்கை குணமான பகைமை குணம்மறந்து, பசுக்களுடன் இணைந்து நிற்கின்ற கொடிய விலங்குகளின் தோற்றமானது மிகவும் அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பசுவின் மடியில் இருந்து பால் குடிக்கும் புலி குட்டியையும் சர்ப்பத்தின் தலையில் இருந்து வேணுநாதத்தில் மயங்கி உள்ள எலிகளையும் காட்சிப்படுத்தும் விதத்தில் அழகாக செதுக்கப்பட்டுள்ளன.

இதன் அடுத்த தூணில் சிவனின் கங்காளநாத வடிவம் கொண்ட சிற்பம் உள்ளது. மிருதங்க ஆலாபனை செய்கின்ற ஒரு இளம்பெண் உண்மையில் உயிரோடு நின்று பாடுவது போன்றும்

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2021-2022**

## S.No:3

**Title of paper** : **Purananuril Nadukal Valipadu**

**Name of journal** : **International Tamil Aaivithal**

**Year of publication** : 2021

**ISSN number** : 2582-1113

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/miniugc20240729180351.pdf

RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21434

OPEN ACCESS

# புறநானூற்றில் நடுகல் வழிபாடு

2582-1113

போ. சுபா [அ], த. மினி [அ]

[அ] தமிழாய்வு மையம், முஸ்லிம் கலைக் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி), திருவிதாங்கோடு-629174, இந்தியா

irjit.iorpress.org

# The Worship of the Hero stone in the Purananuru

B. Suba [a,*], T. Mini [a]

[a] Department of Tamil, Muslim Art's College, (Manonmaniam Sundaranar University, Abhishekapati, Thirunelveli), Thiruvithancode-629174, India.

* Corresponding Author: rajav197979@gmail.com

Received: 28-07-2021
Revised: 02-10-2021
Accepted: 17-10-2021
Published: 30-10-2021

Check for updates

ABSTRACT

Purananooru is a very good book that tells the life of the ancient Tamils. It is a book that explains the valour, generosity, education, warfare, diet, excellence, hospitality and friendship of the ancient Tamils. Moreover, the book contains a lot of songs that express the valour of the ancient Tamils. The Purananooru hymns indicate that there was a custom of erecting 'Nadukal' to commemorate the sacrifices of the soldiers who were martyred during such a war. This article describes the way in which the spirits of the martyrs were offered flowers, peacocks, and food grains because they believed that they would remain in the tomb or in the middle stone. The incident of dying despite fasting and facing north has been pointed out and the incident of setting the middle stone for those who died is also mentioned. There are many types of stones in the middle stones such as veerakal, satikal, pattavan kal, Puli, Kuttikal, Nava Kandam, Ayutha Kal, etc. Animals like tiger, lion, leopard, etc., will block the way when they stop those who are smuggling goats and cows and bring them through the forest. It has been customary to plant a stone on the spot and worship the hero who dies while fighting with them. The researchers refer to it as a tiger stick. Similarly, there are many varieties such as pig-, horse-drawn stones, elephant-fighting stones, etc. Our forefathers had the habit of worshipping in this way by erecting a stone. It is also a continuation of the fact that we are now erecting tombs for the dead.

Keywords: Sangam literature, Worship, Hero stone, Purananuru

## முன்னுரை

சங்ககாலம் ஒரு வீரயுக காலம் என ஆய்வாளர்களால் அறியப்படுகின்றது. அந்த வகையில் அக்கால மக்கள் தங்கள் இனத்திற்காக போராடி உயிர் தியாகம் செய்யும் தலைவனின் வீரத்தைப் போற்றி நடுகல் வைத்ததாக புறநானூறு தெளிவாக எடுத்தியம்புகிறது.

நடுகல் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் ஆகும். இவற்றை வீரக் கற்கள் என்றும் கூறுவர். இறந்தவர்கள் எவருக்குமே நடுகற்கள் எடுக்கப்படலாயினும் வீரமரணம் அடைந்தவர்களுடைய நடுகற்களுக்கே பெருமதிப்பு கொடுக்கப்பட்டு வந்தது. வீரர்களுக்காக எடுக்கப்படும் நினைவுக் கற்களை மக்கள் வணங்கி வந்தமை பற்றியும், யாருக்கெல்லாம் நடுகற்கள் அமைக்கப்பட்டன என்பது பற்றியும் புறநானூறு தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

## நடுகல்

நடுகல் என்பதற்கு நட்டகல் என்று பொருள். நடுகல்லை நட்டக்கல், நடப்பட்ட கல் என புறநானூறும், நாட்டப்படுங்கல் என தொல்காப்பியமும், நாட்டியகல் என இளம் பூரணரும், நடுங்கல் என சிலப்பதிகாரமும் சுட்டுகின்றன. ஆரம்பத்தில் இடி, மின்னல், மழை, புயல், வெப்பம் போன்ற பயங்கர சக்தி உடைய ஆற்றல்களை வணங்கி, தமக்கு ஏற்பட்ட இன்னல்களிலிருந்து விடுபட அவற்றை வழிபடத் தொடங்கிய மனிதன் நாளடைவில் ஒரு உருவத்தை பாவித்து அதன்மீது பற்று கொண்டு மனதை ஒருமுகப்படுத்தி வழிபடத் தொடங்கினான். பின்னர் இவ்வுருவங்களை கற்களில் செதுக்கி வடிவமைத்து வழிபட்டு வந்தனர். கற்களால் சிறப்பத்தை செதுக்கத் தெரியாத மக்கள் நீண்ட கல்லை எடுத்து வந்து நட்டு வழிபட்டனர். இக் கல்வழிபாடு மிகப் பழங்காலந்தொட்டு தமிழகத்தில் சிறந்து விளங்கிற்று.

## நடுகல் அமைத்தல்

பண்டை தமிழகத்தில் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த சங்ககால மக்கள் நடுகல் வழிபாட்டினை மேற்கொண்டு தெய்வத்தை பரவியதாக புறநானூறு குறிப்பிடுகின்றது. புறத்திணைகளுள் இரண்டாம் திணையான கரந்தை திணையில் ஆநிரைகளை கவந்து சென்றவர்களை எதிர்த்து வியத்தகு போர்புரிந்து வீரமரணம் அடைந்த கரந்தை பூச்சூடிய ஆயர்குல வீரரைப் போற்றும் விதமாக அவர்போல் நடுகல் நாட்டி வணக்கம் செலுத்தினர். சேரல் இரும்பொறையின் கூரிய அம்பு தைத்து விழுப்புண் அடைந்த அதியமான் நெடுமானஞ்சி நடுகல் ஆகி தெய்வமானதை

"இல்லாகியரோ, காலை மாலை,

அல்லா கியர், யான் வாழும் தாளே,

நடுகல் பீலி சூட்டி, நார்அரி

சிறுகலத்து வகுப்பவும் கொள்பவன் கொல்லோ

கோடு உயிர் பிறங்குமலை கெழீஇய

நாடு உடன் கொடுப்பவும் கொள்ளா தோனே?

என்று குறிப்பிடுகின்றார் (Puliyur Kesigan, 2015).

மன்னனுடன் போருக்குச் சென்ற வீர மறவர்கள் போரில் வீரமரணம் அடைகின்றனர். அத்தகைய மறவர்களுக்கு மன்னனும் மக்களும் அவனது பெயரையும் புகழையும் கல்லில் எழுதி நடுகல்லாக நாட்டி வைத்திருக்கின்றனர். இதனை

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்ன

முன்னின்று கல் நின்றவர்

எனத் திருவள்ளுவர் படை செருக்கு என்னும் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார் (Varadharasan, 1959).

## உயிர்த் தியாகம் போற்றும் நடுகல்

போரில் இறந்த வீரர்களை போற்றும் வகையில் அமைக்கப்படும் நடுகற்களை நடுவதற்கு ஐந்து விதிமுறைகளை பின்பற்றியதாக தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"காட்சி கால்கோள், நீர்படை, நடுகல்

சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்தல் எனும்

இரு மூன்று வகையில் கல்லொடு புரைந்து

சொல்லப்பட்ட எழுமூன்று துறத்தே" (Tamilannal, 2010)

காட்சி, கால்கோள், நீர்படை, நடுதல் வாழ்த்து என்ற ஐந்து தான் அவை. காட்சி என்பது மலைக்குச் சென்று தகுந்த கல்லை தேர்ந்தெடுப்பது. கல்கோள் என்பது நன்னாளில் தெய்வமான அல்லது இறந்துபட்ட தியாகியின் உருவினைக் கல்லில் செதுக்குவது ஆகும். அங்ஙனம் உருவம் பொறிக்கப்பட்ட கல்லை நல்ல நீர் கொண்டு கழுவி தூய்மை செய்தலே நீர்படை ஆகும். நடுதல் என்பது கல்லை உரிய இடத்தில் நட்டு அதற்கு மயிற்பீலிகளையும், மாலைகளையும் சூட்டிச் சிறப்புச் செய்வதாகும். வாழ்த்தல் என்பது யாருக்காக கல் நடப்பட்டதோ அந்த வீரனுடைய திறனையும், புகழையும் வாழ்த்திப் பாடுவது ஆகும். கல் நடும் விழாவிற்கு வீரர்கள் மட்டுமன்றி மக்களும் வந்து மரியாதை செலுத்துவார்கள்.

## தமிழர் பண்பாட்டில் நடுகல்

பண்டையத் தமிழ் மக்களிடம் வேரூன்றி இருந்த ஒரு வழிபாடு நடுகல் வழிபாடு. இதனை தொல்காப்பியர் தன்னுடைய நூலில் தெளிவாக எடுத்து கூறியுள்ளார். போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த வீரர்களின் ஆவி சில நாட்களுக்கு உலகில் உலாவும் என்றும், சாவு சடங்குகள் கழிந்த பின்பு வேறு உலகிற்குச் செல்வதாகவும் பழந்தமிழர் நம்பியுள்ளனர். எனவே போருக்கு செல்லும் வீரர்கள் போர்க்களம் செல்லும் முன் நடுகற்களை வாழ்த்தி பலி கொடுத்து சென்றுள்ளனர். இதனால் வீரர்களின் நடுகல்லில் அடங்கியுள்ள ஆவி தங்களுடன் துணையாக வரும் என்று நம்பினர். இந்நடுகல் வழிபாடானது சங்ககாலத்திற்குப் பிறகு குடும்பத்தில் இறந்த முன்னோர்களுக்காக செய்யப்பட்டது.

பாலை நில மக்கள் தங்களது குலத்தொழிலான வழிப்பறி, கொள்ளையடித்தலுக்கு செல்லும் முன் ஒரு கல் நட்டு அதனடியில் கொற்றவைக்குக் குருதி பலி கொடுத்து கூத்தாடிய பின் தான் செல்வது வழக்கம் என கொற்றவை வழிபாட்டு நூல் குறிப்பிடுகின்றது.

போரில் இறந்த ஒரு வீரனுக்கு நடுகல் நட்டதை ஆவூர் மூலிங்கினார் புறநானூறு 261 அம் பாடலில் குறிப்பிடுகிறார்.

"வண்டுபட நறவின் தண்டா மண்டையொடு

வுரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம்" (Puliyur Kesigan, 2015)

இறந்த வீரனின் முற்றம் நீரற்ற ஆற்றிலே கிடக்கும் ஓடம் போல பொலிவிழந்து கிடப்பதாகவும் அவன் நடுகல்லாகி நின்கிறான் என்றும் கூறுகிறார்.

## நடுகற்குரியோர்

ஆநிரைகளைக் கவரும் வெட்சிப் போரிலும் அவற்றைப் பகைவர் கவர்ந்து செல்லாதவாறு தடுத்துக் காத்த கரந்தைப் போரிலும் விழுப்புண்பட்டு மாய்ந்த வீரர்களுக்கு அவர்களின் பெருமையைப் பிறர் அறியுமாறு நடுகல் நட்ட சிறப்பை பறநானூறு புலப்படுத்துகிறது. போரில் வீரமரணம் அடைந்த மறவர்களின் நடுகற்களுக்கே மயிற்பீலிச் சூட்டி வழிபடும் மரபும் இருந்ததை அகநானூறு

வீளை அம்பின் விழுத்தொடை மறவர்

நாள்ஆ உய்த்த நாம வெஞ்சுரத்து

நடை மெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்

கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்

என்று போரில் வீரமரணம் அடைந்த மறவர்களுக்கு நடுகல் அமைத்ததை சுட்டுகின்றது.

சங்கத் தமிழர் நாடுகாக்கும் பொருட்டு இன்னுயிரை நீத்த வீரர்களுக்கு கற்கள் நாட்டியுள்ளனர். அந்நடுகற்களின் மீது வீரர்களின் உருவங்களைப் பொறித்து அதற்கு கீழே அவர்களின் பெயர், பிறப்பு, இறப்பு செய்த வீரதீரச் செயல்கள் பற்றி எழுதியுள்ளனர்.

அணி மயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்

தினி நட் டனரே கல்லுங் கன்றொடு (Puliyur Kesigan, 2015)

என புறநானூறு மயிற்பீலிசூட்டி, மாண்ட வீரனின் பெயரை நடுகல்லில் பொறித்த சிறப்பினை எடுத்துக்கூறுகிறது. அதே தகவலை அகநானூறும் எடுத்துக்கூறுகிறது.

பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்

வேல் ஊன்று பகை

என்று கூறுகின்றது.

போரில் இறந்த மாவீரர்களுக்கு மட்டுமன்றி நன்முறையில் ஆட்சி புரிந்து மானங்கருதி வடக்கிலிருந்து உயிர்விடும் மன்னர்களுக்கும் நடுகல் நட்டு வழிபட்டு வந்தனர்.

"நனந்தலை உலகம் அரந்தை தூங்கக்

கெடுவில் நல்லிசை சூடி

நடுகல் ஆயினன் புரவலன்" (Puliyur Kesigan, 2010)

என்று கோப்பெருஞ்சோழனுக்கு நடுகல் நட்ட பாடல்கள் நமக்கு சான்றளிக்கின்றன.

பத்தினி பெண்டிற்கும் நடுகல் அமைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின் மூன்றாவது காண்டமான வஞ்சிக் காண்டத்தில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கல்நட்ட வரலாற்றினை சிறப்புற இளங்கோவடிகள் சித்தரிக்கின்றார். எனவே விழுப்புண்பட்டு உயிர் நீத்த மன்னர்களுக்கும், கற்பிற் சிறந்த மகளிர்க்கும், வடக்கிருந்து உயிர் நீத்த மன்னர்களுக்கும் கல் நட்டனர் என்பது தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நமக்குத் தெளிவாகின்றது. (J. டால்பின் ராஜா 2000).

சதிக்கல் எனப்படுவது கணவன் இறந்தவுடன் அந்த சிதையிலேயே உடன்கட்டை ஏறும் பெண்ணிற்கு வைக்கும் நடுகல்லாகும். ஆநிரைகளை மீட்டு வரும் வீரன் புலி, சிங்கம் போன்ற விலங்குகளுடன் சண்டையிட்டு ஊரை காத்த போது உயிர்நீத்த வீரனுக்கும் நடுகல் அமைத்துள்ளனர். இவ்வகை நடுகற்களில் வீரன் புலியோடு சண்டையிடுவது போல உருவப் பொறிப்பு காணப்படும்.

நிரை கவர்தல் சண்டையில் இறந்த வீரன், நிரை மீட்டல் சண்டையில் இறந்த வீரன், ஊரழிவைத் தடுத்து நிறுத்தி தன் உயிரை ஈந்த வீரன், வடக்கிருந்தோர், பத்தினி பெண்டிர் போன்றோருக்கு நடுகல் அமைக்கப்பட்டு சிறப்பு செய்யப்பட்டது.

## வழிபாடு செய்தல்

தமிழர் நடுகற்களை தெய்வமாக எண்ணி வழிபட்டு வந்தனர். பின்னால் அக்கல்லிற்குப் பலியும் செலுத்தி வந்தனர். நடுகல்லினை புனித நீர் கொண்டு நீராட்டி, அவற்றின் மீது மஞ்சள் பூசி, பூக்களை மாலையாக சூட்டி வழிபட்டனர். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு நடுகல் நட்டு கோயில் அமைத்து வழிபாடு செய்ததை சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இல்லடு கள்ளின் சில்குடிச்சீறூர்ப்

புடைநடு கல்லினாட் பலியூட்டி

நன்னீராட்டி நெய்ந்நறைக் கொளீஇய

மங்குன் மாப்புகை மறுகடன் கமழும் (Puliyur Kesigan, 2015)

என்று புறநானூற்றில் அறுவை வாணிகன் கூறும் போது இல்லங்களில் காய்ச்சிய கள்ளை குடிசையில் வாழும் மக்கள் தம் ஊரின் பக்கத்தில் நடப்பட்ட கல்லுக்கு விடியற்காலையில் நீராட்டி நெய்விளக்கேற்றி படையலை படைத்தனர் என்கிறார்.

நடுகல்லைத் தெய்வமாக வணங்கும் வண்ணம் அக்கல்லிற்கு மயில் தோகை அணிவித்துத் துடியை முடுக்கி செம்மறி ஆட்டின் குட்டியையும் பலிகொடுத்து வழிபாடு செய்திருக்கின்றனர். இதனை புறநானூறு

நடுகற் பீலி சூட்டி நாரரி

சிறுகலத் துகுப்புவங் கொள்வன் கொல்லநகல் (Puliyur Kesigan, 2015)

என்று கூறுகின்றது.

முடிவுரை

நடுகல் வழிபாட்டில் பழந்தமிழர் தமது முன்னோரின் வீரம், தியாகம், நற்செயல்களை போற்றி அவைகளை பின்பற்றும் பழக்கத்தினை கொண்டிருந்தனர் என்பதை நாம் அறிய முடிகின்றது. நடுகல்லை தெய்வமாக வணங்குவதன் மூலம் நல்லது நடக்கும் என்று அவர்கள் நம்பினர். தம் முன்னோர்களுக்கு நடுகல் வைத்ததன் மூலம் அவர்களை பெருமைப்படுத்தியுள்ளனர். நடுகல் மீது இறந்தோரின் பெயர் பொறித்து அவர்களின் சிறப்பினையும் பொறித்து வைத்திருந்ததன் மூலம் அவர்களின் புகழை உலகறிய செய்த பெருமை பண்டைய தமிழரையேச் சேரும். சிறு தெய்வ வழிபாட்டிற்கு முன்னோடியாக அன்று நடுகல் நடுகல் வழிபாடு நம் முன்னோரிடம் இருந்துள்ளது என்பதை புறநானூறு தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. சங்கத் தமிழர் வீரத்திற்கும், நாட்டுப் பற்றிற்கும் முக்கியத்துவம் அளித்ததோடு பத்தினி பெண்டிற்கும் நடுகல் அமைத்து அவர்களையும் சிறப்பு செய்ததையும் நாம் இதன் மூலம் அறிய முடிகின்றது.

## References

Puliyur Kesigan, (2010) Agananuru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

Puliyur Kesigan, (2015) Purananuru, Sri Senba Pathippagam, Chennai, India

Tamilannal, (2010) Tholkappiyam, Meenakchi Puthaga Nilayam, Madurai, India

Varadharasan, M, (1959) Thirukural Thelivurai, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Tirunelveli, India

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License

DOI: 10.34256/irjt21432

அதுமட்டுமின்றி, உயிருள்ள கலை நயத்தின் வெளிப்பாடாக வயதான மனிதன் குச்சி ஊன்றி, முதுகில் பிடித்து போடக்கூடிய கூடையும் சுமந்து கொண்டு நடந்து செல்கின்ற சிற்பமும் உயிருள்ள வடிவத்தையே காட்சிப்படுத்துகிறது. குட நம்பிமார்களின் சிற்பமும் அவர்கள் நீண்ட ஊன்ற உள்ள மூன்று பிரிவு உள்ள பூணூலும் போட்டு நடந்து வரும் காட்சியானது அக்கால மக்களின் பண்பாட்டினை கண்டறிந்து கொள்ள முடிகிறது.

ஒரு கையில் மணியும் மறு கையில் தீபாரதனை தட்டும் ஏந்திய போற்றிமார்களின் சிற்பங்களும் உள்ளன. மிகவும் வயது முதிர்ந்த ஒரு சாந்தி காரர் கையில் ஊன்றுகோல் மறுகையில் கிண்டியும் பிடித்தபடி அமைந்த சிற்பமும் தத்ரூபமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதுபோன்று சிற்பக்கலைஞர்கள் தங்கள் கலை நயத்தை வெளிப்படுத்தும் விதத்திற்கு சான்றாக பெண்ணின் 18 விதமான சிற்பங்களை நாம் திருவட்டார் கோவிலில் காண முடியும். அதாவது இரு கால்களையும் நீட்டிய கோலம், கால்கள் விரித்து முழங்கால் வரை மட்டும் ஆடை அணிந்து நிற்கும் பெண், மகப்பேறு நடத்தும் பெண்ணின் உருவம், பேற்றுநோவு உடன் குத்தியிருக்கும் பெண்ணின் வடிவம், கையில் வால் கண்ணாடியில் முகம் பார்க்கும் பெண், வாள் மற்றும் பரிசையும் ஏந்தி இருக்கும் பெண் போராளியின் உருவம், பந்தம் வீசி அந்த வெளிச்சத்தில் நடந்து செல்கின்ற பெண் என பல உருவங்கள் கண்கொள்ளாக் காட்சியாக பிரமிப்பை ஏற்படுத்துவனவாகவும் உள்ளன.

இது மட்டுமின்றி வசந்திய மேளகாரர்கள் நாட்டிய கலைஞர்கள் போன்றவர்களின் 12 சிற்பங்களும் உள்ளன. அதுபோல நாட்டிய மகளிர் சிற்பங்களும் உள்ளன. அதுபோல முகலாயப் படைவீரர்களின் சிற்பங்கள் மற்றும் மகுடி வாசிக்கும் பாம்பாட்டியின் சிற்பங்களும் கலைநயத்தை வெளிப்படுத்துவதாக உள்ளன.

## [illegible] சிற்பங்கள்

ஆழ்வார், நம்மாழ்வார்களின் சிற்பங்களும் கலைநயத்தை வெளிப்படுத்தும் பாங்கில் உள்ளன. பிரம்மா, இந்திரன், வியாக்கியபாதன், உக்கிரத்தாண்டவர், ஸ்ரீ ராமர், லட்சுமணன், பிரகலாதன், இரணியன் போன்றவர்களின் மர சிற்பங்களையும் கோவிலின் மேற்கூரையில் காணலாம். பலிக்கல் புரையில் கங்காளநாதன், பதஞ்சலி, தாண்டவர், சங்கு, நீடன், சரபம், கதால பைரவர் போன்ற சிற்பங்களும் உள்ளன.

## சிற்பங்களின் தற்போதைய நிலை

தற்போது பலிக்கல்புரை என்று கூறப்படும் சபா மண்டபத்தின் பக்கங்களில் காணப்படும் சிற்பங்கள் பலவும் சமூக விரோதிகளின் செயல்களால் நாசம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முடிவுரை

கோவில் சிற்பங்கள் அனைத்தும் பண்பாடு மற்றும் வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாக உள்ளன. சுருக்கமாக கூறினால் மனித வாழ்க்கையை ஆத்மிய பெருமையுடன் இணைத்து குறுகலான இடத்திற்குள் கலைக்களஞ்சியம் அமைத்தது போன்று காட்சி அளிக்கிறது. இவ்வமைப்பு திருவட்டார் கோவிலுக்கு தனியாக ஒரு பெருமையைக் கொடுப்பதாக அமைகிறது. கண்களால் கண்டு இன்புறத்தக்க வகையில் திருவட்டார் கோயில் கலை வடிவங்கள் காணப்படுகின்றன.

## References


Venkadasamy, S. (2003) Tamil Valartha Alagu Kalaikal, Vasantha Veliyedu, Chennai, India

Venkadasamy, S. (2006) Tamil Nun Kalaikal, Poompuhar Pathippagam, Chennai, India

DOI: 10.34256/irjt21432

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2020-2021**

## S.No:4

**Title of paper** : **Moontampalina Ilakiya varalarum Puthumai Sinthanaikalum**

**Name of journal** : Naveena Tamil Aaivu Panmugatamil Aaivithal

**Year of publication** : 2020

**ISSN number** : **2321-984X**

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/johey_care_list20240729175025.pdf

றப்பிதழ்
pecial Issue

hief Editor
r. M. Sadik Batcha

dvisory Editor
r. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jevaraman
Dr. A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. Pon. Kathiresan
Dr. S. Vignesh Ananth
Dr.M. Arunachalam
Dr. S. Bharathi Prakash



15-16 ஐப்பசி 2050
31st Oct- 01st Nov 2020

ISSN : 2321-984X


# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

Journal of

# Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)


Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal


சிறப்பிதழ் : இணையவழித் பன்னாட்டுக் கருத்தரங்கம்-2020
தமிழ்த்துறை
தொன்போஸ்கோ கல்லூரி,
ஏலகிரிமலை, தமிழ்நாடு, இந்தியா

# காலந்தோறும் தமிழ் இலக்கியங்களின் வரலாறும் புதுமைச் சிந்தனைகளும்

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
**Special Issue Editors**

முனைவர் அ. குமார்
தமிழ்த்துறைத்தலைவர்
தொன்போஸ்கோ கல்லூரி, ஏலகிரிமலை

திருமதி. வே. செல்வி
[illegible]


*Published by*

**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

11 பகுதி-1 Part -1

மற்றொன்று

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

(கலை & மனிதவியல்)

ஜனவரி - மார்ச்
ஏப்ரல் - ஜூன்
ஜூலை - செப்டம்பர்
அக்டோபர் - டிசம்பர்

Journal of

# CLASSICAL THAMIZH

*(A Quarterly International Multi lataral Thamizh Journal)*

January - March
April - June
July - September
October - December

ISSN:2321-0737

# மூன்றாம் பாலினஇலக்கிய வரலாறும் புதுமைச் சிந்தனைகளும்

முனைவர் ஜே.ஜி.ஜோணி ஜெபமலர்
தமிழ்த்துறைத் தலைவர்
முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம்.

ஆய்வுச்சுருக்கம்

தொல்காப்பியம் காலம் தொட்டே தமிழ் இலக்கியச் சொல்லாடல்களில் மூன்றாம் பாலினம் பற்றி கருத்து ஓடுவதைப்பார்க்கலாம். அரவாணிகள் குறித்த சிந்தனை இன்று உருவானதல்ல. அரவாணிகளின் யாசகத்தையும், சீற்றத்தையும், சைகைகளையும் பெரிதுபடுத்திப் பேசும் 'நாகரீக மனிதர்கள்' அவர்களது கண்ணாடிச் சிதறல்களான வாழ்வைப் பற்றி யோசிப்பது இல்லை. ஆனால் அண்மைக் காலமாக அரசின் நடவடிக்கைகளாலும் தொண்டு நிறுவனங்களின் கடின உழைப்பாலும், நீதிமன்றங்களின் மனிதநேயத் தீர்ப்புகளாலும் இலக்கிய படைப்புகளாலும் மூன்றாம் பாலினத்தவரின் வாழ்வில் ஒளி வீசத் தொடங்கி இருக்கிறது. தங்களை சக மனிதர்களாக மனித நேயத்துடனும் மாண்புடனும் நடத்தப்படுவதற்காகவே இச்சமூகம் பெரும் போராட்டங்களை நடத்தி இருக்கிறது. திருநங்கையர் வடமாநிலங்களில் தெய்வத்தின் பிறப்பாக நம்பப்படுகிறார்கள். தமிழ் பக்தி இலக்கியங்கள்தான் திருநங்கைகள் மீது கருணையுடன் கண்ணோட்டம் கொண்டுள்ளன. மாணிக்கவாசகரின் பல பாடல்களில் சிவபெருமானுக்கு இணையாகத் திருநங்கைகள் கொண்டாடப்படுகின்றனர். இன்றைக்கு பல்வேறு இலக்கியப் படைப்புகளும் கலைப்படைப்புகளும் மூன்றாம் பாலின இலக்கிய வரலாற்றில் பல புதுமைச் சிந்தனைகள் ஊடுருவிப் பரவ வழிவகுத்துள்ளன.

"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் தத்தமக்கிலவே
உயர்திணை மருங்கிய பால்
பிரிந்திசைக்கும்" என்பது தொல்காப்பியம்.

தொல்காப்பியர் காலம் தொட்டே தமிழ் இலக்கியச் சொல்லாடல்களில் மூன்றாம் பாலினம் பற்றிய கருத்து ஓடுவதைப் பார்க்கலாம். 'பிறப்பின் குற்றம்' என்று கருதப்பட்ட காலம் மலையேறிப் போய்விட்டது. இன்றைக்கு மூன்றாம் பாலினம் பற்றிய அறிவியல் பூர்வமான பார்வை அவர்களை இயல்பானவர்களாகக் கருத இடமளித்திருக்கிறது. அரவாணிகள் குறித்த சிந்தனை இன்று உருவானதல்ல. கிரேக்க ரோமானியத் தொன்மங்களில், டைரீசியஸின் புராணக் கதையில் ஆணாகவும் பெண்ணாகவும் மாறும் நிலை விவரிக்கப்படுகிறது.' இந்து மதத் தொன்மங்களிலும் இந்தகையக் கதைகள் உண்டு. பாற்கடல் கடைந்து அமுதம் எடுக்கும் போது விஷ்ணு மோகினி அவதாரமான கதையும், பெண்ணாக இருந்து ஆணாக மாறிய அம்பை சிகண்டியாக மாறி பீஷ்மரைக் கொன்ற கதையும், அர்த்த நாரீசுவரர் பற்றிய சித்தரிப்பும் பாலின மாற்றம் இயல்பான நிகழ்வுதான் என்பதைச் சுட்டிக் காட்டும் புராதன எடுத்துக்காட்டுகள் எனலாம். அரவாணிகளின் யாசகத்தையும், சீற்றத்தையும், சைகைகளையும், பெரிதுபடுத்திப் பேசும் 'நாகரிக மனிதர்கள்' அவர்களது கண்ணாடிச் சிதறல்களான வாழ்வைப் பற்றி யோசிப்பது இல்லை. ஆனால் அண்மைக் காலமாக அரசின் நடவடிக்கைகளாலும், தொண்டு நிறுவனங்களின் கடின உழைப்பாலும், நீதிமன்றங்களின் மனித நேயத் தீர்ப்புகளாலும், இலக்கியப் படைப்புகளாலும் மூன்றாம் பாலினத்தவரின் வாழ்வில் ஒளிவீசத் துவங்கி இருக்கிறது எனலாம். மூன்றாம் பாலினம் ஊடக

வெளிச்சம் படுவதற்கு முன்பிருந்த நிலைமை தற்போது மாறிவிட்டது. அவர்களைப் பற்றிய அணுகுமுறையில் பொதுமக்களிடம் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இக்கட்டுரையின் கண் மூன்றாம் பாலின இலக்கிய வரலாறும் புதுமைச் சிந்தனைகளும் குறித்து விரிவாய் காண்போம்.

மூன்றாம் பாலினம் - பெயர்க்காரணம்:

தங்களை சகமனிதர்களாக மனிதநேயத்துடனும் மாண்புடனும் நடத்தப்படுவதற்காகவே இச்சமூகம் பெரும் போராட்டங்களை நடத்தி இருக்கிறது. தமிழ்ச் சமூகம் பல்வேறு பெயரிட்டு காலம் காலமாக இவர்களைக் குறித்து வந்திருக்கிறது. என்றாலும் பெயரிலேயே ஓர் அரசியல் இருக்கிறது என்ற பின் நவீனத்துவக் கருத்தாக்கக் காலத்தில்,'எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் ரோஜா ரோஜாதான்' என்கிற மாதிரியான சமரச வாதம் எடுபடாது. கிருஷ்ணன் பெண் உருகொண்டு, அரவானை மணந்து ஒரு நாள் வாழ, மறுநாள் அரவான் பலியிடப்படுகிறான். அவள் தாலி இழந்து அரவாணி ஆகிறாள். இந்த நிகழ்வைக் கொண்டாடும், விழுப்புரம் கூவாகம் கூத்தாண்டவர் விழாவில் வைத்து ஒரு காவல்த்துறைத் தலைவர் 'அரவாணி' என்ற பெயரை முன்மொழிந்ததாகக் கூறப்படுகிறது.[1]தாலிப் பெருமையின் மகிமை கூறும் கதையை பெண்ணியவாதிகள் ஏற்கத் தயாரில்லை. நர்த்தகி நடராஜ் போன்றவர்கள் முன்மொழிந்த, மதிப்பிற்குரிய ஆண் பாலைக் குறிக்கும் 'திரு' என்ற சொல்லையும், பெண்மையின் நளினத்தைக் குறிக்கும் 'நங்கை' என்ற இரண்டையும் இணைத்து 'திருநங்கை' என்று பதம் புழக்கத்தில் உள்ளது. பல இழிவான பெயர்களில் மாற்றுப் பாலினத்தை அழைத்த போது, அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி, 2006-ல் அவர்களுக்கு 'திருநங்கை','திருநம்பி' எனப் பெயரிட்டுச் சட்டம் இயற்றினார். 2008-ம் ஆண்டு 'திருநங்கைகள் நலவாரியம்' அமைக்கப்பட்டது. அண்மைக் காலத்தில் சமூக நலத்துறை 'மூன்றாம் பாலினத்தவர்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. 'திருநங்கைகள்' என்ற வார்த்தையும்,'மூன்றாம் பாலினத்தவர்' என்ற வார்த்தையும் மாறி மாறி பயன்படுத்தப்படுவதால் குழப்பநிலை நீடிக்கிறது. மூன்றாம் பாலினம் திருநங்கைகளும் திருநம்பிகளும் என்றால் முதல் பாலினம் யார்? இரண்டாம்பாலினம் யார்? பாலினங்களை ஒன்று, இரண்டு, மூன்று, என்று தர வரிசைப்படுத்துபவர் யார்? எனச் சமூக ஆர்வலர்கள் குரல் எழுப்புகின்றனர். 'திருநங்கைகள்' என்பதை 'மூன்றாம் பாலினம்' என்று கூறுவதற்குப் பதிலாக 'மாற்றுப் பாலினம்' என்றோ,'திருநர்' என்றோ குறிப்பிடலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. இதற்கிடையே 'இடைப்பாலினம்' என்ற சொல்லும் புழக்கத்திற்கு வந்திருக்கிறது.

திருநங்கையர் வடமாநிலங்களில் தெய்வத்தின் பிறப்பாக நம்பப்படுகின்றனர். தமிழ்நாட்டில் அவர்களது பிறப்பு அவமானகரமானதாகக் கருதப்பட்ட காலம் மாறிவருகிறது. அறிவியலாளரின் கருத்துப்படி பாலினம் நிர்ணயிக்கும் குரோமோசோம்கள் எதிர்கொள்ளும் மாற்றங்களினால் மரபணு அடிப்படையில் இயல்பாகவே திருநங்கையர் பிறக்கின்றனர். மானுடவியலாளர்கள் சமூகச் சூழல்கள்தான் திருநங்கைகளை வார்த்தெடுக்கிறது என்கின்றனர். சித்தர்களில் மருத்துவ முன்னோடியான திருமூலரின் வாக்கு:

"குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம்அபானன் எதிர்க்கும்
குழலி அலியாதம் கொண்ட கால் ஒக்கிலே'-
(திருமந்திரம்-402)

மானுடவியலாளரான ஜி. மைக்கேல் பெலட்ஜ்,'பாலினம் எனும் சொல் நம்மைப் பொறுத்த வரையில் பண்பாட்டு வகையினங்கள், குறியீடுகள், நடைமுறைகள், நிறுவப்பட்ட ஏற்பாடுகள் ஆகியவற்றைச் சார்ந்து குறைந்தது பின்வரும் ஐந்து பால் அல்லது பாலின வகைமைகளை அமைக்கின்றது: (1). பெண்களும், பெண்ணியமும் (2) ஆண்களும்,ஆணியமும், (3) ஆண் பெண் பாலினம் புறத்தோற்றத்தில் பகுதிப் பெண்ணாகவும்,

ஏனை ...
[illegible]



பகுதி ஆணாகவும் உறுதியற்ற பால்/பாலினம் வாய்ந்தவர்கள்: மேலும் ஊடுபாலினத் தன்மையர்களாகவும் இருக்கலாம். அவர்கள் ஆணொருபாகி /மாதொருபாகன்களாக அமையலாம். ஓரளவில் பெண் அல்லது ஆண் பாலுறுப்புகளையோ, பாலினப் பான்மைகளையோ பெற்றிருக்கலாம் (4) பெயர் பாலினம்: அவர்கள் தம் நடைமுறைகளில் இயல்பு பால் வரம்புகளைக் கடந்த பெயர்பால் உறவினர் (5) நொதுமல் பாலினம்: இவர்கள் ஏனுக்குகளைப் (eunuch) போல பால், பாலினமற்றவர்கள்'' என்கிறார்.[3]

ஊடுபாலினக் குழந்தைகளையும், ஆண்களையும், பெண்களையும் பதிவு செய்யும் போது அவர்கள் வளர்ந்து தம்மை அடையாளப்படுத்தும் போது வேறுபட்ட பால் அல்லது பாலினத்தை அடையாளப்படுத்தலாம் என்னும் விழிப்புணர்வுடன் செய்தல் வேண்டும்.

தமிழ் இலக்கியத்தில் மூன்றாம் பாலினம்:

தமிழ் இலக்கியங்களில் இடைப்பாலின மக்களின் வரலாற்றையும், வாழ்வியலையும் இலக்கண நூல்கள், காப்பியங்கள், புராணங்கள், நிகண்டுகள் போன்ற பழம் பெரும் வடிவங்களில் காணலாம்.

'திவாகர நிகண்டு', திருநங்கைகளின் நடை, உடை, பாவனை பற்றி விளக்கமளிக்கிறது.

"பேடி இலக்கணம் பேசுங்கலை
நச்சுப் பேசலும் நல்லுரை ஓர்தலும்"
என்கிறது.

'சூடாமணி நிகண்டு','பெண்டகன்'– பெண் தன்மை மிக்கவன், பேடி – ஆண்தன்மையற்ற பெண்ணுருவம் மிக்கவன், நபுஞ்சகன் - பெண், ஆண் அல்லாதது, கண்டகன் - பால் உணர்வற்றவன் என்கிறது. 'பிங்கல நிகண்டு', ஆண் தன்மை மிக்க பெண்ணைப் 'பேடன்' என்கிறது. மகாபாரதத்திலும் 'சிகண்டி' என்ற கதாபாத்திரம் திருநங்கையாகச் சித்தரிக்கப்படுகிறது.

நன்னூல்,"ஆண்பேடு, பெண்பேடு இரண்டும் உயர்திணையில் இருந்தாலும் அஃறிணையை ஒத்திருக்கும்'' என்கிறது.

சங்க இலக்கியத்தில் அகநானூற்றில் "பேடிப்பெண் கொண்டு ஆடுகை கடுப்போ" என ஒரு வரி இருக்கிறது.

புறநானூறு "சிறப்பு இல் சிதடும், உறுப்பு அல் பிண்டமும்" என்று மாற்றுப் பாலியல் தன்மையை உடற்குறைபாடாகக் கூறுகிறது.

திருவள்ளுவர் மாற்றுப் பாலினம் பற்றிச் சுற்றி வளைத்து 614, 727 ஆகிய இரண்டு குறள்களில் குறிப்பிடுகிறார்.

நாலடியார் "வலியால் பிறன்மனை மேல் சென்றார் இம்மை அலியாகி ஆடியுண்டார்" என்கிறார்.

'மணிமேகலை' காப்பியத்தில் பேடி என்ற சொல் மலர்வனம் புக்க காதையில் 25வது வரியிலும், 125வது வரியிலும், 146வது வரியிலும் என மூன்று இடங்களில் இடம் சுட்டி பொருள் கொள்ளலாம். மணிமேகலை பாத்திரமே மறுபிறப்பில் ஆணாய் மாறுவதாக இக்காப்பியம் பதிவு செய்துள்ளது. ஆக மொத்தத்தில் பெண் ஆணாவதையும், ஆண் பெண்ணாவதையும் முதன் முதலில் இக்காப்பியமே பதிவு செய்துள்ளது.[4]

"மணிமேகலை காப்பியத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள மறுபிறப்புக் கொள்கையில் திருநம்பிகளும் பேசப்பட்டுள்ளனர். அத்தோடு திருநங்கைகள் வாழ்வியல் சார்ந்த செய்திகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பௌத்த சமயத்தை தழுவிய மன்னர்கள் தங்கள் அரண்மனைகளில் திருநங்கைகளை அங்கீகரித்து உள்ளனர். பௌத்த மதத்தில் மற்றொரு முக்கியமான கொள்கை தன்னுயிர்போல மன்னுயிர்களை நேசித்தலாகும். இக்கொள்கையின் படி திருநங்கையர் புறக்கணிக்கப் படாமல் அரவணைக்கப் பட்டுள்ளனர்"என்கிறார் கி. அய்யப்பன். தமிழ் மரபிலக்கியங்களில் பக்தி இலக்கியங்கள் திருநங்கைகள் மீது கருணையுடன் கண்ணோட்டம்

கொண்டுள்ளன. திருவாசகம் 'பெண் ஆண் அலி எனும் பெற்றியின் காண்க' என்கிறது. மாணிக்கவாசகரின் பல பாடல்களில் சிவபெருமானுக்கு இணையாகத் திருநங்கைகளும் கொண்டாடப்படுகின்றனர். பிற்கால இலக்கியங்களான பட்டினத்தார் பாடல்கள் மற்றும் தாயுமானவர் பாடல்களிலும் திருநங்கையரைப் பற்றிய புனைவு உயர்வாகவே உள்ளது.

தவத்திரு. தண்டபாணி சுவாமிகள்," என்ற எழுத்து அலி எழுத்து. அ்.து, இ்.து, எ்.து என்ற சுட்டுச் சொற்கள் அலிப்பால் சுட்டுகள்" என்று கூறி உள்ளார்.

சிறுகதை சித்தரிப்புகள்:

கரிசல் இலக்கியத்தின் முன்னோடியான கி. ராஜநாராயணனை நினைவு கூரும் போது எழுத்தாளர் நாறும்பூநாதன் ஒரு நிகழ்வைக் குறிப்பிடுகிறார்: "...ஜோதி விநாயகம் பேச ஆரம்பித்தார். நாமெல்லாம் ஒம்போதுன்னு கேலி பண்ணிப் பேசும் பரிதாபத்துக்குரிய அலிகளைப் பற்றி(அப்போது திருநங்கையர் என்ற சொற்பிரயோகம் அறிமுகம் ஆகவில்லை) நம்ம நைனா ஒரு கதை எழுதி இருக்கார்...'கோமதி' என்ற அந்தக்கதையில், ஆணாக அறியப்பட்ட கோமதி, ரகுபதி நாய்க்கர் வீட்டில் சமையல்காரனாக வேலை பார்க்கும் போது அவருடைய மகன் மேல் காதல் கொண்டதைப்பற்றி எழுதி இருப்பார்... தற்கால இலக்கியத்தில் இவர்களைப் பற்றி எல்லாம் எந்த படைப்பாளியும் கதை எழுதி இருப்பதாக தெரியவில்லை. 1964-ல் 'தீபம்' இதழில் வந்த நினைவு" என்று வரும் உரையாடல் நடந்தது. கிட்டத்தட்ட 38 வருடங்களுக்கு முன்னர் இந்த சிறுகதையில் திருநங்கைகளின் வாழ்வில் மிகவும் சிக்கலும் நுட்பமும் மிக்கதென்றும் பெண்களின் ஆதரவுதான் அவர்களுக்கு உளரீதியான ஊக்கத்தைத் தரும் என்றும் கி. ராஜநாராயணன் கூறி இருக்கிறார்.[5] இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் திருநங்கைகள் வாழ்வைப் பிரதிபலிக்கும் நிறைய சிறுகதைகள் பிறந்து விட்டன. சில திருநங்கைகளும் எழுத்தாளராக மாறி சிறுகதைகளைப் படைத்துள்ளனர்.

நாவல்களில் மாற்றுப் பாலினப் பார்வை:

அரவாணிகள் பற்றிய முதல் நாவல் அமரர் சு.சமுத்திரம் எழுதிய 'வாடாமல்லி' ஆகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் பேரையூரில் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த நார்முகமது தன் ஆணுடம்பில் குடியிருக்கும் பெண்தன்மையை சமுதாயம் ஏற்க மறுத்த போது சென்னைக்கு ஓடிப்போய் பால்மாற்று அறுவை சிகிச்சை செய்து 'நூரி' என்ற பெண்ணாகி திருமணம் செய்து பின்னர் சென்னையில் அனாதைக் குழந்தைகளுக்கான மையம் ஒன்றை நிகழ்த்தி வருவதை சு. சமுத்திரம் அழியாக் காவியமாக்கி உள்ளார். தமிழில் பால் பிறழ்வுகள் பற்றிப் பேசிய முதல் புதினம் என்பதனால் குறைபாடுகளை பெரிதாக்கி பார்க்க வெண்டாம் என்பது திறனாய்வாளர் கருத்து.

'மூன்றாம் பாலின் முகம்' என்ற நாவலை பிரியாபாபு எழுதி இருக்கிறார். தமிழின் முதல் திருநங்கை நாவலாசிரியை என்ற பெருமை பெற்றிருக்கிறார். தனது எழுத்துக்கு தூண்டுகோலாக இருந்தது. 'வாடாமல்லி' நாவல்தான் என்கிறார். "நான் ஒரு திருநங்கை என்று அறிந்த பின் குடும்பத்தினரால் ஒதுக்கப்பட்டேன். பிறகு வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. எனக்கு மட்டுமல்ல. என் போன்ற திருநங்கைகள் அனைவருக்கும் இதே நிலைதான்... அவர்களின் வலிகளை பதிவு செய்ய திருநங்கைகளின் சரிதமாக இந்நாவலை எழுதி இருக்கிறேன்" என்கிறார் பிரியாபாபு.

"அவன்-அது-அவள்" என்னும் நாவல் மூலம் அரவாணிகளின் வாழ்க்கை எவ்வளவு கொடுமையானது என உணர்த்தி உள்ளார். யெஸ். பாலபாரதி. ஆசிரியர் "அது" என ஆண் அடையாளத்தைக் குறிப்பிடுகிறார். அவனிடமுள்ள "அது" கழிக்கப்பட்டால் "அவள்" ஆகி விடுகிறாள் என்கிறார். அரவாணியை உயர்திணையாகவே காட்டி உள்ளார் யெஸ். பாலபாரதி. தமிழ், இந்தி, அரவாணி மொழி எனக் கையாண்டு நாவலைக் கொண்டு செல்கிறார். நாவலில் தமிழ்நாட்டை விட மும்பையில் அரவாணிகள் மதிக்கப்படுவதையும்,

மனிதராக நடத்தப்படுவதையும் சாட்சிப்படுத்தி இருக்கிறார். "எரிந்து கொண்டிருந்த எல்லா சோடியம் விளக்குகளும் பேருந்து நிலையத்தில் இருளை விரட்டும் முயற்சியில் இருந்தது" என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றோடு நாவல் துவங்கி, வாசகரின் சிந்தனையை ஆக்கப்பூர்வமாக கிளறி விடுகிறது எனலாம்.

எஸ்.ராமமகிருஷ்ணனின் 'தேசாந்திரி' நாவலும் கூவாகம் திருவிழா பற்றி பேசுகிறது.

**நிகழ்த்து கலைகளில் மிளிரும் இடைப்பாலினர்:**

பண்டைக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட கூத்துக்களில் திருநங்கைகள் ஆடும் கூத்துகள் இருந்திருக்கின்றன. அக்கூத்தினை மக்கள் மத்தியில் தனி அடையாளத்துடன் நடத்தி உள்ளனர். பழங்காலத்தில் திருநங்கைகளைப் பேடி என்று அழைத்திருக்கின்றனர். எனவே பேடிகள் ஆடிய கூத்து 'பேடிக்கூத்து' எனப் பெயர் பெற்றிருக்கிறது. அதனால்தான் மணிமேகலை,

"விராடன் பேரூர் விசயனாம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்கள்..."

என்கிறது.

கிராமப்புற கோயில்களில் 'மகுடாட்டம்' என்ற கலையை உயிர்ப்புடன் வைத்திருப்பதும் அரவாணிகள்தான்.

கோயம்புத்தூரிலும், கர்நாடகா மாநிலத்தில் நடந்த சர்வதேச நாடகத் திருவிழாவிலும் திருநங்கை ரேவதியின் தனிநபர் நாடகம் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. நாடகவியலாளர் அம்பையுடன் இணைந்து ரேவதி பல நாடக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

சென்னையில் உள்ள பிரிட்டிஷ் கவுன்சில் சார்பாக சினிமா தவிர்த்து மாற்றுக் கலைகளில் உள்ள கலைஞர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 'சார்லஸ் வாலேஸ்' என்ற நிதிநல்கை வழங்கப்படுகிறது. 2020-ஆம் ஆண்டுக்கான நிதி நல்கைமுதன்முதலாக மாற்றுப்பாலினத்தவரான 'லிவிங்ஸ்மைல்' வித்யாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. சிறந்த நாடகக்கலைஞராக வளர்ந்து வருகிறார் வித்யா.

பேராசிரியர்கள் குணசேகரன், மங்கை, மு. ராமசாமி போன்றோரின் நாடக முயற்சிகள் திருநங்கைகளைப் புரிந்து கொள்ளும் இசைவான சூழலை உருவாக்கி உள்ளன.

**திருநங்கையின் சுய சரிதைகள்:**

சமூகத்தில் சருகு வாழ்க்கை வாழும் திருநங்கைகளுக்கு பச்சையம் ஊட்டிய படைப்புகள் என்றால் திருநங்கைகளின் வாழ்க்கைக் கதைகள்தான். அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை முதன்முதலாகப் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்த புத்தகம் "உணர்வும் உருவமும்". அரவாணிகளின் வாழ்க்கைக் கதைகள் நிறைந்திருக்கும் இந்தப் புத்தகம் 2005-ல் வெளியானது. இந்நூலின் தொகுப்பாசிரியரான ரேவதி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த திருநங்கைகளைச் சந்தித்து அவர்களது வாழ்வியலைப் பதிவாக்கி இருக்கிறார்.

திருநங்கையரின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடி வரும் ரேவதி தன்னுடைய சுயசரிதையை ஆங்கிலத்தில் 'எ ட்ருத் எபவுட்மீ' என்னும் பெயரில் 2008-ல் பதிப்பித்தார்.அது தமிழில் 'வெள்ளைமொழி' எனும் பெயரில் 2012-ல் வெளிவந்தது. தொடர்ந்து தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளிலும் வெளியானது. இது பல பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டத்திலும் இடம் பெற்றுள்ளது. மாற்றுப் பாலினத்தவர்களான திருநம்பிகளைப் பற்றிய புரிதல் சமூகத்தில் பரவலாக இல்லாமல் இருப்பதை உணர்ந்த ரேவதி அவர்களை குறித்த ஆவணங்களைத் தொகுத்து 'லைஃப் இன் ட்ரான்ஸ் ஆக்டிவிசம்' என்ற நூலை வடிவமைத்து உள்ளார். இந்த ஆவணத் தொகுப்பு நந்தினி முரளி மொழிப் பெயர்ப்பில் தமிழிலும் உருவாகி உள்ளது.

"எங்களுக்கு வேண்டியதெல்லாம் ஒன்றுதான் சட்டப்பூர்வமான அங்கீகாரம். சமூக இழிவுகளிலிருந்து பாதுகாப்பைத் தருவதோடு

பொது இடங்களிலும் இயல்பாக நடமாடவும் இது உதவும். ஏன் அரசாங்கங்கள் இதனைச் சிந்திப்பது இல்லை? திருநங்கைகளின் பிறப்பையும் இருப்பையும் தவிர்க்க முடியாது என்னும் போது அவர்களுக்கான பால்மாற்று அறுவைச் சிகிச்சையை ஏன் சட்டப்பூர்வமாக்கக் கூடாது? எத்தனையோ தேசங்களில் நடைமுறையில் இருப்பதுதான்"[6] என்ற குமுறலோடு எழுதிய 'லிவிங்ஸ்மைல்' வித்யாவின் வாழ்க்கை வரலாறு தமிழ் திருநங்கையர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை.

இடைப்பாலின குழந்தைகளுக்கான தாலாட்டு:

இடைப்பாலின குழந்தைகளுக்கான சிறப்பு தாலாட்டுப் பாடல் ஒன்றை உருவாக்கியுள்ளார் கேரளத்தின் முதல் திருநங்கை கவிஞர் விஜயராஜா மல்லிகா. "ஆண் அல்ல... பெண் அல்ல.... கண்மணி நீ.... என் தேன்மணியல்லோ.... தேன்மணி" எனத்துவங்கும் அந்த மலையாளப்பாடலில் "ஷாபமல்லா... பாபமல்லா... ஓமானே, நீ என்ட ஜீவிதத்தில் வந்நுதிச்ச பாக்யதாரம்" என்பதற்கு "சாபமோ பாவமோ அல்ல, நீ என் அதிர்ஷ்ட நட்சத்திரம்" என்பது பொருள்.[7]

இது சமூக மாற்றத்துக்கான முயற்சி. இந்தக் கவிதையை நிலம்பூர் சுனில்குமார் இசையமைக்க, ஷினி அவந்திகா பாடியிருக்கிறார் டாக்டர் சந்தியா மோகினியாட்டத்தின் வழியாக இந்த ஐந்து நிமிடப் பாடலுக்கு உயிரூட்டி இருக்கிறார். இணையதளத்தில் பெருந்தொற்றாகி வருகிறது இப்பாடல். மலையாளத்திலிருந்து தமிழில் பத்மகுமார் பரமேஸ்வரன் மொழிபெயர்த்துள்ளார். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் 'ரமணன்' என்ற பெரும் வெற்றி பெற்ற மலையாளத் திரைப்படத்தில் பாடல்களைப்பாடிய புகழ்பெற்ற பின்னணிப்பாடகி கரிம்புழா ராதா இந்தத் தாலாட்டின் முக்கியத்துவம் கருதி, அதனை தமிழில் இசையமைத்துப் பாடியுள்ளார். இந்த நிகழ்வு திருநங்கையர் வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதி உள்ளது எனலாம்.

திருநங்கையர் பற்றி பிற வெளியீடுகள்:

"சமூக வரலாற்றில் அரவாணிகள்" என்கிற 50 ஆய்வாளர்கள் எழுதியக் கட்டுரைத் தொகுப்பை வாசித்தேன். முனைவர்.கி. அய்யப்பன் வெளியிட்டுள்ளார். பதிப்பாளர்கள் முகிலை இராசபாண்டியன், ஜே.ஆர். இலட்சுமி, கெ. இரவி,சி. இராமச்சந்திரன் ஆகியோர் விசாலெட்சுமி பதிப்பகம் மூலம் வெளியிட்டுள்ள முக்கியத்துவமான புத்தகம் இது. முனைவர். அய்யப்பன் ஒரு சிறந்த பயன்மிக்க நூலைக் கொண்டுவந்தமைக்காகப் போற்றப்பட வேண்டியவர்" என்று பிரபஞ்சன் மனம் திறந்துபாராட்டிய நூல் முக்கியமானது. ஏர்.மகாராசன் தொகுத்த "அரவாணிகள்: உடலியல், உளவியல், வாழ்வியல்" என்ற நூலும் அரவாணிகள் பற்றிய தமிழர்களின் பார்வை மேம்பட உதவி இருக்கிறது. பிரியாபாபு 'அரவாணிகளின் சமூக வரைவியல்' என்ற நூலும் 'தமிழகத்தில் திருநங்கையர் வழக்காறுகள்' என்ற ஆவணப்படமும் உருவாக்கி இருக்கிறார். 'டிரான்ஸ் மீடியா' என்ற யூ-டியூப் சேனலையும் நடத்தி வருகிறார். இந்தியாவிலேயே முதல் முறையாக திருநங்கையருக்கான ஆவண மையத்தை மதுரையில் நடத்தி வருகிறார் 'லிவிங்ஸ்மைல்' வித்யாவின் 'மரணம் மட்டுமா மரணம்' 'மெல்ல விலகும் பனித்திரை' ஆகிய நூல்களும் முக்கியமானவை.திருநங்கை ரதி புனிதவதியார் 'பாதை - மூன்றாம் பாலினத்தின் பயணம்' என்ற நூலை எழுதி உள்ளார். மூன்றாம் பாலினம் பற்றிய, தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா கொண்டு வந்த திருநங்கை உரிமை மசோதா நிறைவேற்றப்பட்ட பின், திருநங்கையரின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

முடிவுரை:

இக்கட்டுரை மூலம்திருநங்கைளின் சமூக நிலை, எதிர்கொள்ளும் பிரச்சனைகள்,தேவைகள், ஏனையோர் அவர்பால் காட்டவேண்டிய பரிவு, அவர்தம் தனித்திறமை முதலியன எங்ஙனம் புதுமைச் சிந்தனைகளால் பொலிவு பெறுகின்றன

என்பது விவரிக்கப்பட்டுள்ளது. பெண் என்பது ஒரு பாலினம், ஆண் என்பது வேறொரு பாலினம், அரவாணி என்பது மூன்றாம் பாலினம் எனக் கொள்ளலாம். அரவாணிகள் குறித்து அறிந்து கொள்ள நிறைய இருக்கின்றன. அவர்களைப் பற்றிய தரவுகளை அவர்களே முன்மொழிகின்ற போக்கு தற்போது தலையெடுத்திருக்கிறது. அத்தகைய தரவுகளின் வலிமையில்தான் இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது. தங்களின் வாழ்வாதாரத்தை சற்றேனும் சம்பாதித்துக் கொள்ளவும், துயரம் மறந்து சிறிது இளைப்பாறிக் கொள்ளவும் வேண்டி பிச்சை எடுத்தல், பாலியல் தொழில் போன்றவற்றை அரவாணிகள் மேற்கொள்கின்றனர். அதையும் தாண்டி, அவர்களிடம் இருக்கின்ற தனித்துவமான மொழி, இறை வழிபாடு, கலை ஆர்வம், எழுத்தாளுமை, சமூக சேவை போன்றவற்றை குறிப்பிட்ட அளவில் கட்டிக்காட்ட முடிந்திருக்கின்றது. சமூகத்தில் அரவாணிகளைப் பற்றி நிலவுகிற அரைகுறை மதிப்பீடுகளின் மூலம் உற்பத்தி ஆகியுள்ள பொதுப்புத்தியின் முரண்களைக் களைந்து நேர்மையும், நேயமும் கொண்ட பார்வையுடன் பொதுச் சமூகம் மூன்றாம் பாலினத்தவரை எதிர்கொள்ள இக்கட்டுரை விசாலமான பாதை அமைத்துக் கொடுக்க முனைந்துள்ளது. இளம் கவிஞரான பாரதி கண்ணம்மாவின் 'அஃறிணையின் ஆதங்கம்' என்றகவிதை வரிகளோடுகட்டுரை முடிவடைவது பொருத்தமாகிறது.

"தோல்வியடைந்த தேர்வுகளாய்
திரிந்து போன அணுக்கள்
மூன்றாம் பாலினம் - நாங்கள்
ஆறறிவு உற்ற பொதும்
அஃறிணையாய் உலவும் - மஞ்சள் நிலவுகள்
ஈர்க்க வில்லை எவரையும்
கைதட்டிக் கரைந்தாலும்
சில்லரைகள் சேருவதில்லை
ஒரு வேளை சோற்றுக்கும்
தூற்றிடும் ஊருக்குள்ளே
தேரிந்தே தொலைந்து போனோம்
கூடில்லா குருவிகளாய்...."

அடிக்குறிப்புகள்

1. அ.மங்கை,'அரவாணிகளும், மனிதர்களே....', பக்:16,' நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை.

2. சு.ம. ஜெயசீலன்,'திருநங்கைகள்: வாழிவியல், இறையியல்', 2010, பக்:26 வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.

3. விக்கிப்பீடியா.'. வய.றமைநிநனயை.ழசப.'. 'மூன்றாம் பால்'பக்:2.

4. கி. அய்யப்பன்,'மணிமேகலையில் திருனர்', பிப்ரவரி 2016,'உங்கள் நூலகம்', சென்னை.

5. இரா. நாறும்பூநாதன்,'கி.ரா-98', பக்:5, செம்மலர் செப்டம்பர் 2020.

6. 'லிவிங் ஸ்மைல்' வித்யா,'ஒரு திருநங்கையின் உலுக்கியெடுக்கும் வாழ்க்கை அனுபவங்கள், நான் சரவணன் வித்யா 2007 பக்:212-213, கிழக்கு பதிப்பகம், சென்னை.

7. என். சுவாமிநாதன்,'இந்து தமிழ்திசை', பக்:12, செப்டம்பர்4, 2020, சென்னை.

♦♦♦

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2020-2021**

## S.No:5

**Title of paper** : **Sadankugal Nampikaikal**

**Name of journal** : Naveena Tamil Aaivu Panmugatamil Aaivithal

**Year of publication** : 2020

**ISSN number** : **2321-984X**

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/lally_ugc20240729175349.pdf

Special Issue

Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr. A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. Pon. Kathiresan
Dr. S. Vignesh Ananth
Dr.M. Arunachalam
Dr. S. Bharathi Prakash

15-16 ஐப்பசி 2050
31st Oct- 01st Nov 2020

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

Journal of

# Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : இணையவழிக் பன்னாட்டுக் கருத்தரங்கம்-2020
தமிழ்த்துறை
தொன்போஸ்கோ கல்லூரி,
ஏலகிரிமலை, தமிழ்நாடு, இந்தியா

# காலந்தோறும் தமிழ் இலக்கியங்களின் வரலாறும் புதுமைச் சிந்தனைகளும்

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
**Special Issue Editors**

முனைவர் அ. குமார்
தமிழ்த்துறைத்தலைவர்
தொன்போஸ்கோ கல்லூரி, ஏலகிரிமலை

திருமதி. வே. செல்வி
தமிழ்த்துறைத்தலைவர்
இதயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
புதுப்பாளையம்

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

11 பகுதி-1
Part -1

14. காலந்தோறும் தூது இலக்கியத்தின் வளர்ச்சியும் புதுமையும் 117
முனைவர் கோ. கவிதா
15. சடங்குகள் - நம்பிக்கைகள் 124
முனைவர் ஜா.லாலி ஏதேஸ்
16. சூர்யகாந்தனின் செம்மண் இலக்கியப் படைப்புகளும் விளிம்புநிலை மனிதர்களும் 131
முனைவர் நா. குமாரி & கு. நித்தியா
17. ஆசாரக்கோவை உணர்த்தும் மருத்துவச் சிந்தனையும் தற்கால நடைமுறையும் 145
க.சசிகலா
18. சமூகத்தில் பெண்ணியத்தைப் பற்றிய புதுமைச் சிந்தனைகள் 153
ஜெ.கீதா
19. நற்றிணையில் வினை எச்சப்பொருள் 162
இர.கீதா
20. குறுந்தொகையும் உவமைகள் குறித்த புதுமைச்சிந்தனைகளும் 168
இரா.கோமதி
21. நவீன நாடகத்தின் வளர்ச்சி 178
முனைவர் க. கோவிந்தராஜி
22. தொல்காப்பிய உரை மரபில் பூங்கா செய்த புதுமை 185
முனைவர் ஹெப்சி ரோஸ் மேரி. அ
23. அறஇலக்கியத்தில் மருந்தியல் சிந்தனைகள் 193
முனைவர் இரா.கீதாரு & மா.ஜனகர்
24. பாடல் அமைப்புமுறையில் தொகையும் - பாட்டும் 200
ஜா.ஜாஸ்மின் ஜெபா & முனைவர் ஜா.லாலி ஏதேஸ்
25. ஈழத்து மக்களின் புலம்பெயர் வாழ்க்கை 207
ப. ஜீன்றோஸ்
26. சமூக கட்டமைப்பில் அம்பை 211
தே.ஜீவிதா
27. திருவாசகத்தில் மும்மலங்கள் 218
மா.ஜெயக்குமார்
28. தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் 225
க.ஜெயலட்சுமி
29. இரட்டைக் காப்பியங்கள் காட்டும் [illegible]சியல் 233
T.N. ஜெயந்தி & முனைவர் [illegible]ா. சாந்தி



30. மூன்றாம் பாலினஇலக்கிய வரலாறும் புதுமைச் சிந்தனைகளும் 242
முனைவர் ஜே.ஜி.ஜோனி ஜெபமலர்
31. தமிழ் மலையாள வடமொழிகளில் பிரமாண்ட புராணம் ஓர் ஆய்வு 253
முனைவர் காமராஜ் .ச
32. ஒப்பாரிப் பாடல்களில் பெண் உளவியல் சிக்கல்கள் 262
பெ.கண்ணதாசன்
34. சங்கத் தமிழர்களின் அறம் குறித்த வலியுறுத்தல்கள் 271
முனைவர் சா.கருணாகரன்
35. பாரதியாரின் படைப்புகளில் புதுமைச் சிந்தனைகள் 280
திருமதி. ச.கவிதா
36. திருநங்கை என்றொரு பாலினம் 285
செ. கிளாறா டெல்பின் ஜடா & முனைவர் நா. ரா. ஷிபஜா
37. பாரதி கண்ட அக்கினிக் குஞ்சு 294
நா.கிருஷ்ணராஜ்
38. விவேக சிந்தாமணியில் புதுமைச்சிந்தனைகள் 301
முனைவர் ப.கோடித்துரை
39. கூத்து எழுத்துப் பிரதிகளின் வளர்ச்சிப்போக்கும் அவற்றின் பாதுகாப்பும் 309
கிஸ்ணவேணி விவானந்தராசா
40. சங்க இலக்கியத்தில் மகட்போக்கியத் தாய்க்கூற்றுப் பாடல்கள்: கட்டமைப்பும் ஆய்வுத் தேவையும் 320
முனைவர் பி. பாலசுப்பிரமணியன்
41. நாலடியாரில் அறம் பற்றிய சிந்தனைகள் 329
த.லதா
42. முல்லைப்பாட்டில் பழந்தமிழர் வாழ்வியல் கூறுகள் 337
க.லதா & முனைவர் கோ. சாந்தி
43. சங்க இலக்கியத்தில் பெண்கள் 345
ஏ.மா.கவிதா
44. PATRIARCHY AND WOMEN'S SUBORDINATION IN THE HISTORY OF CLASSICAL TAMIL AND SANSKRIT LITERATURE: A SELECT STUDY 352
Manish Kumar
45. குமரி மாவட்ட கடற்கரையின் இயற்கை அரண்களான மணற்குன்றுகள் சிதைவினால் ஏற்படும் பாதிப்புகள் 360
ரா. மேரி ஜான்சி & முனைவர் ஏ. ராணி

## சடங்குகள் - நம்பிக்கைகள்

முனைவர்.ஜா.லாலி ஏ...
உதவிப்பேராசி...
தமிழ்த்...
முஸ்லிம் கலைக்கல்...
திருவிதாங்கோ...

**முன்னுரை:**

வாழ்வியலின் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று சட... மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை ஏதாவது ஒரு சட... செய்து மன அமைதி பெறுகிறான். மனிதன் விடா... இச்சடங்குகளைச் செய்வதால் அவனை ஒரு 'சடங்குப் பிர...' என அழைப்பதுண்டு. கடவுளரிடம் உள்ள அச்சமும்,முன்னோ... வழக்கத்தை மீறாமலும் நடந்து கொண்டால் த... வாழ்க்கைவசதியானதாக, கவலையற்றதாகஅமையும் எ... நம்பிக்கையும்சேர்ந்து சடங்குகளை விடாமல்செய்ய மக்க... தூண்டுகின்றன. எனவே தனி வாழ்விலும், பொதுவாழ்வி... பல்வேறு நிகழ்ச்சிகள் சடங்குகளால் அமைகின்றன. சடங்கு... சாதி, சமயம், இனத்திற்குத் தகுந்தபடி வேறுபடுகின்றன.

**சடங்குகளின் தொடக்கம்:**

இயற்கையின் ஓரங்காமாகத் திகழ்ந்த மனித இ... ஆரம்பத்தில் இயற்கையோடு இடையீடற்றப் போராட்டத்தை நிகழ்... கொண்டே இருந்தது. இயற்கையிலிருந்து கிடைத்த பொருட்... தன்னுடைய அன்றாடத் தேவைகளுக்காக பயன்படுத்தி வந்த மனி... இனத்துக்கு இயற்கையைத் தன்னுடையக் கட்டுப்பாட்டுக்... கொண்டுவருவது பெரும் சவாலாக இருந்தது. இயற்கை... எவ்வாறு அணுகுவது, எவ்வாறு இயற்கையைப் புரிந்துகொ... எப்படி அதனைக் கற்றுக்கொள்வது என்பதில் மனித இனம் ...



"....... அதீத சக்திகளைக் தமக்குதவும் பொருட்டு ...திரத்தைப் பயன்படுத்தல், வழிபாடு செய்தல், வேண்டிக் ...ளுதல் முதலியவற்றை நிகழ்த்தினான். புறப்பொருளைத் தன் ...யப்படுத்துவதற்காக மந்திரமும் சமயமும் பயன்படுத்தப்பட்டன. ...வின் சிக்கலைத் தீர்ப்பதற்கும் பதற்றத்தைத் தவிர்க்கவும் இவை ...யன்பட்டன. இவ்விரண்டும் - சமயமும், மந்திரமும் ...ங்கியவையாகத் தோன்றுகின்றன......." [1] என்று டி.என். மஜீம்தார் ...றிப்பிடுவதாக கே.பழனிவேலு தன்னுடைய நூல் ஒன்றில் கூறுகிறார்

இயற்கை சக்திகளுக்கு, இயற்கையை மீறிய சக்திகளுககு ... சடங்குகளையும், பரிகாரங்களையும் செய்வதன் வழியாக ...வற்றைத் தனக்கு உதவிட வைக்க முடியும் என்று பழஞ்சமூகம் ...பியது. அகநானூற்றில் இடம்பெற்றுள்ள பாடல் இவ்வாறு ...ழ்த்தப்பட்டச் சடங்கினைக் குறித்து விரிவாகப் பேசுகிறது. காதல் ...ப்பட்டதன் காரணமாக தலைவியின் உடல் நிறமாற்றத்திற்கு ...ளாகிறது. தலைவியின் உடல் நிறம் மாறியிருப்பதைக் கண்ணுற்ற ... தெய்வத்துக்குச் சடங்குப் பரிகாரம் செய்கிறாள்.

"...ள்ளும் கண்ணியும் கையுறையாக
...லைக்கோட்டு வெள்ளை நால் செவிக் கிடா அய்
...லைத்துறைக் கடவுட்கு உளப்பட்ட ஓச்ச"[2]

என்று அப்பாடல் அமைகிறது. கடவுளுக்கு சடங்கில் ...டைக்கப்பட்டதாக கள், மாலை இவற்றுடன் விலங்குப்பலி ...ழ்த்தப்பட்டதையும் இப்பாடல் குறிப்பிடுகிறது.

இத்தகைய சடங்குகளுக்குள் நிகழ்ந்த மற்றொரு கூறு ...வனைச் செயல்பாடு (IMI TAT10N). இந்தப் பாவனைச் ...செயல்பாட்டில் தனி மனிதனும் ஈடுபட்டான், குழுவும் ஈடுபட்டது. ...வாக இயற்கையின் போக்கில் நிகழந்தேறக் கூடியவற்றை ...த் தன்மையுடையதாக நினைத்து சிலவிதமான கட்டளைகள் ...ழியாக அவற்றைத் தனக்குக் கட்டுப்படுத்திட நினைக்கும் ...ங்கியலே பாவனைச் செயல்பாடாகும். இத்தகைய பாவனைச் ...செயல்பாடுகளின் வழியாக அவற்றை நிஜவாழ்வில் உண்மைப்படுத்த ...முடியும் என்று மனித மனம் நம்பியது. பாவனைச்செயல்பாடு பற்றி ...றிக்கும் நாட்டார் வழ... ...ற்றியல் அறிஞர். இ. முத்தையா,

கையாண்டனர். இவ்வழிமுறையைப் போலச்செய்தல் (IMITATION) அல்லது 'பாவனை மெய்ப்பாடு'[3] என அழைக்கலாம்" என்று குறிப்பிடுகிறார்.

சடங்கு நிறைவேற்றம், சடங்கில் இடம் பெறும் பலிபொருள்கள், இவற்றிற்கும் தெய்வ இணைப்புக்கும் இடையில் 'மந்திரம்' என்பது செயல்படுகிறது. இம்மந்திரங்கள் இயற்கையின் சில கட்டளைகளைப் பிறப்பிக்கும் சடங்கியலுடன் தோற்றம் பெற்றிருக்கலாம் என்று தெரிகிறது.

மந்திரம் என்னும், "இவ்வொலிக்குறிப்பு சொற்களிலே இயற்கையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக நம்பப்பட்டது. சடங்குடன் இணைந்திருந்த இவ்வொலிக் குறிப்புகள் சடங்கிலிருந்து பிரிந்த நிலையிலும் முக்கியத்துவமுடையனவாக, சக்தியைப் பொதிந்து வைத்துள்ளவையாக நம்பப்பட்டன. இம்மந்திரங்கள் திரும்பத்திரும்ப ஒலிக்கப்பட வேண்டியவை என்பதனால் ஓர் இசைத் தன்மையுடனவே உண்டாக்கப் பெற்றுள்ளன"[4] என்று மந்திரத்தின் நிலையினைக் குறிப்பிடுகிறார். கே.பழனிவேலு. மந்திரத்தின் மொழி வெளிப்படைத் தன்மை அற்றதாய் பூடகமான மொழியினைக் கொண்டு அமைந்திருக்கும். பெரும்நிலையில் குறியீட்டுச் சொற்களே மந்திரத்தில் இடம் பெற்றிருக்கும் இந்த மந்திரச் சொற்களை வாழ்த்துதலுடனும், கட்டளையிடுதலுடனும் தொடர்புடையவை என்று வகைப்படுத்த முடியும்.

"மந்திர மொழிகள் முற்றும் விளங்கும் சொற்றொடர்களால் அமையா, பல சொற்களின் முன்னெழுத்துக் கட்டாகவோ, மந்திர ஆற்றல் வாய்ந்த இன்னின்னவை எனத் தெரிந்தெடுக்கப்பட்ட எழுத்துக்களின் கூட்டொலியாகவோ இருக்கும்"[5] என்று மந்திரத்தில் பயன்படுத்தப்படும் மொழியின் தன்மையை இரா. மதிவாணன் குறிப்பிடுவதாக கே. பழனிவேலு கூறுகிறார்.

மந்திரத்தின் தன்மையின் அதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறும் தொல்காப்பியம்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழிதானே மந்திரம் என்ப"[6]

என்று குறிப்பிடுகிறது.



...அமைப்பு ஒன்று வலுவாக நிலைப்பட்டு சமயங்களும் ...லாக்கான ஒன்றாக மாறிய நிலையில் சடங்குகளில் பயன்படுத்தப்பட்ட மந்திரங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கின்றன

## சடங்கு —விளக்கம்

சடங்கென்பது நடைமுறையில் நிர்ணயிக்கப்பட்ட விரிவான சிந்தைகளின் வடிவமாகும். இது தனிமனிதனின் சுயமான ...கமாகவோ, பாண்பாட்டினுடைய தனிச்சிறப்புக் கூறாகவோ அமையும், பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றிச் சடங்குகளிலே பல்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன.

சடங்கு என்பது வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாக கொண்டது. சடங்கு என்பதற்குக் 'கிரியை' 'மதத்தொடர்பானச் செய்கை' என்று பொருள் கூறும் செந்தமிழகராதி. சடங்குகளை வழிபாட்டுச் செயல்முறை என்றும் வரையறை செய்யலாம். 'வரையறுக்கப்பட்ட விரிவான செயல்பாடுகள் தனிமனிதனின் கண்டுப்பிடிப்பாக முதலில் தோன்றி பின்னர் சமுதாயத்தில் சடங்காக மாறுகின்றது'.என எட்வினும், சொல்லிங்மனும் கூறுவர். இவை சாத்திர விதி பற்றியும் வழக்கம் பற்றியும் அமையும். இவற்றை 'மரபு வழி நிகழ்வுகள்' எனவும் குறிப்பிடலாம்.'ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குள்நடைபெறும் உள் இணைப்புள்ள மரபுவழி நிகழ்வுகளே சடங்குகளாகும். என்று பில்ஸ் இரால்ப் குறிப்பிடுகின்றார். இச்சடங்குகள் மக்களால் தொடர்ந்து காலங்காலமாக பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளை அடைந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

## சடங்குகளின் நோக்கம்

மக்களால் இச்சடங்குகள் பல நோக்கங்களுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. சடங்குகளில்,

1. நல்வாழ்க்கை நல்கும் என்னும் நம்பிக்கை,
2. நற்பெயர் காக்கும் என்னும் நம்பிக்கை,
3. வாழ்க்கைக்கு அர்த்தம் தரும் என்னும் நம்பிக்கை

என்பன இருக்கின்றன. சடங்குகள் மனித வாழ்வுக்குச் சலிப்புற்ற நிலையில் ஒரு வேகத்தையும், அர்த்தம் இழந்த நிலையில் ஓர் ...

ல் நடந்து கொண்டால்தான் வாழ்க்கை வசதியானதா லயில்லாமல் அமையும் என்ற நம்பிக்கையும் சேர்ந் தகளைச் செய்ய மக்களைத் துண்டுகின்றன' என் பிடுகிறார். வார்த்தைகளால் வடிவம் கொடுக்க முடியா மைகள் சடங்குகளில் உணர்வு பூர்வமா ப்படுத்தப்படுகின்றன. மக்கள் இச்சடங்குகளைப் பின்பற் ழியாய்க்காத்தும் வருகின்றனர். சடங்குகள் காக்கப்படுவ ம் யாதெனில் அவைகள் அதிர்ஷ்டத்தைக் காக்கின்றன என் ரகோவால் கூறுகின்றார். மனிதனுக்கு வாழ்வில் நம்பிக்கையு தையும் நல்கும் ஒன்றாகச் சடங்குகள் விளங்குகின்றன.

## ்கை வட்டச் சடங்குகள்

மனிதன் கருவுயிர்ப்பது முதல் இறப்பு வரையில் பல ங்களைக் கடக்கின்றான். ஒவ்வொரு கட்டத்தில் புகும்போதும் நிகழ்ச்சியின் சிறப்பையும் பண்பையும் நினைவூட்டுவதற்காக றப்புச் செயல்கள் செய்யுமாறு ஒவ்வொரு இனத்தாரும் விதிகள் ித்தியுள்ளனர். இச்சிறப்பு செயல்களைப் "பிரவேச நகள்"[7] என்பர். இந்தச் சடங்குகள் குறிப்பிட்ட,'உரிமையினை ித்துதல், புனிதப்படுத்துதல்,வளமைப் படுத்துதல், மற்றும் வேறு காரணங்களுக்காகவும் செய்யப்படுவதாகவும்..'வான்ஜெனப் ின்றார். ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்க்கையிலும் பிறப்பு, மைதல், திருமணம், இறப்பு போன்ற மாற்றங்கள் தொடர்ச்சியாக பெற்று வருவதால் சடங்குகள் மனிதநியதியாக ஆக்கம் பெற்று மடைந்து வருகின்றன.

மனித வாழ்வின் இயக்கத்தில் ஒருவகையான சுழற்சி முறை ல்படுகிறது. பிறப்பு, இறப்பு, பிறப்பு என்று இந்த சுழற்சி முறை கிறது. பிறப்புக்குப் பிறகு வாழ்வில் பல்வேறு மாற்றங்கள் ின்றன. குழந்தை, சிறுவர், பருவமடைதல், தாய்மை, தந்தைமை, மை என இவ்வகை மாற்றங்களை வரிசைப்படுத்தலாம். ாற்றங்கள் மனித உடல், மனித உயிர் என்னும் நிலையுடன் த் தொடர்புடையதாக இருந்தாலும் அவை பண்பாட்டுடனும் யாகத் தொடர்புடையதாக இருக்கின்றன.

மனித வாழ்வில் நிகழ்ந்தேறும் இம்மாற்றங்கள்



பிறந்தநாள் விழாக்கள், பருவமடைதல், திருமணம், வளைகாப்பு (சூல்), குழந்தை பிறப்பு, இறப்பு, கருமாதி, தெவசம், நினைவுநாள் நடைப்பிடித்தல் என அமைகின்றன"[7] என்கிறார்.

## சடங்குகளில் மாற்றம்

வாழ்க்கை வட்டச் சடங்குகள் கலாச்சாரம், நாகரிகம், இனம் பொருளாதாரம், கல்வி தத்துவம், பழக்கவழக்கம், சமயம் காரணமாக மாற்றம் அடைகின்றன. இதனை செந்தமிழகராதி. 'மரபு வழிப்பட்ட செயல்களான சடங்குகள் நிலைத்து நிற்பதுபோல் தோன்றுகின்றன என்னும் அவை வளர்ச்சியடைகின்றன, மாறுதலடைகின்றன, அழிகின்றன'எனக் கூறும். ஒரே சடங்கு வெவ்வேறு கலாச்சாரங்களில் வெவ்வேறு அர்த்தங்களில் கைக்கொள்ளப்படுகின்றன. மரபு வழிச்சடங்குகள் காலம் செல்லச் செல்ல பிற இனத்தாக்குதலாலும் காலச் சூழல்களின் வளர்ச்சியாலும் நாகரி மேம்பாட்டாலும் பொருளாதாரம் உயர்வாலும் கல்வியாறிவாலும் பழையன கழிதலும் புதியன புகுதலும்' நடைபெறுகின்றன.

சடங்குகள் ஒற்றைப்பண்பு கொண்டவையல்ல. அவை பன்முகப்பட்டவை. ஒரு சடங்கு நடைபெறும் இடம், சூழல், தேவை, நோக்கம், காலம் இவையெல்லாம் சடங்கின் பன்முகத்தன்மையை உருவாக்குவதில் பெரும் துணைபுரிகின்றன.

## பழக்க, வழக்கம் சடங்குளாய் மாறுதல்:

நடைமுறையில் மக்கள் பின்பற்றும் சில பழக்க வழக்கங்கள் நாளடைவில் சடங்குகளாக மாறுகின்றன. 'பழக்கம் என்பது பயிற்சியின் முதிர்ச்சி. உயர்ந்தோர் பழக்கங்கள் காலப்போக்கில் வழக்கங்கள் என்று பெயர் பெறுகின்றன'என ஆறு. இராமநாதன் குறிப்பிடுவார்.

ஒரு செயல் நன்மை விளைவிக்கின்றது. என்று மக்கள் உணரும் நிலையில் அது பழக்கமாக மாறுகின்றது. காலப்போக்கில் அறிவியல், கல்வி, சமயம் ஆகியன காரணமாக சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும் போது அது சடங்காக மட்டும் நிற்கின்றது. மரபு வழிப்பட்ட செயலாகவும் கருதுவர். இதனை க. காந்தி,'சடங்குகள் மரபு வழிப்பட்ட செயல்முறைகளை அடிப்படையாகக் கொண்டு அமையக் காண்கிறோம்'என்பார்.

இறுதியில் சடங்குகளாக சமுதாயத்தில் நிலைத்து நிற்கின்றன.

## சடங்குகளும் தொன்மங்களும்:

சடங்குகள், எண்ணம், கருத்தாக்கம், சிந்தனை என்னும் நிலையில் நின்றுவிடாமல் செயல்பாட்டுத்தன்மையுடனும்" நிகழ்த்துத்தன்மையுடனும் தொடர்புடையவனாக இருக்கின்றன. சடங்குகளுக்கும் தொன்மங்களுக்கும் நெருங்கியத் தொடர்பு இருப்பதாக மானிடவியலாளர்கள் கூறுகிறார்கள். தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு சடங்குள் அமைகின்றனவா? அல்லது சடங்குகளைச் சார்ந்து தொன்மம் அமைகிறதா? என்பதில் மானிடவியலாளர்களிடையே மாறுபட்டக் கருத்துக்கள் இருக்கின்றன. என்னிலும் சிலர் இரண்டினையும் சமமான முக்கியத்துவத்துடன் அணுகுகின்றனர்." தொன்மமும் சடங்கும் ஒன்றையொன்று சார்ந்து காணப்படுகின்றன என்கிறார் கீரட்ஸ். இதற்குக் காரணம் அன்றாட வாழ்வில் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கு விளக்கம் கூறவேண்டிய கட்டாயம் இருப்பதால்தான் என்கிறார் (கிரீட்ஸ் 1969: 5:21)"[8] என்று கூறுகிறார் பக்தவச்சலபாரதி

## முடிவுரை:

மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாகச் சடங்குகள் அமைந்துள்ளன.பிறப்பு தொடங்கி இறப்பு வரையிலும் இறப்புக்குப் பிறகும் தொடரும் தன்மையுடையதாகச் சடங்குகள் இருக்கின்றன என்பதை கட்டுரை வாயிலாக அறியலாம்.

## அடிக்குறிப்புகள்


1. பழனிவேலு. கே. சங்க இலக்கியம்ஞ பாட்டுமரபும் எழுத்துமரபும் ப.11, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை, 2010
2. அகநானூறு. 156; 13-15
3. முத்தையா இ.நாட்டுப்புற மருத்துவ மந்திரச் சடங்குகள்,ப.85 வெண்ணிலா பதிப்பகம், மதுரை, 1986
4. பழனிவேலு கே. முந்துநூல் ப.11
5. மேலது.ப.45
6. தொல்காப்பியம் பொருளதிகாரம். 480
7. பக்தவச்சல பாரதி, தமிழர் மானிடவியல், ப.183, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி, 2015
8. மேலது.ப.185


♦♦♦

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2019-2020**

## S.No:6

**Title of paper** : **Kurinchinila Unavum Marabum**

**Name of journal** : Shanlax International Journals

**Year of publication** : 2019

**ISSN number** : 2454-3993

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/RANI_UGC_CARE_LIST.pdf

ISSN 2454-3993

• மலர் 3 • சிறப்பிதழ் 10 • மே 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

## தும்பை



பொருநை இலக்கியக் களமும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும்

இணைந்து அளிக்கும்

ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

# சங்கத் தமிழ்

முனைவர் கி.சங்கர நாராயணன்

UGC Approved Journal Number: 40729 | VOLUME 3 | SPECIAL ISSUE 10 | MAY 2019

**Shanlax International Journal of Tamil Studies**

(A Peer-reviewed - Scholarly Indexed Quarterly Journal)

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

SHANLAX INTERNATIONAL JOURNALS

SHANLAX
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

மலர். 3 சிறப்பிதழ் 10 மே, 2019 Impact Factor: 3.085

ISSN: 2454-3993 UGC Approved Journal Number: 40729

**பொருநை இலக்கியக் களமும்**

**சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும்**

இணைந்து அளிக்கும்

## ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

# சங்கத் தமிழ் - தும்பை

பதிப்பாசிரியர்

**முனைவர் கி.சங்கர நாராயணன்**

ஆசிரியர் குழு உறுப்பினர் - சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
செயலாளர் - பொருநை இலக்கியக் களம்
உதவிப் பேராசிரியர் - தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5.

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்


## முதன்மை ஆசிரியர்

ந. முருகேசபாண்டியன்
விமர்சகர்
மதுரை
9443861238

## ஆலோசனைக் குழு

முனைவர் அ. ராமசாமி
தமிழ்த்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

முனைவர் பா. ஆனந்தகுமார்
தமிழ்த்துறை
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்

## ஆசிரியர் குழு

முனைவர் இரா. காமராசு
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் பா. இரவிக்குமார்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியல் புலம்,
பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி

முனைவர் மு. பாண்டி
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

முனைவர் ந. சுலோசனா
தமிழ் மொழி & மொழியியல் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

முனைவர் கி. பார்த்திபராஜா
தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்

முனைவர் மா. கருணாகரன்
தலைவர்
ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்
மதுரை

முனைவர் ந. இரத்தினக்குமார்
தமிழ்த்துறை
மதுரைக் கல்லூரி
மதுரை

முனைவர் கல்பனாசேக்கிழார்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்

முனைவர் கி. சங்கர நாராயணன்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப் பலகைத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்
தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்,
திருவனந்தபுரம்

முனைவர் பொன். சசிகுமார்
ஆசிய பண்பாடு மற்றும் மொழிப்புலம்
நான்யாங் தொழில்நுட்பவியல்
சிங்கப்பூர் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்

முனைவர் பாரதி சங்கரராஜுலு
விரிவுரையாளர் – தமிழ் & தெலுங்கு
தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய ஆய்வுகள் துறை
கலிஃபோர்னியா பல்கலைக்கழகம்
பெர்க்லி (CA) அமெரிக்கா

நாகரத்னம் சுதர்ஷினி
விரிவுரையாளர்
சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிஹுல்ஓயா
ஸ்ரீலங்கா



சந்தா விவரம்
ஆண்டு சந்தா ரூ 2000-

| | | |
|---|---|---|
| 17 | தொல்காப்பியக் கூட்டு வினையெச்சங்களும் கலித்தொகையும்: ஒப்பீடு<br>**க.மாரிமுத்து** | 66 |
| 18 | தொல்காப்பியத்தின் உரை அமைப்பு<br>**முனைவர் மா.ரங்கசுவாமி** | 72 |
| 19 | சங்கத் தமிழரின் நாணயங்கள்<br>**ரா.ரஜுலா** | 76 |
| 20 | குறிஞ்சி நில உணவும் மரபும்<br>**முனைவர் ஏ.ராணி** | 81 |
| 21 | பாவூர்சத்திர வட்டார நாடார் இனமக்களின் வாழ்வியல் சடங்குகளில் காணலாகும் நம்பிக்கைகள்<br>**முனைவர் ரா.ராஜலெட்சுமி** | 84 |
| 22 | சங்ககால திருமணம் கற்பியல் பார்வை<br>**முனைவா தா.சேம் மற்றும் செ.லிசா** | 87 |
| 23 | பெண்ணியத் திறனாய்வு ஓர் ஆய்வு<br>**முனைவர் க.வனிதா** | 91 |
| 24 | நாட்டார் கதைகள் காட்டும் அரசியல் அறம்<br>**முனைவர எ.ஜாஸ்மின் விஜி** | 94 |
| 25 | மறுபக்கம் நாவல் உணர்த்தும் பனைமரத்தின் சிறப்பு<br>**நெறியாளர் ஏ.ராணி & சோ.ஜெப ஷீலி** | 98 |
| 26 | சிறுபாணாற்றுப்படையில் தொன்மையும் தனித்தன்மையும்<br>**ஜே.ஜென்சி பிரியா** | 101 |
| 27 | உமா சரவணன் புதினங்களில் பெண் மன உணர்வுகளும் சமுதாய சிக்கல்களும்<br>**பி.வீ.ஸ்ரீதேவி** | 105 |
| 28 | தேவாரத்தில் ஐந்திணை வளமும் அகப்பொருள் நெறியும்<br>**முனைவர் நா.ரா,ஷிபஜா** | 108 |
| 29 | தொல்காப்பியத்தில் எச்சங்கள்<br>**அ.ஹாஜிரா பேகம்** | 112 |
| 30 | கந்தர் சஷ்டி கவசம் - சொற்கட்டமைப்பு<br>**முனைவர் தி.ஹேமலதா** | 117 |
| 31 | திருக்குறளில் வேளாண்மை<br>**சூ.தங்க ப்ரீத்தா மலர்** | 120 |
| 32 | தொல்காப்பியத் தோழி<br>**முனைவர் சீ.செஞ்கலட்சுமி** | 124 |

மலர்: 3
சிறப்பிதழ்: 10
மாதம்: மே
வருடம்: 2019
ISSN: 2454-3993

# குறிஞ்சி நில உணவும் மரபும்

**முனைவர் ஏ.ராணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு

தமிழிலக்கியங்கள் உணவின் தேவையை எடுத்து விளக்குவதோடு அந்த உணவை மற்றவர்களுக்கும் கொடுத்துதமிழ்ச் சமூகத்தின் பெருமையை நிலைத்து நிறுகசெய்கின்றன. தமிழரின் உணவுப் பொருட்களைப் பற்றிய செய்திகளை இலக்கியங்கள் உணர்த்துகின்றது. உலகில் அனைத்து உயிர்களும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத பொருள் உணவு. நாகரிகத்திலும், பண்பாட்டிலும் உலகிற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியதமிழினம் உணவை உண்பதிலும் சிறந்துவிளங்குகிறது. ஆதிகால மனித சமூகத்தின் இந்த உணவுசேகரிப்பு முறையிலிருந்து தான் இச்சமூகத்தின் வரலாறு ஆரம்பமாகிறது. குறிஞ்சிநில மக்களின் உணவைப் பற்றி இக்கட்டுரை ஆய்வுசெய்கிறது.

## உணவு விளக்கம்

உணவு என்னும் சொல் "உண்" என்பதின் அடிச்சொல்லாக அமைந்தது. மனிதன் உயிர்வாழ்வதற்கும், உடல் நலத்திற்கும் தீங்கு விளைவிக்கிற பொருளாக உணவு அமைந்துள்ளது. பண்டைய மனிதனது முதல் தொழில் உணவைதேடலாயிருந்தது. "உணவு முதற்றே பிண்டம்" என்பது சான்றோர் வாக்கு. நமதுஅடிப்படைஉரிமைகளுள் ஒன்று அனைவருக்கும் உணவு கிடைத்தலாகும். பாரதியும் "தனியொரு மனிதனுக்கு உணவில்லை யெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்றார். மக்களின் பண்பாடு பழக்க வழக்கங்களுக்கேற்ப அவர்களுடைய உணவு வேறுபடுகிறது. உடம்பை வளர்க்கும் மருந்தாகவும் உணவு விளங்குகிறது.

## உணவு அவசியம்

ஆடையில்லாத மனிதன் அரைமனிதன் என்பதைப் போல உணவில்லாத மனிதனும் உயிரற்ற மனிதனாகிறான். உயிர்வாழ உணவுஅவசியம். உணவின் பிண்டமாகிய உடம்பு உயிரை சுமந்து கொண்டிருக்க அதற்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் இதனை,

**"உண்டிகொடுத் தோருயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றேயுணவின் பிண்டம்"**

என்கிறது புறநானூறு.

பண்டை தமிழனின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடி தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் ஆகும். தொல்காப்பியர் தெய்வத்திற்கு அடுத்தநிலையில் உணவை வைத்துள்ளார். அவ்வாறு வைத்ததன் காரணம் மனிதனுக்கு உணவு அவசியமான ஒன்றாகும்.

## உணவு வகைகள்

இயற்கை அன்னை மனிதர்களுக்கு வழங்கிய உணவுப் பொருட்கள் கணக்கற்றவை. அவை திடஉணவுப் பொருட்களாகவும், நீருணவுப்

பொருட்களாகவும் அமைகின்றன. இயற்கையாகக் கிடைக்கக்கூடிய இலை, பூ,காய்கள், கனிகள், விதைகள் முதலியவற்றை இயற்கைத் திடவுணவுப் பொருட்களாகக் கொள்வர். சோறு சுட்டதும், புழுங்கியதும், வறுத்ததும், பொரித்ததுமாகிய மீன்கள், ஊன்கள், கிழங்குகள், பண்டங்கள் முதலியவற்றைச் செயற்கைத் திடவுணவுப் பொருட்களாகவும் கொள்வர். தொல்காப்பியர் மரபியலில்

> **"மெய்திரி வகையின் எண்வகை உணவின்**
> **செய்தியும் வரையார் அப்பாலான"**

**(மரபு- 623)**

எனக் குறிப்பிட்டு எண்வகை உணவுகளை நெல்லு, காணம், வரகு, இறுங்கு, தினை, சாமை, புல்லு, கோதுமை போன்றவற்றை சுட்டிக்காட்டியுள்ளார்.

## திணைகளும் அவை சார்ந்த மரபுகளும்

உணவு, உடை, வாழ்க்கை முறை ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகள் ஒவ்வொரு திணையையும் வெவ்வேறு பண்பாட்டு நிலைக்களன்களாக அடையாளப் படுத்துகின்றன. இருவேறு பண்பாட்டு நிலைக்களன்கள் அருகருகில் இருக்கும்போது பண்பாட்டுக் கலப்பு இயல்பானது. பண்பாட்டு நிலைக்களன்களில் காணப்படும் கலப்பு அல்லது மயக்கங்கள் திணைமயக்கம் என்ற பெயரில் இலக்கணங்கள் சுட்டுகின்றன. உணவும் மரபும் குலம் சார்ந்த ஐந்து திணைகளிலும் வெவ்வேறாகக் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட உணவு ஒரேஒரு திணைக்கு மட்டும் உரியதாக அடையாளப்படுத்த இயலுமா என்பது சந்தேகத்துக்குரியது. உற்பத்தி முறை, இயற்கைவளம், கருவிகளின் கண்டுபிடிப்பு ஆகியவற்றைப் பொறுத்தே உணவுமரபுகளும் அமைய இயலும். உணவுப் பழக்க வழக்கங்களைக் கொண்டு அத்தகைய கருவிகள் வழக்கில் இருந்திருக்க முடியும். உணவு தயாரிப்பு முறைகள் எவ்வாறு இருந்திருக்கமுடியும்? போன்றவற்றை ஊகித்து அறியும் வாய்ப்புகள் உள்ளன.

## குறிஞ்சி நிலமக்களின் உணவு

சங்க இலக்கியங்கள் குறிஞ்சிநிலமக்களின் உணவாகத் தேன்,கிழங்கு வகைகள், இறைச்சி ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன. இம்மூன்றும் குறிஞ்சிநிலத்தில் இயற்கையாக் கிடைப்பவை என்பது குறிப்பிடத்தக்கது. சோழநாட்டு குறிஞ்சி நிலமக்கள் கிழங்கையும், தேனையும் உண்டு மகிழ்ந்த செய்தியைப் பொருநராற்றுப்படை கூறுகின்றது. குறிஞ்சி நிலம க்கள் ஐவனம் என்னும் மலை அரிசி, தினை, மூங்கிலரிசியை உணவாக உண்டனர். மலைப்பகுதியில் கிடைக்கும் தேனும், பலாபழமும் முக்கிய உணவாக இருந்தது. அரிசியை உரலுக்கையில் குத்தி, உமி நீக்கி உணவாக உண்டமையை

> **"இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த**
> **அவைப்புமாள் அரிசிஅமலை வெண்சோறு"**

**(சிறுபாண் வரி 163 -164)**

என்னும் அடிகளால் அறியலாம். மூங்கிலரிசி, சம்பா, சீரகச் சம்பா,சிறுமணிச் சம்பா, மலையரிசி போன்ற பலவகையான நெல் அரிசிகளை மக்கள் விரும்பி உண்டனர். அரிசியை பச்சரிசி என்றும், புழுங்கல் அரிசியென்றும் இருவகையாகப் பயன்படுத்தினர். இவற்றுள் புழுங்கலரிசி உடற் சூட்டைத் தணிப்பதாலும் சுவையைத் தருவதாலும் மக்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டது. நெல்லினை உரலிலிட்டு அதை வெளுக்கத் தீட்டிய பின்னரே அதனை சோறு சமைத்து உண்டனர். இவ்வரிசிகைக்குத்தலரிசிஆகும். இது சுவையுடையதாகவும், உடலுக்கு அதிக வலுவைத் தருவதாகவும் இருந்தது.

## முடிவுரை

மக்களின் பண்பாடு பழக்க வழக்கங்களுக்கேற்ப அவர்களுடைய உணவும் வேறுபடுகின்றது. குறிஞ்சி நிலமக்கள் தேனையும், கிழங்கையும் உண்டு மகிழ்ந்தனர். மூங்கிலரிசி, சம்பா, மலையரிசி போன்ற பலவகையான நெல்லரிசிகளை விரும்பி உண்டனர். நெல்லினை உரலிலிட்டு தீட்டிய பின்னரே சோறு சமைத்து உண்டனர். மலைப்பகுதியில் கிடைக்கும் தேனையும், பலாபழத்தையும் முக்கிய உணவாக உண்டனர்.

**பார்வை நூல்கள்**

1. குறுந்தொகை பெருஞ்செல்வம், சாமி சிதம்பரனார்
2. சங்ககால வாழ்வியல், முனைவர் ந. சுப்பிரமணியன்
3. தமிழர் உணவு, சே. நமச்சிவாயம்
4. தொல்காப்பியமும் மரபியல் (நூற் : 623)
5. சிறுபாணாற்றுப்படை வரி (193 - 194)

ISSN: 2454 - 3993 மலர் 3 சிறப்பிதழ் 10 மே 2019

SHANLAX
INTERNATIONAL JOURNALS

SHANLAX
SINCE 1990

editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

(A Peer - Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

பொருநை இலக்கியக் களமும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும்

இணைந்து அளிக்கும்

ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

# சங்கத் தமிழ் – தும்பை

# Certificate

OF PUBLICATION

We hereby certify that

Dr. V. RANI

In recognition of the Publication of the Paper Entitled

குறிஞ்சி நில உணவும் மரபும்

Published in

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

UGC Approved Journal Number: 40729

| | | |
|---|---|---|
| N. [signature] | [signature] | [signature] |
| ந.முருகேசபாண்டியன் | முனைவர் கி.சங்கர நாராயணன் | Er. S. Lakshmanan |
| முதன்மை ஆசிரியர் | ஆசிரியர் குழு உறுப்பினர் | The Publisher |

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2019-2020**

## S.No:7

**Title of paper** : **Sankakala kavithaikal kattum sinthanaikal**

**Name of journal** : Classical Tamil

**Year of publication** : 2019

**ISSN number** : 2321-0737

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/lalli_ugc_care_list20240729173532.pdf

சிறப்பிதழ்
**Special Issue**

12-கார்த்திகை 2050
**28-November 2019**

**ISSN : 2321-0737**

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandrasegaran*

***Editorial Board***
*Dr. S. Kumaran*
*Dr. S. Rajaram*
*Dr. Aranga. Pari*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Chitra*
*Dr. P. Velmurugan*
*Dr.A. Ekambaram*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. R. Jagadheesan*
*Dr. P. Selvakumar*
*Dr. T. Jegathesan*
*Dr. R.Vijayarani*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. Sinnathamby Santhirasegaram*
*Dr. S. Ramesh*
*Dr. Manivannan Murugesan*
*Dr. A. Rameez*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

சிறப்பிதழ் :

முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
(தேசியத் தர மதிப்பீட்டு மன்றம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது)
திருச்சிராப்பள்ளி–620 020, தமிழ்நாடு, இந்தியா

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

## பன்முகத் தளத்தில் தமிழியல்

பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் க. சிராஜுதீன்**
உதவிப்பேராசிரியர், முதுகலை &தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி –620 020.

***Published by***
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**6** பகுதி-8
சிறப்பிதழ்
**Special Issue**

# சங்க கவிதைகள் காட்டும் அறச்சிந்தனைகள்

**முனைவர் ஜா. லாலி ஏதேஸ்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

"அறத்தால் வருவதே இன்பம்" என்று திருவள்ளுவரும், "அறம் செய விரும்பு" என ஔவையாரும் கூறியுள்ளனர். அறம் இல்லா சமுதாயம் இருக்க முடியாது. மனிதர்களின் சமூகச் செயல்பாட்டை நெறிப்படுத்த அறம் அடிப்படையானது. மனிதன் கூட்டாக வாழ்வதற்கு அற நெறிகள் தேவையானது. துன்பப்படுபவர்க்கு செல்வம் மிகுந்ததவர்கள் பயன் கருதாது உதவுவது அறம் ஆகும். அறநெறிப்பண்பு, உண்மை, வாய்மை, நன்மை ஆகியன அறத்திற்கு அடிப்படையாக அமைவன என்றெல்லாம் அறத்தைப் பற்றி பேசப்படுகிறது. இத்தகைய அறத்தின் சிறப்பைப் பற்றி சங்க கவிதைகள் என்னும் இலக்கிய நூல்களில் மனித சமுதாயம் சிறந்து விளங்க துணைபுரியும் மனித இனம் மேற்கொள்ள வேண்டிய அறச்செயல்பாட்டையும் பற்றி விளக்குகிறது. இதனை பின்பற்றி வாழ வழிகாட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம்

அறமென்பது மனிதன் தனக்கும் பிறருக்கும் நன்மையை அளிக்கும் நிலையில் வாழ்வதாகும். அறம் மக்களுக்கு சிறப்பையும் செல்வத்தையும் கொடுக்கும் கருவி. அறம் என்ற சொல்லுக்கு கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தரும தேவதை என்றெல்லாம் கழகத் தமிழ் அகராதியில் பொருள் கூறப்படுகிறது. இத்தகைய அறத்தினை சங்கக்கவிதைகளில் பேரறம், உணவறம், சமூக அறம் என்றெல்லாம் அறத்தின் சிறப்பைப் பற்றி பேசப்படுகிறது. மனம் தூய்மையானால் எண்ணமும் ஒழுக்கமும் தூய்மையாகும் என்பதை வள்ளுவர் மனத்துக்கண் மாசிலனாதல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். மேலும் அறம் எனப்படுவது "அலந்தவர்களுக்கு உதவுதல்" "அறம் தலைப்பிரியா, ஆறுமற்றதுவே" என்று கலித்தொகையும், "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்று புறநானூறும், "முந்தையிலிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" என்று நற்றிணையும், "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்று கலித்தொகையும், அறம் பற்றி கூறுகிறது.

## இல்வாழ்க்கையில் அறம்

இல்லற நெறி என்பது நல்லறம் ஆற்றுதல் ஆகும். இல்லற நெறியைப் பின்பற்றிதான் தலைவன் தலைவியின் வாழ்க்கை தொடங்குகிறது. காலங்கள் மாறுவது போல வாழ்க்கை இன்பமும், துன்பமும் கலந்து வருவது என்று உணர்ந்தோர் வாழ்வில் இனிமை காண்பர் என்பதனை,

> **"இன்பமும், இடும்பையும் புணர்வும் பிரிவும்**
> **நன்பகல் அமையமும் இரவும்பொல**
> **வேறு வேறு இயல ஆகிமாறு எதிர் தந்து உள"**
> (அகம் 327: 1-4)

என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார். மேலும், உண்ண உணவும், உடுக்க உடையும் போதுமான அளவு இல்லை என்றாலும் மனம் ஒன்றி வாழ்வதே சிறந்த அறம் ஆகும் என்பதை,

> **"ஒன்றன் கூறாடை, உடுப்பவரெ ஆயினும்**
> **ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"**
> (கலித்தொகை *18: 10-11*)

என்ற பாடல் வரிகளில் குடும்ப வறுமையை பெற்றோரிடம் மறைத்து வாழ்வதே மனையறத்தின் சிறப்பாகும் என்று கூறுகிறது.

மேலும், வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றரெல்லாம் பலனை எதிர்பார்த்து செய்வதாகும்.

இல்லை என்பவர்க்கு இருப்பவர் கொடுத்து வாழ்வதே ஆகும் என்பதை,

"செல்வத்துப் பயனே ஈதல்"
(புறம் 189-7)

என்ற வரிகளில் கூறப்பட்டுள்ளது.

**போரறம்**

பண்டைய காலத்தில் போர் செய்ய புறப்படும் அரசன் பசு பார்ப்பார், பெண்கள், நோய் வாய்ப்பட்டோர், புதல்வரை பெறாதவர்கள் ஆகியோரை கொலை செய்யக்கூடாது என்ற நல் எண்ணத்தோடு அவர்கள் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டனர் என்பதை,

**ஆவும் ஆணியற், பார்ப்பன மக்களும்**
**பெண்டிரும் பிணியுடையரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு ...............**
(புறம் 9)

என்ற வரிகளில் அரசனின் அறச் செயல்பாட்டை விளக்குகிறார். மேலும்,

**"அற நிலை திரியா அன்பின் அவையத்து**
.................................. (புறம் 71)

**புறப்போர் புன்கண் கூற**
**இறப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே"**
(புறம் 173)

என்ற வரிகளில் போரில் வென்று மக்களை காப்பதே அறநெறியாக கருதினர். மேலும், அரசன் போர் களத்தில் வெற்றித் தருவது வேல் இல்லை. செங்கோலே ஆகும். அச்செங்கோல் வளையாத போது தான் அரசன் சிறப்படைவான் என்பதை,

**"வேல் அன்று வெற்றி தருவது மன்னன்**
**கோல் அதூ உம் கோடாது எனின்**
(குறள் 546)

என்று குறளில் குறிப்பிடுகிறார்.

**ஆட்சி அறம்**

ஆட்சி நடத்தும் ஆட்சியாளர்கள் அறத்தொடு நடந்தால் செங்கோலாட்சி என்றும் அறம் பிறழ்ந்த ஆட்சியாக இருந்தால் கொடுங்கோல் ஆட்சி என்றும் கூறுவர். அரசன், ஏழை எளிய மக்களிடம் வரி விதிப்பதில் கவனமாக இருக்க வேண்டும். விசாரிக்காமல் தீர்ப்பு கூறக்கூடாது. அறம் வகுத்து அதன் வழியில் ஆட்சி செய்ய வேண்டும். நாடு செழிக்க நல்லாட்சி நிலவ வேண்டும் என்பதனைப் பற்றி,

**"அறத்தினி மண்டிய மறப்போர் வேந்தர்**
- புறம் 60

**அறந்துஞ்சும் உறந்தை"** – புறம் 58

**அறந்தெரி திகிரி** – பதிற்றுபத்து – 22

**அறம் புரி செஞ்கோல்** - புறம் - 224

என்ற வரிகளில், ஆட்சி செய்த இடம், அரசனின் ஆட்சி சிறப்பைப் பற்றியெல்லாம் கூறப்படுகிறது. மேலும்,

**"கொடுங்கோல் அரசன்**
**பெருமையடையமாட்டான்** (திரி – 66)

**கோல் நோக்கி வாழும் குடி எல்லாம்**
(நான்மணி – 27)

என்ற வரிகளில் கொடுமையை நீக்கி குடிமக்களுக்கு நன்மை செய்கிற அரசனே, பெருமை அடைவான். நாட்டு மக்கள் அரசனின் செங்கொல் நோக்கியே உயிர் வாழ்வார்கள். நீதி நெறி தவறாது ஆட்சி புரிய வேண்டும் என்றும் அற இலக்கியங்களில் வலியுறுத்தப்படுகிறது.

**உணவு உடையில் அறம்**

மன்னர்கள் தன்னை நாடி வந்தவர்க்கு களைப்பை போக்குவதற்கு, நீர் கொடுப்பதோடு, அவர்களின் வயிறும் மனமும் மகிழும் வகையில் பல வகையான உணவினை வழங்கி அவர்களின் பசித் துன்பத்தை போக்கினர். மேகம் போன்ற கூந்தலையுடைய பெண்கள், பொன்னாலாகிய கலங்களில் பலமுறை தேறலை ஊற்றி கொடுப்பதை,

**"இழையணி, வனப்பின் இன்னகை மகளிர்**
**போக்கு இல் பொலங்கலம் நிறைய**
(பொருநராற்றுபடை – 85-86)

என்ற வரிகள் வாயிலாக அறிய முடிகிறது. மேலும் அவர்கள் உணவு உட்கொள்ளும் காலமறிந்து செம்மறிக்கிடாயின் இறைச்சியை கொடுத்து உண்ண செய்தனர். இதனை,

**"காழின் சுட்ட கோழ் ஊன் கொழுங்குறை**

**..................................................**

(பொரு-படை (105-106)

ஆகிய வரிகள் வாயிலாக அறிய முடிகிறது.

கரிகால் பெருவளத்தான் தன்னை நாடி வரும் பொருநன் ஒருவன் ஈரும் பேனும் கூடி வேர்வையால் நனைந்து வந்தவருக்கு பல தையல்களோடு இருந்த பழைய கந்தல் ஆடையை நீக்கி பாம்பின் தோல் போன்ற மெல்லிய ஆடையும் பட்டாடையும் உடுக்க செய்ததை,

**"வேரொடு நனைந்து வேற்றிழை**

**.................................**

(பொரு-ஆ.படை 80-81)

என்ற வரிகளில் அறிய முடிகிறது.

மேலும் நன்னன் சேய் நன்னன் தன்னை நாம் வரும் கூத்தனிடத்து முதலில் அவர்களை மகிழ்ந்த முகத்துடன் வரவேற்று அருகில் மலர் மணத்துடன் அமர்ந்து உவகையுடன் இனிது நோக்கி நூல் இழை காணமுடியாத நூலால் செய்யப்பெற்ற ஆடையை கொடுத்த செய்தியை,

**"உவர்ந்த உள்ளமொடு அமர்ந்தினிது நோக்கி**
**இழைமருங்கு அறியா நூழை நூல் கலிங்கம்"**
(கூத்தராற்றுபடை 560-561)

என்ற வரிகள் வாயிலாக அறிய முடிகிறது. இவ்வாறு உணவு உடை அளித்து அறம் மேற்கொண்ட செய்திகளை சங்க கவிதைகளில் காணலாம்.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் பண்பு சிறந்த அறப்பண்பாக சங்ககால மக்கள் கருதினர். தன்னை நாடி வந்தவர்கள் வெறுமையாக போகக்கூடாது என்பதற்காக அவர்கள் விரும்பி கேட்பதை எல்லாம் கொடுக்கக் கூடியவர்களாக இருந்தனர். மனை கணவர் இறந்து விட்ட நிலையிலும் தன் வீட்டி வந்த அடியாரை சிறப்புடன் வரவேற உபசரிப்பதை காண முடிகிறது.

விருந்து உபசரிப்பது யாசிப்பவர் இரவல புலவர், கலைஞர் என்ற பல நிலையி கூறப்பட்டுள்ளது. விருந்தினர் வெளிமே சென்றிருப்பினும் சான்றோர்கள் அமுதமே கிடைப்பதாலும் தனித்து உண்ணமாட்டார்க இதனை,

**"உண்டால் அம்மஇவ்உலகம்-இந்திர**
**அமிழ்தம் இயைவது ஆயினும் -இனிது என**
**தமியர் உண்டலும் இலரே"** (புறம் 182)

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்.

பசி என்று வந்தவர்க்கும் வயிராற உணவு கொடுத்து விருந்தோம்புதல் வேண்டும் என்பதை,

**"உண்ட நன்கலம் செய்து நடக்கவம்**
**தின்ற நன்பல் ஊவன் தோண்டவும்"**
(புறம் 384)

என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார். விருந்தோம்பலைச் சிறந்த அறமாக கருதி விருந்தோம்பினர் இதனை அறச்செயலாக கருதி செயல்பட்ட விதத்தை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**பெண்ணின் அறங்கள்**

குழந்தையைப் பெற்று வளர்த்தல், கருவுற்ற சூலினைப் பேணுதல், அனாதை குழந்தையை எடுத்து வளர்த்தல், திருமணமாகாமல் ஏமாந்த சூலுற்ற கன்னியையும், கணவனால் கைவிடப்பட்டவரையும் வைத்து பாதுகாத்தல், இவை பெண்ணின் அறநெறியாகும். இதனை,

**"ஈன்று எடுத்தல் கால் புரஞ்செய்தல்**

**..........................................."**

(சிறு பஞ்சமூலம் 72)

என்ற பாடல் வரிகள் வாயிலாக அறிய முடியும்.

## டிவுரை

அறத்தால் வரும் இன்பம் தான் நிலையானது. ருக்கு தீங்கு நினையாத மாசற்ற மனத்தால் ாருள் செய்தொழுகும் முறை அறம். அறம் லைபேறு உடையதாகும். அழியாததும் அழிக்க ண்ணாததும் ஆகும். இத்தகைய அறத்தினை ாற்றி ஒழுகினால் நாம் உலகம் உய்ய 'முலாம். இத்தகைய அறச் செயல்களை ன்னோர் கடைபிடித்து வாழ்வாங்கு வாழ்ந்தனர். துபோல இளைய சமுதாயத்தினரும் கடை ித்து அறம் போற்றி வாழ வேண்டும் என்பதை ிகட்டுரை வலியுறுத்துகிறது என்பதை ியலாம்.

## துக்குறிப்புகள்


எட்டுத்தொகை மூலமும் உரையும் வரையும், நியுசெஞ்சுவர் புக் ஹவுஸ், புலியூர் தேசிகன் உரை

பன்னோக்கு பார்வையில் தமிழ் செம்மொழி, கல்லூரி, ஆசிரியர் குமரித் தமிழ் சங்கம்.

ஐம்பெருங்காப்பியங்களில் அறம், தமிழ் ஐயா வெளியீட்டகம்.

புலியூர்கேசிகன் உரை, பதினென்மேற்கணக்கு நூல், மூலமும், உரையும்

திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம்.

வகைமை நோக்கில், தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர் பாக்கியமேரி.

பதினெண்கீழ்கணக்கு மூலமும், உரையும், சைவபாலசுந்தரம், தி.சு.சைவ சித்தாந்தக் கழகம், டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை.


௸

ISSN : 2321-0737


| | | |
|---|---|---|
| 421. சந்னா.வே | கள்ளிக்காடு காட்டும் சமூக வெளிப்பாடு | 1547-1549 |
| 422. க. ரமாபிரபா | திருக்குறளில் சமுதாயப் பார்வை | 1550-1551 |
| 423. இரா. ரவி | சங்ககாலப் பொருளாதார வளர்ச்சியில் தொழில்களின் பங்களிப்பு | 1552-1555 |
| 424. ரா.ரஜனா | கல்வெட்டுக் கூறும் நிறுவனங்கள் | 1556-1560 |
| 425. பி.ரஷிதாபேகம் | ஜி.ஆர்.சுரேந்தர்நாத் சிறுகதையில் திரைப்படத்தின் தாக்கம் | 1561-1565 |
| 426. மா. ராகுல்காந்தி | நற்றிணையில் இனவரைவியல் நோக்கில் புனைவு | 1566-1568 |
| 427. வே. ராணி | புறநானூற்றில் இனக்குழுச் சமூகம் | 1569-1571 |
| 428. பொ. ராணி | குதம்பைச் சித்தர் பாடல்களில் பொருள் நிலையாமை | 1572-1573 |
| 429. இ. ராம்பிரகாஷ் | தொகைநூல்களில் இல்லறம் | 1574-1576 |
| 430. ஆ.க.ராஜா | திருக்குறளில் காணலாகும் பண்பாட்டுக்கூறுகள் | 1577-1580 |
| 431. நா. ராஜா | திருக்குறளில் மனித உரிமைக் கோட்பாடுகள் | 1581-1585 |
| 432. செ. ராஜேஸ்வரி | தன்னம்பிக்கை தரும் வெற்றி | 1586-1589 |
| 433. க. ராஜ்குமார் | முல்லைப்பாட்டில் பொருள்சார் பண்பாட்டு வாழ்வியல் | 1590-1593 |
| 434. கா. ரெங்கராஜ் | அகநானூற்றில் மானுட அறம் | 1594-1596 |
| 435. மா. ரெத்தினேஸ்வரி & செ.சபிதா பேகம் | சேகுணப்புலவரின் முகியித்தீன் புராணத்தில் இயற்கை வருணனைகள் | 1597-1599 |
| 436. ஆ.ரெஜி | இலக்கியத்தில் உணவு முறைகள் | 1600-1603 |
| 437. வே. ரேகா | போதைமலைப் பழங்குடி மக்களின் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் | 1604-1605 |
| 438. மு. ரேவதி | வியரைக்கூ ஒரு பார்வை | 1606-1608 |
| 439. ரோஜா லெபோரியா.எம் | சங்க இலக்கியத்தில் "பெண்ணியம்" | 1609-1611 |
| 440. செ. ரோஸ்லின் மேரி | 'வலைவள் பரிசு' மீட்டுருவாக்க நாடகத்தில் நாடகக் கட்டமைப்பு | 1612-1616 |
| 441. பெ. லதா | நாடகம் என்ற நுண்கலையின் வளர்ச்சி நிலை | 1617-1619 |
| 442. க.ர.லதா | குறிஞ்சிக் கலியில் களிறும் புலியும் | 1620-1623 |
| 443. கி. லதா | சிங்கப்பூர்: புலம்பெயர்வு தமிழர்களின் தமிழ்மொழியும் கல்விநிலையும் | 1624-1627 |
| 444. நா. லதா | நற்றிணையில் நெய்தல் நிலமக்களின் வாழ்வியல் கூறுகள் | 1628-1631 |
| 445. ப. லதாராணி | சங்க இலக்கியத்தில் வருணைகள் | 1632-1635 |
| 446. ஜா. லாலி ஏதேன் | சங்க கவிதைகள் காட்டும் அறச்சிந்தனைகள் | 1636-1639 |
| 447. G.J. லீமாரோஸ் | இராமாயணத்தில் அனுமனின் தூது | 1640-1643 |
| 448. ச.லீமா | புறநானூற்றில் கூறலாகும் சிறப்புச் செய்திகள் | 1644-1647 |
| 449. வே. லீலாவதி | இக்காலக் கவிதைகளில் அறிவியல் | 1648-1651 |
| 450. த.லெனின் | நாட்டுப்புறப் பாடல்களில் இலக்கிய நயங்களும் வட்டாரச் சொற்களும் | 1652-1654 |
| 451. மு. லோகநாயகி | சிலப்பதிகாரத்தில் கற்புக் கோட்பாடு | 1655-1656 |
| 452. க. லோகிதா | சங்க இலக்கியத்தில் முனிவர் | 1657-1659 |
| 453. ரா.வசுமதி | மித்ராவின் ஹைக்கூவில் பெண் சிந்தனைகள் | 1660-1663 |
| 454. ப. வருதராஜ் | நாலடியார் உணர்த்தும் செல்வம் நிலையாமை | 1664-1667 |
| 455. வெ.வளர்மதி | கருணைக்கொலை புதினத்தில் உள நெருக்கீடுகள் | 1668-1670 |
| 456. ஜெ. வனிதா | சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் - உணவுமுறைகள் | 1671-1674 |
| 457. க. வாசுகி | உரைநடை வளர்ச்சியில் பாரதியின் பங்கு | 1675-1677 |
| 458. கி. வான்மதி | சங்க இலக்கியங்களில் போர்முறைகள் | 1678-1681 |
| 459. இரா.விசாலாட்சி | சங்க இலக்கியங்களில் காணலாகும் தூது | 1682-1685 |
| 460. ச. வித்யா | வள்ளுவத்தில் மேலாண்மை | 1686-1688 |
| 461. த. வித்யா | இனவரைவியல் நோக்கில் நீலகிரித் தோடர் பழங்குடியினர் | 1689-1693 |
| 462. க. விமலா | தொல்காப்பியமும் தமிழர் பண்பாடும் | 1694-1696 |
| 463. N.P. விமலானந்தி | சீவக சிந்தாமணியில் அணிகலன்கள் - ஓர் பார்வை | 1697-1701 |
| 464. இர.விமல்ராஜ் | பசவேசரும் திருமூலரும் | 1702-1704 |
| 465. வீ.வினோதா | தொல்காப்பியம் மற்றும் சாஸ்புரிய மராட்டி வியாக்கரணத்தில் சொல்லிலக்கண ஒப்பீடு | 1705-1709 |
| 466. தெ. வினோலியா | சிவஞான போதம் உணர்த்தும் இறைக் கொள்கைகள் | 1710-1713 |
| 467. மு. விஜயகுமார் | ஒருலகக் கோட்பாடு | 1714-1716 |
| 468. ப. விஜயகுமார் | இயற்கையைக் காப்போம் | 1717-1724 |
| 469. கி. விஜயகுமார் | சங்க இலக்கியத்தில் பண்பாடு | 1725-1727 |
| 470. த. விஜயலட்சுமி | இடம் சுட்டும் ஒலிக்குறிப்பு | 1728-1729 |
| 471. க. விஜயலெட்சுமி | பருக்கையும் வலியும் | 1730-1734 |
| 472. சி.விஜய் | நவீனக் கவிதைகளில் மக்கள் விவாதமும் கருத்துருவாக்கமும் (இன்குலாப்பின் காந்தள் நாட்களை முன்வைத்து) | 1735-1740 |
| 473. வி. விஜிலட்சுமி | அறம் போற்றும் பெருங்கதை | 1741-1743 |
| 474. ஜோ. விஜில்டம் ராணி | பரதவர் மக்களின் தொழில்கள் | 1744-1746 |
| 475. த. வெண்ணிலா | திருமுருகாற்றுப்படையில் திருச்சீரலைவாயின் சிறப்பு | 1747-1750 |
| 476. பெ. வெற்றிச்செல்வி | காப்பியங்களில் இயற்கை | 1751-1753 |
| 477. ரா. வேதவல்லி | கல்வெட்டியல் | 1754-1757 |
| 478. அ. ஜோஸ் க்ஷ்டி ஜினிலா | வளனூர் இடப்பெயராய்வு | 1758-1760 |
| 479. அ. ஜனார்த்தனி பேகம் | சிற்றிலக்கியங்கள் வழி அறியலாகும் செய்திகள் | 1761-1765 |
| 480. ம. ஜஸ்டின் பியூலா | குடும்ப விளக்கில் மனையறம் | 1766-1768 |


Published by : **Raja Publications**, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House**, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

ஜமால் முகமது கல்லூரி
(தன்னாட்சி)
ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது
தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி – 620 020. தமிழ்நாடு, இந்தியா


பொருண்மை :

பன்முகத் தளத்தில் தமிழியல்

நாள் : 28.11.2019 (வியாழக்கிழமை)

UGC

முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி மற்றும்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் இணைந்து

பல்கலைக்கழக மானியக்குழுவின் தன்னாட்சி நிதியுதவியுடன் நடத்தும்
– பன்னாட்டுக் கருத்தரங்கம் –

## வளநபர்ச் சான்றிதழ்

~~திரு~~ / திருமதி / ~~செல்வி~~ ஜா. வாலி ரேகேஸ் அவர்கள்
சங்க கவிதைகள் காட்டும் அறச் – சிந்தனைகள் என்னும் தலைப்பில்
கட்டுரை வழங்கி / பங்கேற்றுச் சிறப்பித்தார்கள் என்று சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| முனைவர் க. சிராஜுதீன்<br>கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் & செயலாளர் | முனைவர் அ. செய்யத் ஜாகீர் ஹசன்<br>தமிழ்த்துறைத்தலைவர் (பொ)<br>கலைப்புல முதன்மையர் | முனைவர் S. இஸ்மாயில் முகைதீன்<br>முதல்வர் |

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2019-2020**

## S.No:8

**Title of paper** : **Devarathil Aynthinai valvum Akaporul Nerium**

**Name of journal** : Shanlax International Journals

**Year of publication** : 2019

**ISSN number** : 2454-3993

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/SHIBAJA_UGC_CARE_LIST.pdf

சிறப்பிதழ்
Special Issue

Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. Pon. Kathiresan
Dr. S. Vignesh Ananth
Dr.M. Arunachalam
Dr. S. Bharathi Prakash

15-16 ஐப்பசி 2050
31st Oct- 01st Nov 2020

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

Journal of

# Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : இணையவழித் பன்னாட்டுக் கருத்தரங்கம்-2020
தமிழ்த்துறை
தொன்போஸ்கோ கல்லூரி,
ஏலகிரிமலை, தமிழ்நாடு, இந்தியா

## காலந்தோறும் தமிழ் இலக்கியங்களின் வரலாறும் புதுமைச் சிந்தனைகளும்

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
Special Issue Editors

முனைவர் அ. குமார்
தமிழ்த்துறைத்தலைவர்
தொன்போஸ்கோ கல்லூரி, ஏலகிரிமலை

திருமதி. வே. செல்வி
தமிழ்த்துறைத்தலைவர்
இராஜா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
[illegible]

Published by
RAJA PUBLICATIONS
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

11 பகுதி-2
Part -2

Modern Thamizh Research
A Quarterly International Multilateral Thamizh Journal
*Published by*
Raja Publications, Trichy-23.

## INFORMATION FOR AUTHORS

Journal of **Modern Thamizh Research** (JMTR) is published Four (Every March, June, September & December) times a year. It primarily publishes significant original papers and survey articles on important advances of Modern Thamizh research in any of the following major areas:

- Classicalism (செவ்வியல்)
- Modernism (நவீனம்)
- Folklorism (நாட்டுப்புறவியல்)
- Anthologism (தொல்லியல்)
- Spiritualism (பக்தியியல்)
- Traditionalism (மரபியல்)
- Mediaism (ஊடகவியல்)
- Journlism (இதழியல்)
- Translationism (மொழிபெயர்ப்பியல்)
- Comparativism (ஒப்பியல்)
- Educationalism (கல்வியல்)
- Histroism (வரலாற்றியல்)

**Submission of the Manuscript**

I. Manuscripts written in Thamizh or English may be submitted in two copies to the Chief Editor **Dr. M. Sadik Batcha, Associate Professor of Tamil, PG and Research Department of Thamizh, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli - 620 020, Mobile : 9600535241, Email : ms_batcha@yahoo.co.in**

II. Manuscripts should be prepared according to the following format.
The first page of the manuscript should contain
(i) the title
(ii) the name(s) and institutional affiliation (s) of the author(s).
(iii) an abstract of not more than 100 words; and
(iv) a footnote giving the name and present address of the author to whom proofs and reprint order form should be addressed.
(v) References at the end of the manuscript should be arranged in alphabetical order of the first letter of the surname and styled and punctuated according to the following format.
[1] author(s) name(s), "Book name", Page, Edition number, Published Year, Book Publisher address.

**Publication of Accepted Papers**

The editorial Policy of JMTR is to give a clear reply about the acceptance of all submitted papers, within a period of one month.

**Subscription Rate of JMTR**

Libraries, Institutions and other establishments can subscribe for JMTR through publisher : **Raja Publications, 10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India. Mobile : 9600535241 website : rajapublications.com** and in case of any difficulty they should write to the Chief Editor at address given elsewhere.

| Subscription Rates | Years | Printed |
|---|---|---|
| (Year) India INR ₹ | 1 Years Only | 2000 |
| Other Countries INR ₹ | 1 Years Only | 3000 |
| (Life) India ₹ | 10 Years Only | 10,000 |
| Other Countries INR ₹ | 10 Years Only | 20,000 |

# முகவுரை

உலகில் முதல் மொழியாகிய எம்மொழித் தமிழ் உலகிற்குப் பல மொழிகளைக் கொடுத்தது. எம்முடைய மொழிக்கு எம்மொழியிலிருந்தும் எக்காலத்தும் எதுவும் தேவையிருந்ததில்லை. புதிய பொருட்களை உலகம் பெற்றெடுக்கும் போதெல்லாம் தனக்குத் தேவையான சொற்களைத் தானே உருவாக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியில் உருவானவற்றை ஆய்வாக உலகிற்கு எடுத்துச் சொல்லும் **நவீனத் தமிழாய்விதழ்** பணிகளில் மகிழ்வுடன் தொடர்ந்து பங்கேற்கும் ஆய்வாளர்களுக்கு ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது. தொடர்ந்து பங்கேற்கத் தங்கள் முன் வேண்டுகோள் வைக்கிறது.

நன்றியுடன்

**ஆசிரியர் குழு**

மற்றொன்று

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

(கலை & மனிதவியல்)

ஜனவரி - மார்ச்
ஏப்ரல் - ஜுன்
ஜுலை - செப்டம்பர்
அக்டோபர் - டிசம்பர்

Journal of

# CLASSICAL THAMIZH

*(A Quarterly International Multi lataral Thamizh Journal)*

January - March
April - June
July - September
October - December

ISSN:2321-0737

# வாழ்வியல் சிந்தனைகள் கூறும் சிறுபாணாற்றுப்படை

முனைவர் நா.ரா.ஷிபஜா
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு – 629701

## முன்னுரை:

தமிழ் இலக்கியங்களில் காலத்தால் முந்தியது சங்க இலக்கியமாகும். இவ்விலக்கியம் என்பது சங்கம் அமைத்து தமிழர் வளர்த்த இலக்கியம் என்பதாகும். அதாவது தொகையும் பாட்டும் ஆகும். தொகை என்பது எட்டுத்தொகை என்பதும், பாட்டு என்பது பத்துப்பாட்டு என்பதும் குறிப்பிடத்தக்கது. பத்துப்பாட்டு இலக்கியத்தில் செம்பாதி ஆற்றுப்படை இலக்கியமாகும். சான்றாக, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்ற மலைபடுகடாம், சிறுபாணாற்றுப்படை என்பன. இக்கட்டுரையில் சிறுபாணாற்றுப்படையில் இடம்பெறும் வாழ்வியற் செய்திகளை ஆராய்வது நோக்கமாகும்.

தமிழாகிய மொழியினை முத்தமிழ் என்பர். அதாவது இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பன. இவைகளில் இசைத்தமிழ் என்பது இயற்தமிழோடு இசை சேர்த்து பேசுவதாகும். சிறு பாணாற்றுப்படை இசைத்தமிழ் வகையைச் சார்ந்தது. எனவே தான் ஆற்றுப்படை இலக்கியங்கள் இசைக்கலைஞர்களைச் சார்ந்தே அமைகின்றது. இசைத்தமிழ் பற்றிய குறிப்புகள் காணப்படுவதை,

"அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்".

(முனைவர் தமிழண்ணல் உரை தொல்காப்பியம் எழுத்து 33)

என்ற நூற்பாவின் வாயிலாகக் குரல், துத்தம், கைக்கிளை, விளரி, இளி, தாரம், உழை என்னும் ஏழிசை பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசைநூற்போன்று தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். மேலே கூறப்பட்ட செங்கோட்டு யாழாகிய சிறிய யாழினை வைத்து இசைப்பவன் சிறுபாணன் ஆவான். தமிழ் இலக்கியங்களில் நான்கு வகையான இசைக்கருவிகள் இடம் பெறுவதைக் காண முடிகிறது. அதாவது (1) தோற்க்கருவிகள் (2) நரம்புக்கருவிகள் (3) கஞ்சக்கருவிகள் (4) துளைக்கருவிகள் என்பன. இவைகளில் நரம்புக் கருவிகளாகப் பேரியாழ் (21 நரம்பு) மகரயாழ் (19 நரம்பு) சகோடயாழ் (14 நரம்பு), செங்கோட்டுயாழ் (7 நரம்பு) என்பன.

## ஆற்றுப்படை இலக்கணம்:

சங்க இலக்கியங்களில் ஆற்றுப்படை என்பது ஒரு வள்ளலிடம் பரிசில் பெற்றுவரும் ஒருவன் தன் எதிர்பட்ட வேறொருவனை தான் பரிசில் பெற்ற தலைவனின் இயல்பு முதலியவற்றைக் கூறி, அவனிடம் செல்லும்படி கூறுவதை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றுடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்".

(தமிழண்ணல் உரை தொல்காப்பியம் பொருள் 1037)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

## பாட்டுடைத்தலைவன் மற்றும் பாடிய புலவர்:

சிறுபாணாற்றுப்படையில் படையில் 'ஓய்மான்நாட்டு நல்லியக் கோடன்' என்பவன் பாட்டுடைத்தலைவன் ஆவான். 'ஓய்மான் நாடு' என்பது திண்டிவனம் சார்ந்த பகுதியாகும். இந்நூலை எழுதியவர் இடைக்கழி நாட்டு நல்லூர்

நத்தத்தனார் ஆவார். 'இடைக்கழி நாடு' சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள செங்கல்பட்டு மாவட்டத்து 'மதுராந்தகம்' வட்டத்தில் உப்பங்கழிக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியாகும். தற்போது 'எடக்கநாடு' என்று மருவி வழங்கப்படுவதாக ச.வே.சுப்பிரமணியன் கூறுகிறார். இது 269 பாடலடிகளை உடையது.

பாணர் மற்றும் விறலி சொற்பொருள் விளக்கம்:

'பண்' என்ற சொல்லின் அடிப்படையில் பிறந்தது பாண்' என்ற சொல்லாகும். பாணர்கள் இசைத்தமிழைப் போற்றி வளர்த்தவர்கள் ஆவர். இவர்களைப் பாணர் என அழைக்கப்பட்டனர். பாணர்களை மூன்று வகைப்படுத்துவர். அதாவது இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என்பர். இசைப்பாணர் சங்கீதம் இசைப்பவர்கள். யாழ்ப்பாணர் என்பவர் யாழிசைக் கருவியினை வைத்து இசைப்பவர். மண்டைப்பாணர் என்பவர் இரந்துண்டு வாழ்பவர். யாழ்ப்பாணர்களை (1) சிறுபாணர் (2) பெரும்பாணர் என இரண்டு வகைப்படுவர். சிறுபாணர் என்பவர் சிறியாழ் வைத்து இசைப்பவர் (செங்கோட்டுயாழ்) பேரியாழ் இசைப்பவர் பெரும்பாணர் என்பவர். (21 நரம்புகள்) சிறுபாணாற்றுப் படையில், சிறியாழ் என்பதனை,

"இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ"

(வித்துவான் M.நாராயண வேலுப்பிள்ளை உரை: சிறு.பா 35)

என்ற பாடலடி கூறுகிறது.

'விறலி' என்ற சொல்லில் 'விறலி' என்பதற்கு மெய்ப்பாடு என்ற பொருள் தருகிறது அகராதி. மெய்யின்கண் உணர்வு வெளிப்படுமாறு ஆடும் திறன் வாய்க்கப் பெற்ற பெண் விறலி எனப்படுவர். விறலி என்பவள் பாணனுடைய மனைவியாவாள். பாடுவதோடு விறல்பட ஆடுவதால் விறலி என்றும் பெயர் பெறுவாள். அவள் தனியே சென்று பரிசில் பெறுவதை 'விறலியாற்றுப்படை' எனப் புறநானூறு அழைக்கின்றது. சிறு பாணாற்றுப்படையில் இசைக் கலைஞர்களாகப் பாணனும், விறலியும் ஆகியோர் பாத்திரங்களாகக் காணப்படுகின்றனர்.

சிறுபாணனின் இயல்புநிலை:

சிறுபாணாற்றுப்படையில் இரவலனின் இயல்புகளை இடப்பக்கத்தில்

"பொன் வார்த்து அன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ"

(வித்துவான் M. நாராயண வேலுப்பிள்ளை உரை: சிறு.பா 34-35)

என்னும் பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

வறுமை நிலை:

சிறுபாணனும் விறலியும் நல்லியக் கோடனைப் பார்ப்பதற்கு முன்னர் வறுமையான நிலையில் இருந்ததை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் கூறுகிறார். அதாவது பசியால் உண்டாகும் துன்பம் எவ்வாறானது என்பதை மணிமேகலை இலக்கியம்,

"குடிப்பிறப்பு அழிக்கும், விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி"

(புலியூர்கேசிகன் உரை மணிமேகலை பாடல் வரி 75-80)

என்னும் பாடலடியாக உணரமுடிகிறது. சிறு பாணனின் வீட்டின் சமையலறையில் பல நாள் உணவு சமைக்காமல் இருந்ததையும், அடுப்பின் உள்ளே காளான் பூத்து உள்ளதையும் இவ்விடத்தின் உள்ளே நாய் தன்குட்டிகளை ஈன்று பால் கொடுக்க முடியாமல் குரைப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். இதனை,

"முன்னாள் சென்றனம் ஆக இந்நாள்
திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்தல் நோனாது

புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முது கவர்க் கணச் சிதல் அரித்த
பூழி பூத்த புழல் காளாம்பி".

(வித்துவான் M. நாராயண வேலுப்பிள்ளை சிறு.பா.129-134)

என்னும் பாடலடிகளால் உணரலாம். மேலும் பெருஞ்சித்தரனாரின் பாடலிலும் "ஆடு நனிமறந்த கோடுயர் அடுப்பின் ஆம்பிபூப்ப" என்ற வரியின் வாயிலாக அடுப்பில் காளான் தோன்றியுள்ள நிலையும், காளான் தோன்றியிருப்பதால் வறுமை நிறைந்திருப்பதைத் தெளிவுப் படுத்துகிறது என்பதையும் உணர்த்துகிறார்.

வழியின் துன்பநிலை:

சிறுபாணனும் விறலியரும் வெப்பம் மிகுந்த மணல் பரப்பில் மெதுவாக நடந்து சென்றதையும், வெயிலின் காரணமாகக் கூர்மையான பரல்கற்களும், கால்களைக் கிழித்த நிகழ்வும், முதுவேனில் காலத்தில் சூரியனின் வெப்பம் காலையிலே வெப்பம் பெற்று விளங்குவதால் பாலைநிலச்சுரம் வழியே கடம்ப மரத்தின் வரிநிழலில் தங்கி சென்றனர் என்பதை,

"வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனில் நின்ற வெம்பத வழிநாட்
காலைஞா யிற்றுக்கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன் முதல் மரா அத்த வரிநிழல் அசைஇ"
(வித்துவான் M. நாராயண வேலுப்பிள்ளை உரை சிறு.பாடல் 8-12)

என்னும் பாடலடிகளால் தெளியலாம்.

விருந்தோம்பல் நிலை:

சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பல் செய்திகள் இடம் பெற்றுள்ளன. தமிழர்களின் தலையாய அறம் விருந்தோம்பும் பண்பாகும். வள்ளுவப் பெருந்தகையாகும்.

"வருவிருந்து வைகலும் ஓம்புவ
வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"
(டாக்டர் பெ. கிருஷ்ணன் உரை. திருக்குறள்

என்ற குறள்பா கூறுகின்றது. அதாவ தன்னைத்தேடி வருகின்ற விருந்தினரை ந தவறாமல் உபசரிக்கும் ஒருவனுடைய செல்வ குறைந்து விடுவதில்லை. அப்பண்பே அவன செல்வத்தை வளர்த்து விடும் என்கிறது.

மன்னன் கொடுக்கும் விருந்தோம்பல்:

ஓய்மான்நாட்டு நல்லியக்கோடனின் விருந்தோம்பலைக் கூறும் போதுஇ

"காம்பு சொலித் தன்ன அறுவை உடீகிப்
பாம்பு வெகுண் டன்ன தேறல் நல்கிக்"
(சிறு.பா 236-237)

என்பதும்,

"இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றது
விளங்குபொற் கலத்தில் விரும்புவன
பேணி
ஆனா விருப்பின் தானின்று ஊட்டித"
(வித்துவான் ஆ.நாராயண வேலுப்பிள்ளை உரை சிறு.பா 243-245)

என்னும் பாடலடிகளின் மூலம் மூங்கிலின் உட்பட்டையை உரித்தாற்போன்ற ஆடையை உடுக்கச் செய்வதும், பாம்பு நஞ்சு ஏறி மயக்கத்தைப் போல களிப்பைத் தரும் கள்ளை உண்ணச் செய்வதும்இ பொற்கலத்தில் பல்வேறு வகையான உணவு வகைகளைக் கொடுத்ததையும் அறிய முடிகிறது.

நெய்தல் நில மக்களின் விருந்தோம்பல்:

ஓய்மான் நாட்டு நல்லியக் கோடனின் கடற்கரைப் பட்டினமான எயிற்பட்டினத்தில் வாழ்ந்து வரும் பரதவ இனமக்கள் சிறு பாணனுக்கும் விறலிக்கும் குளிர்ச்சிப் பொருந்திய கள்ளினைக் கொடுத்தனர் என்பதை,

"பழம் படுதேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்"
(வித்துவான் M. நாராயண வேலுப்பிள்ளை உரை சிறு.பா.159-160)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும், குழல் என்ற மீனைச்சுட்டு தருவான் என்பதை,

"அறற்குழற் பாணி தூங்கியவரொடு
வறற்குழற் சூட்டின் வயின் வயின்
பெறுகுவீர்". (சிறு.பா.162-163)

என்னும் பாடலடிகள் தெளிவுப் படுத்துகின்றன.

## முல்லை நில மக்களின் விருந்தோம்பல்:

முல்லை நில மக்கள் விருந்தோம்பல் செய்ததை சிறுபாணாற்றுப்படை சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. சான்றாக,

"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச்சில் வளை ஆயமொடு".
(சிறு.பா.175-176)

என்னும் பாடலடிகள் மூலம் தெளியலாம். அதாவது, எயினக்குல பெண்டிர் தாம் சமைத்த இனிய புளியங்கறி இட்ட சோற்றையும், இதனோடு பசி நீங்க இறைச்சியையும் தருவார்கள் என்பதையும், இவைகளை சூட்டோடு கொடுத்ததையும் உணர முடிகிறது.

## மருத நில மக்கள் கொடுத்த விருந்தோம்பல்:

இரவலர்களுக்கு மருத நில மக்கள் உணவு வழங்கியதை,

"அவைப்பு மாண் அரிசி அமலை
வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு
பெறுகுவீர்". (சிறு.பா.194-195)

என்னும் பாடலடிகளின் வழியாக வெண்மையான அரிசியால் ஆக்கிய சோற்றை நண்டின் கலவையுடன் சேர்த்து தருவார்கள் என்பதையும் உணர்த்துகின்றன.

## மன்னன் பரிசில் அளித்தல்:

இரவலர்கள் பல நிலங்களைக் கடந்து வந்து ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனைச் சந்தித்தப் பிறகு, அவன் இரவலர்கள் வாழ்வில் நிரந்தரமான வருமானம் பெற வேண்டும் என நினைத்து பரிசில் கொடுத்தான் என்பதை,

"சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம் அவன் நின்றும் வருதும் நீயிரும்
இவண் நயந்து இருந்த இரும் பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவிபர்
ஆயின்".
(வித்துவான் M. நாராயண வேலுப்பிள்ளை சிறுபா 142-145)

என்னும் பாடலடிகள் வாயிலாக யானை, பெரியதேர் போன்றவைற்றையும் எங்களுக்குக் கொடுத்தான் என்றும், அதுபோல் நீங்களும் சென்றால் எல்லா வளமும் பெற்று சிறப்பாக வாழலாம் என்பதை ஆற்றுப்படை இலக்கணம் பொருந்தி அமைத்துள்ளார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தனார். மேலும் ஆற்றுப்படை இலக்கியங்கள் நானில வாழ்வியலை எடுத்துக் கூறுகிறது. ஆனால், மற்ற ஆற்றுப்படை இலக்கியங்களை விட சிறுபாணாற்றுப் படை இலக்கியம் மூன்று திணை மக்களின் வாழ்வியலை உணர்த்துகின்றன.

## முடிவுரை:

தமிழகத்தில் வாழ்ந்த இசைக்கலைஞர்களில் சிறுபாணர், விறலியர் போன்றோரின் வறுமையும், சிறுபாணாற்றுப்படையில் ஆற்றுப்படை இலக்கணம் பொருந்தி வருவதையும் உணர முடிகிறது. பாணர்கள் வறுமையாக வாழ்ந்தாலும் தமிழரின் மானம் போற்றும் பண்பு பெற்று விளங்கியதையும் உறுதி கூற முடிகிறது. சிறு பாணர்கள், விறலியர்கள் ஆகியோரின் இசைத்திறமையும், பண்பாட்டுக் கூறுகளும் சிறந்து விளங்கின. இவர்கள் வறுமையோடு வாழ்ந்தாலும் செம்மையான வாழ்வு பெறறவர்கள் என்பதையும், பிறருக்குக் கொடுக்கும் மனம் படைத்தவர்கள்

என்பதையும் உணரமுடிகிறது. தாம் பெற்ற இன்பம் எல்லோரும் பெற வேண்டும் என்ற மனித நேயக் கூறுகள் மன்னர்களிடமும் இரவலர்களிடமும் நிறைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார். நல்லியக் கோடனின் சிறப்பும் இரவலர்களிடமும் நிறைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார். நல்லியக் கோடனின் சிறப்பும் இரவலர்களிடம் காட்டும் உறவும் முக்கியமானது என்பதை இதனால் அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**


முதன்மை ஆதார நூல்:

(1) பத்துப்பாட்டு, உரை வித்துவான் M. நாராயணவேலுப்பிள்ளை
முதற்பதிப்பு 1994
முல்லைநிலையம்
மறுபதிப்பு 2009
9 பாரதிநகர், முதல் தெரு.
முதல் தெரு, தி.நகர். சென்னை-600017.

துணை நின்ற நூற்கள்:

(1) தொல்காப்பியம் (எழுத்து) உரை முனைவர் : தமிழண்ணல் பாடல்:33
முதற்பதிப்பு ஆகஸ்ட் 1999
மணிவாசகர் பதிப்பகம் 31,
நான்காம் பதிப்பு செப்டம்பர்2006
சிங்கர்தெரு, பாரிமுனை
சென்னை – 600108

(2) தொல்காப்பியம் (பொருள்) உரை முனைவர் தமிழண்ணல் பாடல்:1037
முதற்பதிப்பு செப்டம்பர் 2003
இரண்டாம் அக்டோபர் 2006
மணிவாசகர் பதிப்பகம்

(3) மணிமேகலை உரை புலியூர்க்கேசிகன்
பாடல்வரி 75-80
முதற்பதிப்பு 1961
மணிவாசகர் பதிப்பகம்
மறுபதிப்பு 2009

(4) திருக்குறள் உரை டாக்டர் பெ. கிருஷ்ணன் குறள் 83
முதற்பதிப்பு ஆகஸ்ட் 2003, பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு.


♦♦♦

என்பதையும் உணரமுடிகிறது. தாம் பெற்ற இன்பம் எல்லோரும் பெற வேண்டும் என்ற மனித நேயக் கூறுகள் மன்னர்களிடமும் இரவலர்களிடமும் நிறைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார். நல்லியக் கோடனின் சிறப்பும் இரவலர்களிடமும் நிறைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார். நல்லியக் கோடனின் சிறப்பும் இரவலர்களிடம் காட்டும் உறவும் முக்கியமானது என்பதை இதனால் அறிய முடிகிறது.


அடிக்குறிப்புகள்:

முதன்மை ஆதார நூல்:

(1) பத்துப்பாட்டு, உரை வித்துவான் M. நாராயணவேலுப்பிள்ளை
முதற்பதிப்பு 1994
முல்லைநிலையம்
மறுபதிப்பு 2009
9 பாரதிநகர், முதல் தெரு,
முதல் தெரு, தி.நகர். சென்னை-600017.

துணை நின்ற நூற்கள்:

(1) தொல்காப்பியம் (எழுத்து) உரை முனைவர் : தமிழண்ணல் பாடல்:33
முதற்பதிப்பு ஆகஸ்ட் 1999
மணிவாசகர் பதிப்பகம் 31,
நான்காம் பதிப்பு செப்டம்பர்2006
சிங்கர்தெரு, பாரிமுனை
சென்னை – 600108

(2) தொல்காப்பியம் (பொருள்) உரை முனைவர் தமிழண்ணல் பாடல்:1037
முதற்பதிப்பு செப்டம்பர் 2003
இரண்டாம் அக்டோபர் 2006
மணிவாசகர் பதிப்பகம்

(3) மணிமேகலை உரை புலியூர்க்கேசிகன் பாடல்வரி 75-80
முதற்பதிப்பு 1961
மணிவாசகர் பதிப்பகம்
மறுபதிப்பு 2009

(4) திருக்குறள் உரை டாக்டர் பெ. கிருஷ்ணன் குறள் 83
முதற்பதிப்பு ஆகஸ்ட் 2003, பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு.


♦♦♦

| | | | |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 68 [?] | K.RADHAKRISHNAN [?] R.PERUMAL [?] | THE USE OF THE [illegible] AMONG GOVERNMENT AND PRIVATE SCHOOL CHILDREN | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 77 [?] | SANTHOSH S | DRAVIDIAN MOVEMENT AND A NEW LITERARY RENAISSANCE IN TAMIL: A HISTORICAL PERSPECTIVE | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 95 [?] | T.VIVANANTHARASA | ROLE OF THEATRE IN THE PROCESS OF COMMUNITY BUILDING | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 107 | S.SUGUMAR [?] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2019-2020**

## S.No:9

**Title of paper** : **Sanka kavithaikal Pesum Aarukalin Sirappu**

**Name of journal** : Shanlax International Journals

**Year of publication** : 2020

**ISSN number** : 2321-788X

**Link to article** :
https://www.muslimartscollege.in/naac/lally_ugc_care_list20240729172816.pdf

Vol. 7 | Special Issue 1 | MARCH 2020

Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

திருவள்ளுவர் கல்லூரி

(தேசியத் தரமதிப்பீட்டில் தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் – 627 425

380

தமிழ்த்துறை

மற்றும்

Shanlax International Journal of Arts, Science and Humanities

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

பதிப்பாசிரியர்

பேரா.ச. கண்ணகி

SIJASH NAAS Rated Journal
NAAS Score 2.13

P-ISSN 2321-788X

தொகுதி 2

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

PKP PUBLIC KNOWLEDGE PROJECT

OJS

SHANLAX INTERNATIONAL JOURNALS

ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

(தேசியக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | பேரா. ச. கண்ணகி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2020 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>திருவள்ளுவர் கல்லூரி<br>பாபநாசம் - 627 425<br>திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு |
| கணினிஅச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 196 |

**ISSN : 2321-788X**

International Tamil Conference on ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

| | | |
|---|---|---|
| Editor | : | Prof. S. Kannaki |
| Copy Right | : | Editor |
| First Edition | : | March, 2020 |
| Published | : | Department of Tamil<br>Thiruvalluvar College<br>Papanasam - 627 425<br>Tirunelveli (Dist)., Tamil Nadu |
| Printed at | : | Shanlax Press |
| Pages | : | 196 |

Vol. 7 Special Issue I March, 2020

P-ISSN: 2321-788X Impact Factor: 3.025

**Thiruvalluvar College**
*Papanasam*

**Shanlax International Journal of Arts, Science and Humanities**
*Madurai*

இணைந்து நடத்தும்

# "ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்"

பதிப்பாசிரியர்

பேரா. ச. கண்ணகி

தொகுதி 2

| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 12 | எட்டுத்தொகை நூல்களில் வைணவம்<br>**ப. ராஜேஸ்வரி** | 50 |
| 13 | சங்க அகப்பாடல்களில் அறக் கோட்பாடுகள்<br>**முனைவர் சா. கருணாகரன்** | 55 |
| 14 | நற்றிணை காட்டும் செம்மாந்த வாழ்வியல் கோட்பாடுகள்<br>**முனைவர் ஆ. யமுனாம்பாள்** | 59 |
| 15 | சங்கக் கவிதைகள் பேசும் ஆறுகளின் சிறப்பு<br>**முனைவர் ஜா. லாலி ஏதேஸ்** | 63 |
| 16 | சங்க இலக்கியங்களில் பெண்ணியம்<br>**முனைவர் நா. முருகேஸ்வரி** | 68 |
| 17 | சங்க இலக்கியத்தில் வேளாண் சடங்குகள்<br>**அ. ரஜியா பானு** | 71 |
| 18 | சங்க புறநூல்களில் கொடைச்சிறப்பு<br>**கோ. சரண்ராஜ்** | 74 |
| 19 | மாண்புடைப் புலவர்கள்<br>**சு. மார்செலின்** | 81 |
| 20 | எட்டுத்தொகை நூல்களில் பௌத்தம்<br>**த. பரிமளா** | 85 |
| 21 | சங்க இலக்கியத்தில் ஆடை அணிகலன்கள்<br>**முனைவர் செ. செல்வராணி** | 88 |
| 22 | புறநானூற்றில் ஔவையார் பாடல்கள் ஒரு பார்வை<br>(நெடுமான் அஞ்சி பாடல்களை முன்வைத்து)<br>**முனைவர் கோ.சி. கோலப்பதாஸ்** | 92 |

# சங்கக் கவிதைகள் பேசும் ஆறுகளின் சிறப்பு

முனைவர் ஜா. லாலி ஏதேஸ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு

Volume: 7

Special Issue: 1

Month: March

Year: 2020

P-ISSN: 2321-788X

முன்னுரை

"காவிரி தென் பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருநதி என
மேவிய ஆறு பலவோடத் திரு
மேனி செழித்த தமிழ்நாடு"

என்ற பாரதியாரின் கூற்றிற்கிணங்க கல்தோன்றி மண் தோன்றா காலத்தோடு வாளோடு முன் தோன்றிய குடி தமிழ்குடி. இக்குடிமக்களின் வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் காலக்கண்ணாடி தான் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்று கூறப்படும் சங்க கவிதைகள் எனலாம். இக்கவிதைகளில் ஆறுகளின் சிறப்பைப்பற்றி மிக அழகாக புலவர்கள் பாடியுள்ளனர். தமிழன் ஆறுகள் இருக்கும் இடத்தை தன் இருப்பிடமாகக் கொண்டு தான் வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். அதோடு நாகரிகமும் வளர்ந்தன. "ஆறில்லாத ஊருக்கு அழகு பாழ்" என்று சொல்வார்கள் சான்றோர்கள். இதனை அறிந்துக் கொண்ட தமிழன், ஆறுகள் இருக்கும் இடத்தை தன் ஊராக ஆக்கிக் கொண்டு தன்னையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையுடன் ஆக்கி வாழ தொடங்கினான். தண்ணீர் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பதை வள்ளுவ பெருமகனார்,

"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்றி யமையாது ஒழுக்கு" (திரு. 20)

என்று குறிப்பிடுகிறார். மக்கள் ஒழுக்கத்துடன் சிறப்பாய் வாழ நீர் மிகவும் அவசியம். இத்தகைய நீரினை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பவை ஆறுகள். இத்தகைய ஆறுகளின் சிறப்பை சங்க கவிதைகளில் காண முடிகிறது. இதனைப் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## சங்க கவிதை பேசும் ஆறுகள்

சங்கப் பாடல்களில் ஆறுகள் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் பல்வேறு பெயருடன் விளங்குகிறது. இந்த ஆற்றின் இயல்பு, வளம், அழகு, நிலை, என ஆற்றினை புலவர்கள் மிக அழகாக வர்ணித்து பேசுகின்றனர்.

காவிரியாறு, பொருநையாறு, வையையாறு, சோணையாறு, அரிசிலாறு, பேரியாறு என பல வகையான ஆறுகளைப் பற்றி பேசப்படுகிறது. இத்தகைய ஆறுகளில் நீர் மலை அருவிகள் வழியாக பெறப்படுகிறது. இத்தகைய ஆற்று நீர் தூய்மையானது என்பதை,

**"கள்ளி அம் பேரியாற்று வெண் நுரை கலங்க"**
**(அகம் 149:7)**

என்ற பாடலடிகள் வாயிலாக அறிய முடிகிறது.

**வையை ஆறு**

பாண்டிய நாட்டிற்கு தாயாக விளங்குவது வையை ஆறு. இதனை "தமிழ் நதி" என்று போற்றப்படுகிறது. சங்க இலக்கியத்தில் புனித நதியாகப் போற்றி புகழ்ந்துள்ளனர். வையை ஏல ஆண்டிப்பட்டி மலையில் தோன்றி, மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, பரமக்குடி ஆகிய இடங்களில் பாய்ந்து வளம் கொடுக்கிறது. பண்டையத் தமிழர்கள் ஆற்றுடன் இணைந்தே தங்கள் வாழ்க்கையை வாழ்ந்தனர். பரிபாடலில் தலைவன் இல்லத்தில் நிகழ்ந்த நிகழ்வைப் பற்றி பேசப்படுகிறது. வையை ஆற்றில் புது வெள்ளம் வருகின்றது மக்கள் களிப்புடன் சென்று நீராடி இன்புற்றிருந்தனர் என்பதை (பரிபாடல் 6-7) பாடல் வரிகள் வாயிலாக அறிய முடிகிறது. வையை ஆற்றில் வெள்ளம் வரும் போது மக்கள் வாழ்த்தி வழிபாடு செய்து விழா எடுப்பர். வையையில் தானே புனல் பெருகி வருவதாலும், அவ்வாறு பெருகிவரும் வெள்ளத்திற்கு, பாணர் கூத்தர் ஆகியோர் அவர்களது அன்புமிக்க விருப்பத்திற்குரிய கூட்டத்துடன் ஒன்றாக கூடி இன்று போல் என்றும் வையையும் பாண்டிய மன்னனையும் மதுரை மாநகரத்தையும் வாழ்த்தி வணங்கினர் என்ற செய்தியை பரிபாடலில் சுட்டி காட்டுகிறார்.

**"இலம்படு புலவர் ஏற்ற கை வொளுமரப்**
**பொலம் சொரி வழுதியின், புனல் இறை பரப்பி**
**.........................................**
**ஒருங்கு அமர் ஆயமொரு, ஏத்தினர் தொழவெ"**
**(வையை 1-126-131)**

என்ற வரிகளில் வறுமையால் துன்புற்று வாழ்ந்த புலவர்கள் இரத்தலுக்கு ஏந்திய கைகள் நிறையுமாறு பொன்னை வாரி வழங்கும் பாண்டிய மன்னனைப் போல வையையில் வருகின்ற நீரானது பாண்டிய மன்னனுடைய கொடை தன்மையை உலகமெல்லாம் பறைச்சாற்ற வையை ஆற்றின் நீர் அங்கு உள்ள வயல் நிலங்களை செழிப்பாக்கியது என்பதை, பரிபாடலில் உள்ள பாடல்கள் வாயிலாக அறிய முடிகிறது. வைகை ஆறு சங்கப் பாடல்களில் பல இடங்களில் பயின்று வந்துள்ளன. இவ்வாற்றின் சிறப்பை கலித்தொகை, புறநானூறு, பரிபாடல் போன்ற இலக்கியங்களில் பேசப்படுகிறது.

**"பூமலிந்த வையையாற்றில் புதுமணல் ஆடுவதை**
**பெருகரை வாய்சூழ்ந்த பூமலி வையை**
**வருபுனல் ஆடத் தவிர்ந்தேன்"**
**(மருதகலி 3**

என்ற வரிகளில் இவற்றை காணலாம்.

**வைகையின் சிறப்பு**

கார் காலத்தில் ஆற்றங்கரையின் இருபக்க இருந்த மரங்கள் எல்லாம் பூங்கொத்துக்க நிறைந்திருந்தன. அவற்றின் இடையே செ வைகையாறு பெண் ஒருத்தி பூச்சுட்டி கிட போல் இருந்தது. மதுரை மாநகரைச் ஓடும் வைகையாறு மதுரை மாநகரம் தன் சுற்றி பூமாலையிட்டு மகிழ்ந்ததுப்போல இ எனவும், வையைாற்று நீர் மது கோட்டையை சுற்றி புகுந்து மு மோதியது தாக்கியது. அதுபோல ட போருக்கு வந்து மதுரையை வன இல்லை இதனை,

**"கார் முற்று இனர் வாழ்ந்த கமழ் தே**
**மலர் வேய்ந்து**
**சீர் முற்றிப் புலவர்வாய் சிறப்பெ**
**இருநிலம்**
**.........................................**
**நின்முற்று மதில் பொரூ உம் பல**
**நேராதார்**

போகமுற்று ஒன்று அறியாத புரிசைசூழ் புனல்
ஊரன்"

(மருதக்கலி 2)

என்ற வரிகளில் பேசப்படுகின்றன. வைகையில் நீர் நிரம்பி பெருகி வருதல், காதலர்கள் களிப்புடன் விளையாட செல்லுதல், நீர் விளையாடல் புதுவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுதல் அவ்வெள்ளம், மிளகு, சந்தனம் மரத்துண்டு இவற்றை கரையில் குவித்தல் நெய் குடையும் தயிரிலிருந்து வரும் நுரைபோல் அலைகள் கரையில் மோதல் போன்ற சிறப்புகளை சங்கப்பாடலாகிய கலித்தொகை, (பரி பாடல் 16:1-4) ஆகிய வரிகளில் காண முடிகிறது.

## பொருநையாறு

தாமிரபரணியாற்றை தான் பொருநை நதி என அழைக்கின்றனர். இந்தியாவின் சிறந்த ஆறுகளில் ஒன்று தாமிரபரணி. இது மேற்குத் தொடர்ச்சி மலையில் பற்பல குன்றுகளை கடந்து வருகின்றது. ஆற்றில் உள்ள பற்பல நீர்வீழ்ச்சிகள் அற்புதமாக உள்ளது. பொதிகை மலையில் உருவாகி பாணை தீர்த்தம், அகத்தியர் தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களைக் கடந்து பாபநாசம் என்ற சிவன் தலத்தின் வழியாக வருகிறது. தமிழகத்தின் வற்றாத நீரோடும் ஆறு. இது பொதிகை மலையில் உள்ள மூலிகை களின் நற்குணங்களைக் கொண்டுள்ளது என்று இராமாயணத்தில் கூறியுள்ளார். வால்மீகி. தாமிரபரணி தாமிரம் பரணி எனப் பிரித்தால் தாமிரம் என்றால் செம்பு, பரணி என்றால் நதி - இரண்டும் சேர்ந்து தாமிரபரணி ஆறு தாமிரத்து நோய் தீர்க்கும் அரிய மருந்து. இந்த ஆற்றில் குளித்தால் நோய் தீர்ந்து அற்புதம் மலர்கிறது. தாமிரம் நிறைந்த ஆறு தாமிரபரணி ஆகும்.

## பொருநையாற்றின் சிறப்பு

தாமிரபரணி என்றழைக்கப்படும் பொருநையாற்றின் சிறப்பைப் பற்றி கூறும் போது நோய் தீர்க்கும் குணம் படைத்தவை. இதனை குண சிந்தாமணி என்ற சித்த மருத்துவ நூலில்

"தாம்பிரவாற்றுப் புனலால் - சுரமும் பித்துவிழித்
தும்பிரமுட் காய்ச்சல் சுவாச நோயட்
சோம்பிடமிகக்
கக்கு கய மென்புருக்கி கைகா லெரிவடனெ
மிக்குறுதா கங்களும்போம் விள்"

என்ற வரிகளில் தாமிரபரணியின் நீரானது எல்லா வகைக் காய்ச்சல் பித்த தோஷம், கண் புகைச்சல், உள்சுரம், சுவாச ரோகம், கக்குவான் எலுபுருக்கி, கை கால் எரிச்சல் மற்றும் மிகுந்த வேட்கை ஆகியவற்றை தீர்க்கும் குணமுடையது என்பதை விளக்குகிறது. தாமிரபரணி ஆற்றில் 44 ஆண்டுக்கு ஒரு முறை நடைக்கு மகா புஷ்கர்ணத் திருவிழா 12 தினங்கள் சிறப்பாக நடைபெறுகிறது என்பது இவ் ஆற்றின் சிறப்பாகும்.

## காவிரியாறு

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பது ஔவையின் மொழி. நீர் நிலைகள் இல்லாத ஊரில் வாழ்வது என்பது இயலாத காரியம். அதனாலேயே ஆறில்லாத ஊர் பாழ் என்றார் ஔவை பிராட்டி. தமிழகத்தை வற்றாது வளப்படுத்தும் ஆறுகளில் பெரும்பாலானவை மேற்கு மலை சாரலில் தோன்றி வழிந்தோடும் ஆறுகள் தமிழ் சான்றோரால் போற்றும் புகழமைந்த பேராறுகளில் காவிரியாறும் ஒன்று. சேரநாடாகிய குடநாட்டில் தோன்றி தன்னைப் போன்ற சிற்றாறுகளுடன் கூடி கொங்கு நாட்டை கடந்து சோழ நாட்டை வளப்படுத்தி கடலில் கலக்கும் ஆறு காவிரி. காவிரி கலக்கும் இடத்தில் தான் புகார் துறைமுகம் அமைந்துள்ளது. காவிரிக் கரையில் அமைந்த சோழநாடும் காவிரிபூம் பட்டினம் என்று சிறப்பிக்கப்படுகிறது. இதனை, இளங்கோ அடிகள்,

"வாழிய வன்றன் வளநாடுமகவாய்
வளர்க்குந்தாயாகி
ஊழியுய்க்கும் பேருதவியொழியாய் வாழி
காவேரி"

(சிலப் : கானல்வரி 27)

என்று காவிரியைத் தாயாகவும் காவிரியில் படியும் மக்கள் கூட்டத்தை குழவியாகவும் காட்சிப்படுத்துகிறார். காவிரி தன் நிலையில் இருந்து என்றும் மாறாமல் மக்களைவாழ்விக்க கூடியவை என்பதை (புறநாநூற்று 35:7-8) வரிகளில் குறிப்பிடுகிறார். அரசனின் கோல் திரிந்தால் மழை குறையும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. சோழர்கள் தங்கள் நிலையிலிருந்து மாறாதவர்கள். அதனால் காவிரி என்றும் பொய்ப்பதில்லை என்பதை.

"தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புலன்மாறி
வான் பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி"

(சிலப் : கானல்வரி 25)

ஆகியவரிகளில்காவிரிப்போற்றப்படுகிறது. மேலும் காவிரி தான் பாயும் பகுதிகளில் எல்லாம் பொன் விளையும் பூமியென வளங்கொழிக்க செய்வதால் பொன்னி என்று போற்றுவர் என்கிறார் இராமகிருஷ்ண சாஸ்திரி. கரிகால் பெருவளத்தானும், ஒட்டக் கூத்தரால் பொன்னி கரைகண்ட பூபதி என்று போற்றப்படுகிறார்.

### காவிரியாற்றின் சிறப்பு

கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கும் பிரம்மகிரியில் தலைக்காவிரி எனும் இடத்தில் காவிரி உருவாகிறது. கர்நாடக மாநிலத்தில் குடகு, ஹாசன், மைசூர், மாண்டிய பெங்களூர், சாம்ராஜ் நகர் ஆகிய மாவட்டத்திலும், தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டம் வழியாக சென்று வங்காள விரிகுடாவில் கடலில் கலக்கிறது. இவ்வாற்றின் சிறப்பை அகநானூறு பாடல் வரிகளில் காண முடிகிறது.

நான்கு வேதங்களையும், பழம் பெரு நூலையும், தந்தருளிய முக்கண்களையுடைய சிவபெருமான் எழுந்தருளிய சிறப்பினைக் கொண்ட பூக்கள் விரிந்த அகன்ற துறையினை உடையது காவேரி. அதிவேகத்துடன் ஆழ்ந்து ஓடி வரும் நீர் நுண்மணல்களைக் கொண்டு வந்து குவித்து மெடாக்கிய மணற்குவியலைக் கொண்ட சிறப்புடையது. இதனை,

"காவிரிப் பேர்யாற்று அயிர்கொண்டு ஈண்டி
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்"

(அகம் 181)

குழைமாய் காவிரிக் கடல்மண்டு,
பெருந்துறை

(அகம் 123)

என்ற வரிகளில் காவிரியின் வளமும் சிறப்பும் புலப்படுகிறது.

### பேரியாறு

சங்க காலத்தில் சேரர்களின் தலைநகரமாக இருந்த கரூரில் பேரியாறு பாய்ந்து வருகிறது. சேரநாட்டு ஆறுகளில் சிறப்பான ஆறு பேரியாறு. சுள்ளி என்னும் பெயருடையது. காடு கழனியெல்லாம் நிறையும்படி எங்கும் பரந்து செல்லும் பேரியாற்று நீர் கரையை தொட்டும் செல்லும் ஆற்றல் வாய்ந்தது.

இவ்வாற்றின் சிறப்பைப் பற்றி சங்க இலக்கியநூலானபதிற்றுப்பத்தில்கோங்கும் வேங்கையுடதெங்கும் பூங்கொத்துக்களையுடைய கொன்றையும் உதிர்ந்த பூக்களின் பரப்பினால் நீர் சுரந்து ஒழுகும் மகரந்தத்தோடும் வண்டுக் கூட்டங்கள் இசைபாட திருமாலின் மார்பில் மாலை போலப் பெரிய மலையினை குறுக்கிட்டு செல்லும் என்பதை.

"கோங்கும் வேங்கை தூங்கினர்க் கொன்றை
நாகம் திலகம் நறுங்காழாரம்
பெருமலை விளங்கிய பேரியாற்றடை கரை"
(பதிற்றுபத்து 28:9-14)

என்ற வரிகளில் காணலாம்.

**பேரியாற்றின் சிறப்பு**

சுள்ளி என்னும் பெயர் கொண்ட பேரியாறு சேர அரசர்க்கு உரியது. அவ்வழகிய ஆற்றின் வெண்ணிற நுரை கலங்குமாறு யவனக் கப்பல்கள் வந்து சென்றன என்று தாயங்கண்ணனார்

"சுள்ளி அம் பேரியாற்று வெண்நுரைக்கலங்க"
(அகம் பா.149-7)

என்னும் பாடலடியில் குறிப்பிடுகிறார்.

பேரியாறு சேர நாட்டினை வளப்படுத்தியது. சேரநாட்டின் நீர் வளத்தால் வயலில், நெல், கரும்பு முதலியன செழிப்பாக விளைகிறது. சேர நாட்டில் பேரியாற்றின் வெள்ளத்தின் ஆரவாரம் தவிர பகையால் உண்டாகும் கொடுமை ஏதும் இல்லை என்பதை,

"அருவி அற்ற பெருவறற் காலையும்
நிவந்துகரை இழி தரும் நலந்தலைப் பேரியாற்று
வெம்மை அரிது நின் அகன்தலைநாடே"
(பதிற்றுப் 23:17-22)

என்ற வரிகளில் காணலாம். மேலும் இவ் அழகிய ஆற்றில் வெண்ணிற நுரை சிதற தொழில் மாட்சிமைப்பட்ட யவனர்கள் கொண்டு வந்த மரக்கலம் பொன்னை கொண்டு வந்து விலையாக கொடுத்து விட்டு மிளகை ஏற்றிச் சென்றது என்பதை,

"சேரலர், கள்ளி அம் பேரியாற்று வெண்
நுரை கலந்த,
யவனர் தந்த வனை மாண் நன்கலம்
பொன்னோடு வந்து கறியொடு பெயரும்"
(பதிற்றுப்பத்து 28:5-5)

என்ற வரிகள் வாயிலாக மக்கள் செழிப்புற்று இன்பமாய் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

இவ்வாறு சங்ககாலத்தில் ஆறுகள் தமிழர்கள் வாழ்வோடு ஒன்றாய்க் கலந்திருந்தன. சங்க தமிழர்கள் தங்கள் நாட்டு வளத்தை புகழ்வதில் முன்னோடியாக திகழ்ந்தனர். ஆறுகள் நாட்டை வளப்படுத்தின என்பதையும், ஆறுகள் மனித நாகரீகத்தின் தொட்டிலாகவும் சிறப்பு செய்த தன்மையை சங்க கவிதைகள் வாயிலாக அறிய முடிந்தது. இவ் ஆறுகளைப் பற்றி ஆேலும் ஆராய்ந்தால், பல சிறப்புகளை சங்கப் பாடல்கள் வாயிலாக அறியலாம்.

**துணை நின்ற நூல்கள்**

1) புலியூர்கேசிகன் உரை, பரிபாடல் மூலமும் உரையும்.
2) பாரதியார் கவிதைகள், பாரதியார் வானதிப் பதிப்பகம்.
3) பரிமேலழகர் உரை, திருக்குறள்
4) சங்க இலக்கியம் (மூலமும் உரையும்) ச.வெ. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600108, முற்பதிப்பு 2006.
5) சிலப்பதிகாரம், புலியூர்கேசிகன் உரை, கானல்வரி பாடல்கள்.
6) ஔவையார் பாடல்கள், நல்வழி.
7) பதிற்றுப்பத்து, மூலமும் உரையும், டாக்டர். உ.வே.சாமிநாத ஐயர்.
8) தமிழ்நதி, சங்கரா பதிப்பகம், ஏனாத்தூர், காஞ்சிபுரம், 631561.

Vol. 7 Special Issue 1 March 2020

P-ISSN: 2321 - 788X NAAC Score: 2.13

# SHANLAX
## INTERNATIONAL JOURNALS

editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

A Peer-Reviewed-Refereed-Scholarly Indexed Quarterly Journal

திருவள்ளுவர் கல்லூரி
(தேசியத் தரமதிப்பீட்டில் B++ தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் - 627 425
தமிழ்த் துறை

மற்றும்

Shanlax International Journal of
Arts, Science and Humanities

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

## ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

# Certificate
OF PUBLICATION

We hereby certify that

முனைவர் ஜா. [illegible]

In recognition of the Publication of the Paper Entitled

சங்கக் கவிதைகள் [illegible]

Published in

SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

| | | |
|---|---|---|
| பேரா. ச. கன்னகி<br>அமைப்பாளர் | முனைவர் ச. சிவசங்கர்<br>துறைத்தலைவர் | முனைவர் ச. சுந்தரம்<br>முதல்வர் |

Dr. N. Ayyanathan
Editor in Chief

Er. S. Lakshmanan
The Publisher

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2019-2020**

## S.No:10

**Title of paper** : Akananooru Kurum sirappiyavukal

**Name of journal** : Shanlax International Journals

**Year of publication** : 2020

**ISSN number** : 2321-788X

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/rani_ugc_care_list20240729172257.pdf

Vol. 7 | Special Issue 1 | MARCH 2020

SHANLAX #SINCE1990

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

P-ISSN 2321-788X

தொகுதி 8

திருவள்ளுவர் கல்லூரி
(தேசியத் தரமதிப்பீட்டில் B++ தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் – 627 425

தமிழ்த்துறை

மற்றும்

**Shanlax International Journal of Arts, Science And Humanities**

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

பதிப்பாசிரியர்
பேரா. ச. கண்ணகி

SIJASH NAAS Rated Journal
NAAS Score 2.13

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS

| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 34 | அகநானூற்றில் உளவியல்<br>**வி. ஜினிதா வின்ஸ்** | 137 |
| 35 | சங்ககாலப் பெண்பாற் புலவர்கள்<br>**முனைவர் சகோ.க. மங்களசுந்தரி** | 140 |
| 36 | புறநானூற்றில் நீர்நிலைகள்<br>**முனைவர் த. மினி** | 143 |
| 37 | சங்க இலக்கியங்கள் காட்டும் நீர்நிலைகள் - வெ. இறையன்பு பார்வை<br>**மு. கற்பகம்** | 146 |
| 38 | பெண்மை பெற்ற பெருமதிப்பு - பாரி மகளிர்<br>**க. இராஜா சீநிவாசன்** | 149 |
| 39 | புறநானூறும் சமூகமும்<br>**மு. பொன்னி** | 155 |
| 40 | அகநானூறு கூறும் சிறப்பியல்புகள்<br>**முனைவர் ஏ. ராணி** | 160 |

# அகநானூறு கூறும் சிறப்பியல்புகள்

**முனைவர் ஏ. ராணி**
உதவிப் பேராசிரியர், முஸ்லீம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

Volume: 7

Special Issue: 1

Month: March

Year: 2020

P-ISSN: 2321-788X

## முன்னுரை

எட்டுத்தொகை நூல்கள் தொகை நூல்கள் என்றழைக்கப் பட்டுள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறு ஒரு சிறந்த நூல் ஆகும். இந்நூல் முழுவதும் அகம் சார்ந்த செய்திகளைப் பற்றி பேசுகிறது. தலைவன் தலைவிக்கான காதல் உணர்வுகளையும், பிரிவாற்றமையால் படும் துன்பங்களையும் இந்நூல் மூலம் அறியமுடிகிறது. அகநானூறு தனக்கென்று தனி அடையாளத்தைக் கொண்டுள்ளன. அகம் சார்ந்த கருத்துக்களை இந்நூல் பட்டியலிடுகின்றது. தனித்து விளங்கும் சிறப்பைப் பெற்றுள்ளதை இக்கட்டுரை மூலம் ஆராயப்பட்டுள்ளன.

## அகநானூறு கூறும் பாடல்களின் சிறப்பும்

அகம் நானூறு என பிரிக்க வேண்டும். அகம்-உள்ளம், மனம் எனப் பொருள் பெறும். 13 அடி குறைந்த நிலையிலும் 31 அடி விரிந்த நிலையிலும் பாடல்கள் உள்ளன. இந்நூலை தொகுக்க செய்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. தொகுத்தவர் உப்புரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மர். நீண்ட பாடல்களைப் பெற்றுள்ளதால் "நெடுந்தொகை" எனவும் அழைத்தனர். கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு பாடல்கள் உள்ளன. இதனை முப்பிரிவாகப் பிரித்தனர். அவற்றைக் களிற்றியானை நிரை எனவும், மணிமிடை பவளம் என்றும், நித்திலக்கோவை என்றும் அழைத்தனர்.

## தனிச்சிறப்பும் ஐந்திணை அமைப்பும்:

தலைவன் தலைவியின் களவொழுக்கம் பற்றிய செய்திகள் அதிகமாகக் காணப்படுகிறது. இங்கு தோழி தலைவனுக்கு அறிவுரை கூறுவதிலும், தலைவியை ஆற்றுப்படுத்துவதிலும் பெரும்பங்கு வகிக்கிறார். பாலைநிலத்து திணையில் வரும் தலைவன் பொருளீட்ட செல்ல மனமில்லாமல் தலைவியை நினைத்து தன் நெஞ்சிடம் உரையாடுகிறான் அகநானூறு ஐந்திணை மக்களின் வாழ்க்கை அமைப்பையும், ஒழுக்கத்தினையும் கூறுவதாக இருந்தாலும் பல வகையான தனிச்சிறப்பைப் பெற்று விளங்குகிறது. இதை

### பாடல்களின் அமைப்பும் மன்னர்களின் குறிப்புகளும்

அகநானூறு பாடல்களில் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு என வரும் பாடல்கள் ஒற்றைப்படை எண்களில் அமைந்தது.

**"ஒன்று மூன்று ஐந்து ஏழு நபர் பாலை"**
எனவும் குறிப்பிடுகின்றது

இவை பாலைத்திணைப் பாடல்கள் ஆகும். அகநானூற்றில் செம்பாதி பாலைத் திணைப் பாடல்களாக உள்ளன. இது எட்டுத்தொகை நூல்களில் எந்த பாடல்களிலும் இல்லாத தனித்தன்மையும் சிறப்பினையும் பெற்றுள்ளது. இங்கு மன்னர்களின் போர்திறமை, வெற்றி வாகை சூடுதல், ஏழைகளுக்கு வாரி வழங்கிய வள்ளல்கள் போன்ற குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. மேலும் அதியமான் நெடுமான்அஞ்சி, அத்தி, ஆதிமந்தி, உதயஞ்சேரலாதன், அவ்வி, எழினி, கரிகால்வளவன், தலையானங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் முதலான மன்னர்களின் வரலாற்றுக்குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

### தமிழர்களின் தேர்தல்முறையும் ஓவியம் வரைதலும்

தமிழர்கள் தேர்தல் முறையிலும், ஓவியம் வரைதலிலும் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளனர். பண்டைய தமிழரின் தேர்தல் முறையான குடவோலைமுறை இந்நூலில் இடம் பெற்றுள்ளதை,

**"கயிறு பிணிக் குழிசிஓலை கொண்டிமாரா**
**பொறிகண்டு அழிக்கும் ஆவணமாக்களின்**
**உயிர்திறம் பெயர் நல் அமர்க்கடந்த**
**தறுகணாளர் குடர் தரீஇ. தெறுவ"**

என்ற பாடல் வரிகள் உணர்த்துவதை அறியலாம்.

மக்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் தலைவனின் பெயரை பனையோலையில் எழுதி அந்த குடத்தில் இடுவர் யாருடைய பெயர் அதிக எண்ணிக்கையில் எழுதப்பட்டி ருக்கிறதோ அவரே வெற்றிபெற்றவனாக அறிவிக்கப்படுவர். அதுபோல தலைவன் பொருள் தேடச் செல்கிறான் என்பதை தலைவியிடம் தலைவன் கூறாமலேயே தலைவனின் முகக்குறிப்பை வைத்து அறிந்து கொண்டாள் என்று அகநானூறு கூறுகிறது.

### போரும் பெண்களின் விளையாட்டும்

அகநானூறில் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் போர்திறமைப் பற்றி கூறப்பட்டுள்ளதை:

**"போர்வல் யானைப் பொலம் புண்எழினி**
**நால் அலி நறவின் எருமைப்புரன்**
**முரைசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெல்**
**கொன்று களம் வேட்ட ஞான்றை**
**வென்றி கொள் வீரர் ஆர்பினும் பெரிதே"**

என்ற வரிகள் மூலம் பாண்டியன் நெடுஞ்செழியன் பிடரி மயிரினையுடைய குதிரைகள் பூட்டப்பெற்ற கொடிகள் அசைந்தாடும் தேரினை உடையவன்: அவன் தலையாலங்கானம் என்னும் ஊரில் அனைத்து இடங்களும் சிவக்குமாறு யானைப் படைகளையுடைய பொன்னாலான பூண் அணிந்த எழினி, பண்ணாடையில் அரிக்கப்பெற்ற கள்ளினையுடைய எருமையூர் தலைவன், இருங்கோ வேண்மான் விரைந்து செல்லும் தேரினையுடைய பொருநன் ஆகிய ஏழு வேந்தர்களின் படை களையும் கொன்று வெற்றிபெற்றான். தன் வெண்கொற்ற குடையின் கீழ் அமர்ந்து ஏழு நாடுகளையும் ஆட்சிபுரிந்தான்.

தன்னுடைய இளம் வயது மகள் தான் விரும்பிய தலைவனுடன் உடன்போக்கு சென்றுவிட்டாள். அந்த மகளை மறக்க இயலாத தாய் வீட்டில் இருக்கும் போது விளையாடிய விளையாட்டுகளை நினைத்துப் பார்த்து வருந்துவதை,

**"கிளியும், பந்தும், கழங்கும், வெய்யோன்**
**அறியும் அன்பும், சாயலும், இயல்பும்"**

இளம்பெண்ணான தனது மகள் கிளிகளுக்கு மழலைச் சொற்களைப் பயிற்று வித்து மகிழுதல், பந்தெறிந்து விளையாடுதல், கழங்கு ஆடுதல் போன்ற விளையாட்டுகளை தன் தோழியர்களோடு காலில் இருக்கும் சிலம்பு ஒலிக்க விளையாடுவதைக் கண்டு மகிழ்ந்தேன். இனி யார் விளையாடுவதைக் காண்பேன் என வருந்திக் கூறுகிறார்.

### முருகன் வழிபாடும் வெறியாடலும்

சங்ககால மக்கள் முருகனை கடவுளாக வழிப்பட்டனர். இதை,

**"சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்**
**சினம் மிக முருகன் தன் பரங்குன்றத்து**
**அந்துவன் பாடிய சந்து கெழு நெடுவரை"**

என்ற பாடல் சுட்டுகின்றது.

முருகன் மிகவும் சினம் கொண்டவன். கொடிய அசுரனையும் அவனது சுற்றத் தாரையும் அழித்தவன். ஒளி பொருந்திய இலை போன்ற தோற்றத்தையுடைய நீண்ட வேற்படையினை உடையவன். குளிர்ச்சிப் பொருந்திய திருப்பரங்குன்றம் அம்முருகனுக்கு உரிய மலையாகும். பாரும் என்பதும் விளக்கப்பட்டுள்ளன. முதுமைப் பெண்டிர் தலைவியின் தாயிடம், முருகனுக்கு வெறியாட்டு நிகழ்ந்ததினால் நும் மகளின் துன்பம் விலகும் என கூறினார். முருகனின் வேலிற்கு மாலை சூடினர் முருகனைப் பாடிப் பலியையும் கொடுத்தனர்.

போர் நடைபெறும் போது மார்பில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்களுக்கு நடுகல் அமைத்து அதில் பெயர்மற்றும் அவர்களின் வீரம் பற்றி பொறித்தனர்.

### திருமணமும் தாலிபற்றிய செய்தியும்

திருமணம் பழந்தமிழரின் வாழ்வோடு கலந்த ஒன்று. இதை அகநானூறும் எடுத்து ரைக்கின்றது. பண்டைய தமிழர்கள் திங்கள் உரோகினியோடு வந்து கூடும் நாளில் திருமணத்தை நடத்தினர். பந்தக்கால்களை அமைத்து, புதிய மணலைப் பரப்பினர். விளக்கு ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டனர். உளுந்தம் பருப்புடன் சமைத்த பெருஞ்சோற்று திரளை அளித்தனர். தமிழர்கள் தொன்மைக் காலம் தொட்டே தாலி அணிந்துள்ளனர். திருமணத்தை இறைவன் சாட்சியாகவும் பெரியவர்கள் சாட்சியாகவும் தன்னுடைய மனசாட்சியைக் கொண்டும் தாலியைக் கட்டுகிறான். மூன்று சாட்சிகளையும் மூன்று முடிச்சுகளாக கட்டுகிறான். பண்டைய தமிழகப் பெண்கள் தாலி அணிந்தனர். என்பதை,

**"புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி**
**பொன்னுடைத்தால் என் மகள் ஒற்றி"**

தங்கத்தாலியான புலிப்பல் தாலியை திருமணமான பெண்கள் அணிந்தனர்.

### முடிவுரை

எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறு தனிச்சிறப்பைப் பெற்றுள்ளது. தலைவன் தலைவியின் களவொழுக்கம் பற்றிய செய்திகள் அதிகமாகக் காணப்படுகிறது. மன்னர்களின் போர்திறன் ஏழைகளுக்கு வாரி வழங்கிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பண்டைய தமிழர்களின் தேர்தல் முறை குடவோலைமுறையில் அறியப்பட்டுள்ளன. பெண்களின் விளையாட்டுச் செய்திகள், முருகன் வழிபாடும் வெறியாடலும் சிறப்புடையன. தாலிப் பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. அகநானூறு கூறும் தனித்தன்மைகள் இக்கட்டுரை மூலம் ஆராயப்பட்டுள்ளன.

### பார்வை நூல்கள்

1. முனைவர் பாக்கியமேரி - வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு ப-51
2. சுப்பிரமணியன்.ச.வே-தமிழ் இலக்கிய வரலாறு ப-58
3. முனைவர் இரா.செயபால் - சங்க இலக்கியம் அகநானூறு ப-230

Vol. 7 Special Issue 1 March 2020

P-ISSN 2321 - 788X NAAC Score: 2.13

# SHANLAX
## INTERNATIONAL JOURNALS

A Peer-Reviewed-Referred-Scholarly Indexed Quarterly Journal

[illegible]
[illegible] 627 425
[illegible]

மற்றும்

Shanlax International Journal of
Arts, Science and Humanities

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

## ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

# Certificate
OF PUBLICATION

We hereby certify that

Dr. J. RANI

In recognition of the Publication of the Paper Entitled

[illegible]

Published in

SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

| | | |
|---|---|---|
| பேரா. ச. கண்ணகி<br>அமைப்பாளர் | முனைவர் சு. சிவசங்கர்<br>துறைத்தலைவர் | முனைவர் சு. சாந்தாரம்<br>முதல்வர் |
| Dr. N. Ayyanathan<br>Editor in Chief | | Er. S. Lakshmanan<br>The Publisher |

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2019-2020**

## S.No:11

**Title of paper** : **Akananootil Ulaviyal**

**Name of journal** : Shanlax International Journals

**Year of publication** : 2020

**ISSN number** : 2321-788X

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/ginitha.pdf

Vol. 7 | Special Issue 1 | MARCH 2020

# Shanlax International Journal Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

திருவள்ளுவர் கல்லூரி

(தேசியத் தரமதிப்பீட்டில் தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் – 627 425

தமிழ்த்துறை

மற்றும்

Shanlax International Journal of Arts, Science and Humanities

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

பதிப்பாசிரியர்

பேரா. ச. கண்ணகி

SIJASH NAAS Rated Journal
NAAS Score 2.13

P-ISSN 2321-788X

தொகுதி

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

PKP PUBLIC KNOWLEDGE PROJECT

OJS OPEN JOURNAL SYSTEMS

SHANLAX INTERNATIONAL JO

editor@shanlaxjournals.com | www.shan

Vol. 7 Special Issue 1 March 2020

P-ISSN: 2321 - 788X NAAC Score: 2.13

# SHANLAX
## INTERNATIONAL JOURNALS

editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

A Peer-Reviewed-Refereed-Scholarly Indexed Quarterly Journal

திருவள்ளுவர் கல்லூரி
(தேசியத் தரமதிப்பீட்டில் B++ தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் - 627 425
தமிழ்த் துறை

மற்றும்

Shanlax International Journal of
Arts, Science and Humanities

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

## ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

# Certificate
OF PUBLICATION

We hereby certify that

வி. ஜினிதா வின்ஸ், தமிழ்த்துறை,
உதவிப் பேராசிரியர்,
முஸ்லிம் கலைக் கல்லூரி.

In recognition of the Publication of the Paper Entitled

அகநானூற்றில் உளவியல்

Published in

SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

பேரா.ச.கண்ணகி
அமைப்பாளர்

முனைவர் சு. சிவசங்கர்
துறைத்தலைவர்

முனைவர் சு. சுந்தரம்
முதல்வர்

**Dr. N. Ayyanathan**
Editor in Chief

**Er. S. Lakshmanan**
The Publisher

# அகநானூற்றில் உளவியல்

**வி. ஜினிதா வின்ஸ்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு

Volume: 7
Special Issue: 1
Month: March
Year: 2020
P-ISSN: 2321-788X

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் மிகப் பழையனவாய் இருந்தாலும் அதன் சொல்லாட்சி வடிவம், நாகரீகமாக உணர்த்துதல் முதலிய கூறுகளினால் இன்றும் நடைமுறையில் ஆளுமைத்தன்மை உடையனவாய் உள்ளன. தமிழரின் வாழ்வியல் கூறுகளான அகமும் புறமும் சங்க இலக்கியங்களின் பாடு பொருளாக அமைந்துள்ளன. அவ்வகையில் அகநானூற்று பாடல்களில் கூறப்பட்டிருக்கும் தலைவன், தலைவி உளவியல் கூறுகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**உளவியல் அறிமுகம்**

உளவியல் (Psychology) என்னும் சொல் கிரேக்க மொழிச் சொற்களான "சைக்கி" (Psyche) என்ற உயிரைக் குறிக்கும் சொல்லையும், "லோகஸ்" (Logus) என்னும் அறிவியலைக் குறிக்கும் சொல்லையும் மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. எனவே ஆரம்பகாலத்தில் உளவியல் என்பது "ஆன்மா", "மனம்" போன்றவற்றை ஆராயும் இயலாகக் கருதப்பட்டது. வெகு காலத்திற்கு முன்பே இக்கருத்து கைவிடப்பட்டு நடத்தையைப் பற்றி முறையாக ஆராயும் துறையே உளவியல் என்றாயிற்று.

**உளவியலின் தோற்றம்**

1802 ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டை சேர்ந்த பியர்கேபானிஸ் என்னும் உளவியல் நிபுணர் உளவியல் ஆய்வை மேற்கொண்டார். இவரது ஆய்வின் முடிவில் ஒரு உயிரினத்தின் நரம்பு மண்டலத்தின் உடமைகளாகும் என்றார். வில்லியம் உண்ட் உளவியலின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

"தன் உடல் ஓரிடத்தில் இருக்கத்தான் வெவ்வேறு இடங்களுக்கு சென்று பற்பல அனுபவங்களைப் பெறுவது போன்ற உணர்ச்சி கனாக்களில்தோன்றும் இவ்வனுபவங்கள் உடலைச்சார்ந்தவையாக இருப்பதற்கில்லை. உடலினுள்ளே உறையும் ஆன்மாவின் செயல் இதுவென ஆதிகால மனிதன் நினைக்கத் தொடங்கினான்". ***(சந்தானம், எஸ்.கல்வியல் உளவியலின் அடிப்படைகள், பக்6-7)***

**உளவியல் வரையறை**

உளவியல் குறித்து பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமான விளக்கங்களைக் கூறியுள்ளனர்.

"மனிதனின் புறச் செயல்களை உற்று நோக்கி முறையாக ஆராய்ந்து அதன்மூலம் அவை எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியலாகும்" ***(மீனாட்சி சுந்தரம் அ. கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல்)***

"உளவியல் என்பது மனிதனின் நடத்தை, நடத்தையின் காரணங்கள் நிபந்தனைகள் ஆகியவற்றை பற்றிப் படிப்பதாகும்" ***(மேலது ப.3)***

"உளவியல் என்பது உயிர்களின் நடத்தையைக் கண்டறியும் இயலாகும்" ***(பஞ்சாட்சரம், கல்வி உளவியலும் ஆரம்ப ஆசிரியர்கள் கல்வியும், ப. 8)***

J.B. வாட்சன், டோல்மன், ஸ்கின்னர் போன்றோர் உளவியலை நடத்தையியல் என்றே குறிப்பிடுகிறனர்.

**இலக்கியங்களில் உளவியல்**

இலக்கியம் மக்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இலக்கியத்தில் மனிதர்களின் எண்ணங்களும், மன உணர்வு களும் காணப்படுகின்றன. அகமாந்தரின் மன உணர்வுகள்கூறுவோரின் இன்பதுன்ப மனநிலைக்கு ஏற்பவும், கேட்போரின் மனநிலைக் கேற்பவும் மாறுபட்டு ஒலிக்கின்றன. இவ்வாறு அகத்திணை மாந்தரின் மன உணர்வுகள் மனிதர் உணர்வு, சூழல் ஆகிய பின்புலங்களின் வெளிப்படும் பாங்கினை உளவியல் நோக்கில் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

**அகநானூற்றில் உளவியல்**

அகப்பொருள் குறித்த நானூறுப் பாடல்களைக் கொண்டது. நீண்ட அடிகளைக் கொண்ட பாடல்களைக் கொண்டுள்ளதால் "நெருந்தொகை" என்று அழைக்கப்படுகிறது. அகநானூற்றுப் பாடல்கள் தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய், பரத்தை போன்றவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

**தலைவியின் மனநிலை**

தலைவி தலைவன் தொடர்புக் காரணமாகப் பெறக்கூடிய இன்ப துன்ப உணர்வுகளின் அடிப்படையில் தான் தலைவியின் மனநிலை அமைகிறது. தலைவனின் பிரிவால் தலைவியினது உள்ளமும், உடலும் மாறுபாடு அடைகின்றது என்பதை,

> **"காடு இறந்தனரே காதலர் மாமை**
> **அரிநுண் பசலை பாஅய, பீரத்து**
> **எழில் மலர் புரைதல் வேண்டும், அலரே"**
> ***(அ.நா.45)***

இங்கு தலைவனின் பிரிவினைத் தாங்க முடியாத தலைவியின் அழகிய மாமை நிறமானது பசலை படர்ந்து காணப் படுகின்றது.தலைவியின் உள்ளமும் உடலும் மாற்றமடைவதன் மூலம் தலைவி தலைவன் மீது வைத்துள்ள அன்பு புலப்படுகின்றதை அறிய முடிகிறது.

தலைவி தலைவன் மீது மிகுந்து அன்புடையவளாக இருக்கின்றாள். அவ் வேளையில் தலைவியை விட்டுப் பிரியக் கூடிய நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் தலைவி மிகுந்த வருத்தமுடன் காணப் படுகிறாள். இதனை,

> **"அளி இன்மையின் அவண் உறைமுனைஇ**
> **வாரற்க தில்ல - தோழி! - கழினி**
> **வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும**
> **இன்துயில் மார்பில் சென்ற என் நெஞ்சே"**
> ***(அ.நா.40)***

என்னும்பாடலில்தலைவன்தன்னைபிரிந்து பொருள் தேட சென்றான். என் நெஞ்சம் என்னிடமிருந்து பிரிந்து தலைவனிடம் சென்றது. என்னை பிரிந்து சென்ற நெஞ்சம் திரும்பி வராமல் இருக்கட்டும். தலைவன் எனக்கு அருள் செய்யவில்லை என்றாலும் என் நெஞ்சம் தலைவனிடமே இருக்கட்டும் என்று தலைவி தன் வருத்தத்தை தோழியிடம் கூறியதை அறிய முடிந்தது.

தலைவன் தலைவியை விட்டுவிட்டு பரத்தையுடன் சிலகாலம் வாழ்ந்துவிட்டு மறுபடியும்வீடுதிரும்புகின்றான். அப்போது தலைவி அவன் செயலை வெறுத்தவளாக கூறும்போது,

**"மாசில கற்பின் பிதல்வன் தாய் என**
**மாயப் பொய்ம்மொழி சாபினைபயிற்றி எம்**
**முதுமை எள்ளல், அஃது அமைகும் தில்ல"**

***(அ.நா.6)***

தலைவன் தலைவியை விட்டு பரத்தையுடன் காவிரியில் நீராடினான் அதன்பிறகு தலைவியிடம் வந்து குற்றமற்ற கற்பினை உடையவளே என் புதல்வனை ஈன்ற தாயே என்றெல்லாம் மாய பொய்யான மொழிகளைக் கூறினான். அதற்கு தலைவி, தன் முதுமையை எண்ணி இகழ்தல் வேண்டாம் என்று கூறி, இவ்விடத்தை விட்டு சென்றுவிடு என்று தலைவனின் ஒழுக்கக்கேட்டை சுட்டிக்காட்டிய தலைவியின் மனநிலையை தெரிந்துக் கொள்ள முடிந்தது.

### தலைவனின் மனநிலை

தலைவன் தலைவியின் மீது மிகுந்த அன்புடையவனாக இருக்கின்றான். தலைவியை பிரிந்து பொருளீட்ட செல்லும்போது வழியில் அவனுக்குத் தலைவியின் நினைவு வருகின்றது. ஆகவே தலைவியின் நினைவு தலைவனை பொருளீட்ட செல்ல விடாமல் தடுக்கின்றது என்பதை,

**"மா இதழ்புரையும் மயிர்கொள்ஈர் இமை**
**உள்ளகம் கனல் உள்ளுவதொறு உலறி**
**உயங்கி சாய் சிறுபுறம் முயங்கியபின்னே"**

**(அ.நா.19)**

தலைவியை பிரிந்து பொருளீட்டச் சென்றதால் தலைவியின் இரு கண்களிலிருந்தும் நீர் வடிந்து கண்கள் சிவந்திருக்கும் மேலும் தலைவி சக்தி யற்றவளாக சோர்ந்திருப்பாள் என தலைவியின் நிலைகுறித்த தலைவனின் மனநிலையை அறிந்து கொள்ள முடிகிறது.

### பாசறையில் தலைவனின் மனநிலை

கார்காலத்தில் தன் வினை முடிந்து திரும்பி வருவதாக கூறிவிட்டுச் சென்ற தலைவனால் திரும்பி ஊருக்குச் செல்ல முடியவில்லை, தலைவியை நினைத்து வருத்தமடையும் தலைவனின் மனநிலையை,

**"இது நற்காலங்காண்டி சிற்பகைவர்**
**மதின் முருக்கிய நொடிசிதை மருப்பிற்**
**வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே"**

***(அ.நா.164)***

பகைவரை வென்ற பிறகும் வேந்தன் பாசறையில் தங்கியிருக்கும் தலைவன் தலைவியை நினைத்து வருத்தமடையும் மனநிலை அறிந்துக் கொள்ள முடிகிறது.

### முடிவுரை

இங்ஙனம் அகமாந்தர் மன உணர்வுக்கும், மன உணர்வுகளை விளக்கி நிற்கக் கூடிய பின்புலங்களுக்கும் சிறப்புத் தரக் கூடியவையாக அகநானூற்று பாடல்கள் உள்ளன என்பதை அறிய முடிகிறது.

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2019-2020**

## S.No:12

**Title of paper** : **Purananootil Neer Nilaikal**

**Name of journal** : Shanlax International Journals

**Year of publication** : 2020

**ISSN number** : 2321-788X

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/mini_ugc_care_list20240729174315.pdf

Vol. 7 | Special Issue 1 | MARCH 2020

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

P-ISSN 2321-788X

திருவள்ளுவர் கல்லூரி
(தேசியத் தரமதிப்பீட்டில் B++ தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் – 627 425

தமிழ்த்துறை

மற்றும்

**Shanlax International Journal of Arts, Science And Humanities**

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

பதிப்பாசிரியர்
பேரா. ச. கண்ணகி

SIJASH NAAS Rated Journal
NAAS Score 2.13

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS
SHANLAX INTERNATIONAL JOURNALS

முனைவர். த. மினி
Tamil Dep


# SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

**Vol. 7** | **Special Issue 1** | **March, 2020**

**P-ISSN: 2321-788X** **Impact Factor: 3.025**


**Thiruvalluvar College**
*Papanasam*

**Shanlax International Journal of Arts, Science and Humanities**
*Madurai*

**இணைந்து நடத்தும்**

தேசியக் கருத்தரங்கம்

# "ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்"

பதிப்பாசிரியர்

பேரா. ச. கண்ணகி

தொகுதி 8

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்
## (தேசியக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | பேரா. ச. கண்ணகி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2020 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>திருவள்ளுவர் கல்லூரி<br>பாபநாசம் - 627 425<br>திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு |
| கணினிஅச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 190 |

ISSN : 2321-788X

National Tamil Conference on ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

| | | |
|---|---|---|
| Editor | : | Prof. S. Kannaki |
| Copy Right | : | Editor |
| First Edition | : | March, 2020 |
| Published | : | Department of Tamil<br>Thiruvalluvar College<br>Papanasam - 627 425<br>Tirunelveli (Dist)., Tamil Nadu |
| Printed at | : | Shanlax Press |
| Pages | : | 190 |

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1 | வெள்ளிவீதியாரின் வரலாற்று வரைவியல்<br>**முனைவர் கு. நீதா** | 1 |
| 2 | பட்டினப்பாலை உணர்த்தும் பழந்தமிழர் பண்பாடு<br>**முனைவர் வீ. கவிதா** | 5 |
| 3 | குறுந்தொகைக் காட்டும் உயிரினங்கள்<br>**முனைவர் வே. சித்ரா** | 9 |
| 4 | சங்கப் பாடல்களில் நடுகல் வழிபாடு<br>**முனைவர் மு. கார்த்திகா** | 13 |
| 5 | புறநானூற்றில் அரசர் புலவர் உறவு<br>**பா. ஜில் டேனியல் தங்கராஜ்** | 17 |
| 6 | புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறைப் பாடல்கள்<br>**முனைவர் க. இரதிகுமாரி** | 22 |
| 7 | சங்க இலக்கியத்தில் சமுதாய வாழ்க்கை<br>**முனைவர் இரா. ரனிதா** | 26 |
| 8 | புறநானூறு காட்டும் விருந்தோம்பல்<br>**ஜெ. சவிதா** | 30 |
| 9 | உளவியல் நோக்கில் சங்க இலக்கியம்<br>**மு. சண்முகவடிவு தேவதாஸ்** | 34 |
| 10 | சங்க இலக்கியங்களில் சிவ வடிவங்கள்<br>**மா. ஜெயக்குமார்** | 37 |
| 11 | குறுந்தொகையில் பறவைகள்<br>**முனைவர் செ. செபஸ்டெல்லா** | 42 |

| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 34 | அகநானூற்றில் உளவியல்<br>**வி. ஜினிதா வின்ஸ்** | 137 |
| 35 | சங்ககாலப் பெண்பாற் புலவர்கள்<br>**முனைவர் சகோ.க. மங்களசுந்தரி** | 140 |
| 36 | புறநானூற்றில் நீர்நிலைகள்<br>**முனைவர் த. மினி** | 143 |
| 37 | சங்க இலக்கியங்கள் காட்டும் நீர்நிலைகள் - வெ. இறையன்பு பார்வை<br>**மு. கற்பகம்** | 146 |
| 38 | பெண்மை பெற்ற பெருமதிப்பு - பாரி மகளிர்<br>**க. இராஜா சீநிவாசன்** | 149 |
| 39 | புறநானூறும் சமூகமும்<br>**மு. பொன்னி** | 155 |
| 40 | அகநானூறு கூறும் சிறப்பியல்புகள்<br>**முனைவர் ஏ. ராணி** | 160 |

# புறநானூற்றில் நீர்நிலைகள்

*முனைவர் த. மினி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு

**Volume:** 7

**Special Issue:** 1

**Month:** March

**Year:** 2020

**P-ISSN:** 2321-788X

### முன்னுரை

சங்க காலத்தில் வாழ்ந்த நம் தமிழ் மக்கள் நீரின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றை சேமித்து வந்துள்ளனர். புறம் என்ற சொல்லாட்சிக்குத் தமிழ் இலக்கிய உலகில் சிறப்புப் பொருளுண்டு. குறிப்பாக வீரம் என்ற பொருளில் சங்கப் பாடல்களில் புறநானூறு அடையாளமிட்டு வழங்கப்படுகின்றன. போருக்கு நிகராக வள்ளாண்மை, நட்பு, தமிழர் தம் உயரிய கொள்கை எனப் பலவும் சிறப்பாக கூறப் பட்டுள்ளன. அவ்வகையில் புறநானூற்றில் காணப்படும் நீர்நிலைகள் குறித்த செய்திகள் இக்கட்டுரையில் அமைகிறது.

### நீர்நிலைகள்

மழைநீரை சேமித்து வைப்பதற்கான நீர்நிலைகளை அமைப்பது என்பது முக்கியமான ஒன்றாகும். இதனையே,

**"உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பு முயிரும் படைத்திசினோரே
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் நாட்டு உதவாதே: அதனால்
அடுபோர்ச் செழிய! இகழாது பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"**

**(புறநானூறு 18: 21-30 ப.70)**

நீர் இல்லா நிலத்தில் நீர்நிலை உண்டு பண்ணுதல், ஆறு, ஏரி, குளம் முதலியவற்றால் நீர் வருவாயின்றி மழை வருவாயொன்றையே நோக்கிப் புன்செய் நிலங்கள் இருக்கின்றது என்று புறநானூறு கூறுகின்றது.

மேலும் நீர் அதிகமான பகுதிகளில் மீன்கள் உலவும், நீர் நிறைந்த குளங்களில் குவளையும், தாமரையும் மலர்ந்து விளங்கும் நீர் வளம் வாய்ந்த ஊரின் சிறப்பினை,

**"கீழ்நீரான் மீன் வழங்குந்து**
**மீநீரான் கண் அன்ன மலர் புக்குந்து**
**கழி சுற்றிய விளை கழனி**
**அரிப் பறையான் புள் ஓப்பந்து"**
***(புறம் 396, 1-4. பக்கம்:867)***

என்று புறநானூற்றுப் பாடல் எடுத்து இயம்புகிறது.

**நீர்நிலைத் தேக்கங்கள்**

மழைநீரை சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர்நிலைகள் அமைப்பது ஒரு மன்னனின் தலையாய கடமை என்று புறநானூறு வலியுறுத்துகின்றது. பெருகி வரும் நீரின் விசையைக் கட்டுப்படுத்த வேண்டும், என்றெண்ணியே சங்கத் தமிழர்கள் குளங்களை அமைப்பதிலும், அணைகளைக் கட்டுவதிலும் ஈடுப்பட்டுள்ளனர். நீரின் விசையைக் கட்டுப்படுத்த குளங்களின் கரை எட்டாம் பிறையைப் போல் அமைக்கப்படடிருந்தது என்பதை,

**"அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண்நாள்திங்கள்அனையகொடுங்கரைத்**
**தெள்நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ"**
***(புறம் 118, 1-3, பக்கம்-274)***

எனக் குறிப்பிடுவதன் மூலம் ஏரி எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பதைப் புறநானூறு வழி அறியமுடிகிறது. ஏரிக்கரை நீளம் குறைவாகவும் ஆனால் அதிகநீர் கொள்ளளவு கொண்டதுமான அமைப்பு எட்டாம் பிறை வடிவில் ஏரி இருக்கும்போதே ஏற்படும். இது ஏரி வடிவமைப்பில் மிகவும் சிக்கனமான வடிவமைப்பாகும்.

**நீரின் பயன்பாடு**

புறநானூறு பாடல்களில் நீர் சார்ந்த கருத்துப்புலன்கள் மிகுதியாக இருக்கின்றது. மழைநீர் தொடங்கி அனைத்து வகை நீர்நிலைகளையும் பயன்பாட்டு முறையில் எடுத்தியம்புகின்றது. நாவலம் தண்பொழில் என்று சொல்லக்கூடிய தமிழகம் நீர்வளம் மிக்கது. நீரின் அடிப்படை ஆதாரங்கள் இன்றியமையாத ஒன்று. அதனால் தொல்காப்பியம் நிலம், நீர், விசும்பு, தீ, வளி கலந்த இந்த உலகம் என்கிறார். வறட்சியான இடம் குறித்த கருத்துகள் வருமாறென்றால் நீரின் இன்றியமையாமை புறநானூற்றில் அழுத்தமுற பதிவு செய்யப்பெற்றுள்ளன. அதனை,

**"ஊர் இல்ல, உயவு அரிய,**
**நீர் இல்ல, நீள் இடைய"**
***(பக்கம் 7 புறம்: 3,17-18)***

என்னும் வரிகளால் அறியலாம்.

உணவு, உடை, உறையுள் என அனைத்திற்கும் நீரின் பயன்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. இதனை மெய்ப்பிக்கும் வகையில்,

**"நீரின்றி அமையா யாக்கைக்கும் எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்"**
***(புறம் 18: 18-20. பக்கம்:50)***

என்ற பாடலில் நீரின் பயன்பாட்டில் உழவுத் தொழில் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

**நீர்நிலைகளின் இன்றியமையாமை**

இவ்வுலகம் கடலினை எல்லைப் பரப்பாக கொண்டது என்று புறநானூறு சுட்டுகின்றது அதனை,

**"இமிழ்திரைப்**
**பௌவம் உடுத்த இப்பயம் கெழு**
**மாநிலம்"** ***(புறம் 58,20-1.பக்கம் 154)***

**நீர்நிலை பாதுகாப்பு**

புற அரசியலில் எல்லைகளாகக் கருதப்பட்ட நீர்நலைகளை பராமரிக்க காவலர்கள் பணியமர்த்தப் பட்டிருந்தனர்.

குளங்களில் மழைக் காலங்களில் ஏற்படும் கரை உடைப்பு போன்றவற்றைச் சரிசெய்ய காவலர்கள் நியமிக்கப் பெற்று நீர்நிலைகள் பராமரிக்கப் பட்டதை,

> **"என்நாள் திங்கள் அனைபக் கொடுங்கரைத்**
> **தெள்நீர் சிறுகுளம் கீள்வது மாதோ"**
> **(புறம் 118, 2-3.பக்கம் 274)**

என்ற அடிகளால் அறியலாம்

**முடிவுரை**

நீர்நிலைகளானது மனிதனின் அகம், புறம் என்ற இரு வேறுபட்ட வாழ்வியலிலும் இன்றியமையாத பங்கு வகித்தமை, அவற்றை நுட்பமாகக் குறிப்பிட்டமையை அறிவ தோடு புற உலகில் நீர்நிலைகளுக்கான அடையாளம் வேறு வடிவினத்தால் கையாளப்பட்டுள்ளதை புறநானூறு பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றது.

Vol. 7 Special Issue 1 March 2020

P-ISSN: 2321 - 788X NAAC Score: 2.13

SHANLAX
INTERNATIONAL JOURNALS
editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

A Peer-Reviewed-Refereed-Scholarly Indexed Quarterly Journal

திருவள்ளுவர் கல்லூரி
(தேசியத் தரமதிப்பீட்டில் B++ தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் - 627 425
தமிழ்த் துறை

மற்றும்

Shanlax International Journal of
Arts, Science and Humanities

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

# Certificate
OF PUBLICATION

We hereby certify that

முனைவர். தெ. மணி

In recognition of the Publication of the Paper Entitled

புறநானூற்றில் நீர் நிலைகள்

Published in

SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

| | | |
|---|---|---|
| பேரா.ச.கண்மணி<br>அமைப்பாளர் | முனைவர் ஏ. சிவசங்கர்<br>துறைத்தலைவர் | முனைவர் சு. சுந்தரம்<br>முதல்வர் |

Dr. N. Ayyanathan
Editor in Chief

Er. S. Lakshmanan
The Publisher

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2019-2020**

## S.No:13

**Title of paper** : **Valviyal Sinthanaikal kurum Sirupanattupadai**

**Name of journal** : Naveena Tamil Aaivu Panmugatamil Aaivithal

**Year of publication** : 2020

**ISSN number** : **2321-984X**

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/shibaja_ugc_care_list20240729173211.pdf


ISSN 2454-3993

■ மலர் 3 ■ சிறப்பிதழ் 10 ■ மே 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SJI TAMIL STUDIES

தும்பை



பொருநை இலக்கியக் களமும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும்

இணைந்து அளிக்கும்

ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

# சங்கத் தமிழ்

முனைவர் கி.சங்கர நாராயணன்

UGC Approved Journal Number: 40729 | VOLUME 3 | SPECIAL ISSUE 10 | MAY 2019

Shanlax International Journal of Tamil Studies

(A Peer-reviewed - Scholarly Indexed Quarterly Journal)

SHANLAX INTERNATIONAL JOURNALS

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| 1 | ஐம்பெருங்காப்பியத்தில் தமிழரின் கலைகள்<br>**ஆ.ஆன்றோ நிஷாந்தி** | 1 |
| 2 | சங்க இலக்கியத்தில் ஓவியக்கலை<br>**அ.ஆன்றொ பிரவீனா** | 4 |
| 3 | சங்க இலக்கியத்தில் நாடு<br>**முனைவர் க.கவிதாஸ்** | 7 |
| 4 | பழந்தமிழரின் அரசாட்சி<br>**முனைவர் க.கனகராஜ்** | 12 |
| 5 | கம்பனில் வசிட்டரும் விஸ்வாமித்திரரும்<br>**முனைவர் போ.கார்த்திகா** | 17 |
| 6 | பழந்தமிழகத்தில் வணிகர்களும் சமணமும்<br>**முனைவர் கு.சண்முகப்பிரியா** | 21 |
| 7 | மொழியியல் வகைப்பாட்டில் கிளைமொழி ஆக்கங்கள்<br>**முனைவர் ஜோ.சம்பத்குமார்** | 25 |
| 8 | அகழாய்வில் தமிழ் எழுத்துக்கள்<br>**ச.சர்புதீன்** | 28 |
| 9 | பண்டைய தமிழரின் பொது நிர்வாகம்<br>**பேராசிரியர் மு.சற்குணவதி** | 32 |
| 10 | சங்க இலக்கியங்களில் அரமகளிர்<br>**முனைவர் மு.சுதனா** | 35 |
| 11 | தொன்மமும் விளக்கமும்<br>**மா.சுப்பலட்சுமி** | 38 |
| 12 | பெரும்பாணாற்றுப்படை காட்டும் ஐவகை நில மக்களின் வீடுகளும் உணவு முறைகளும்<br>**முனைவர் ந.சுபா** | 42 |
| 13 | தெய்வச்சிலையாரின் உரைநெறி முறைகள்<br>**மு.சுபாஷினி** | 46 |
| 14 | கலித்தொகை காட்டும் பெண்களின் மனஉணர்வுகள்<br>**முனைவர் ப.தங்கத்துரைச்சி** | 51 |
| 15 | தொல்காப்பியர் சுட்டும் கலைஞர்கள்<br>**ப.தேன்மொழி** | 54 |
| 16 | தமிழ் சமூகம் மதுவால் சீரழிதல்<br>**இர.மணிகண்டன்** | 59 |

| | | |
|---|---|---|
| 17 | தொல்காப்பியக் கூட்டு வினையெச்சங்களும் கலித்தொகையும்: ஒப்பீடு<br>**க.மாரிமுத்து** | 66 |
| 18 | தொல்காப்பியத்தின் உரை அமைப்பு<br>**முனைவர் மா.ரங்கசுவாமி** | 72 |
| 19 | சங்கத் தமிழரின் நாணயங்கள்<br>**ரா.ரஜுலா** | 76 |
| 20 | குறிஞ்சி நில உணவும் மரபும்<br>**முனைவர் ஏ.ராணி** | 81 |
| 21 | பாவூர்சத்திர வட்டார நாடார் இனமக்களின் வாழ்வியல் சடங்குகளில் காணலாகும் நம்பிக்கைகள்<br>**முனைவர் ரா.ராஜலெட்சுமி** | 84 |
| 22 | சங்ககால திருமணம் கற்பியல் பார்வை<br>**முனைவா தா.சேம் மற்றும் செ.லிசா** | 87 |
| 23 | பெண்ணியத் திறனாய்வு ஓர் ஆய்வு<br>**முலனவர் க.வனிதா** | 91 |
| 24 | நாட்டார் கதைகள் காட்டும் அரசியல் அறம்<br>**முனைவர எ.ஜாஸ்மின் விஜி** | 94 |
| 25 | மறுபக்கம் நாவல் உணர்த்தும் பனைமரத்தின் சிறப்பு<br>**நெறியாளர் ஏ.ராணி & சோ.ஜெப ஷீலி** | 98 |
| 26 | சிறுபாணாற்றுப்படையில் தொன்மையும் தனித்தன்மையும்<br>**ஜே.ஜென்சி பிரியா** | 101 |
| 27 | உமா சரவணன் புதினங்களில் பெண் மன உணர்வுகளும் சமுதாய சிக்கல்களும்<br>**பி.வீ.ஸ்ரீதேவி** | 105 |
| 28 | தேவாரத்தில் ஐந்திணை வளமும் அகப்பொருள் நெறியும்<br>**முனைவர் நா.ரா.ஷிபஜா** | 108 |
| 29 | தொல்காப்பியத்தில் எச்சங்கள்<br>**அ.ஹாஜிரா பேகம்** | 112 |
| 30 | கந்தர் சஷ்டி கவசம் - சொற்கட்டமைப்பு<br>**முனைவர் தி.ஹேமலதா** | 117 |
| 31 | திருக்குறளில் வேளாண்மை<br>**சு.தங்க ப்ரீத்தா மலர்** | 120 |
| 32 | தொல்காப்பியத் தோழி<br>**முனைவர் சீ.செஞ்சுலட்சுமி** | 124 |

# தேவாரத்தில் ஐந்திணை வளமும் அகப்பொருள் நெறியும்

**முனைவர் நா.ரா.ஷிபஜா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு, கன்னியாகுமரி

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 10

**மாதம்:** மே

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

## முன்னுரை

தமிழகத்தை வல்லவர்கள் ஆண்ட காலமே பக்தி இலக்கியக் காலமாகும். இப்பக்தி இலக்கியங்களால், தமிழ் மொழி புதுப் பொலிவுற்றது. இயல் தமிழ் பாக்கள் பண்ணொடு இயைந்து எங்கும் இறை மணம் பரப்பின. இக்காலகட்டத்தில், தான், பன்னிருத் திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தம் உட்பட பலபக்தி இலக்கியங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் சைவ நூலான பன்னிரு திருமுறையில்,தென்னாட்டினுடைய சிவனை எள்ளாடப்பட்டவர்க்கும் உரியவராக நாயன்மார்கள் காண்கின்றனர். சைவ சமயம், தமிழத்தில் தழைத்தோங்கத் தொண்டு புரிந்தவர்களுள் தலைநிற்பவர்கள் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர், மாணிக்கவாசகர். இவர்கள் நால்வருள்ளும் சிவனடியார்களின் திருத்தொண்டுகளையும் பக்தி திறங்களையும் உலகறிய செய்த பெருமை சுந்தரரக்கே உண்டு. இவரின் ஏழாம் திருமுறையில் சிவபிரானை மட்டுமல்லாது, ஐந்திணைகளின் வருணனையும் இணைந்தே பாடியுள்ளார். அவ்வகையில், தேவாரத்தில் காணப்படும் ஐந்திணைக் குறித்த சில செய்திகளையும், அக நெறியையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தேவாரம்

தேவாரம் என்ற சொல்லிற்கு பல பொருள் கொள்ளலாம். அவை தெய்வத்தின் மேல் கொண்ட அன்பினால் தோன்றிய பாடல்கள் என்றும் தேவனிடத்து அன்பை விளைவிப்பது என்றும், தெய்வ தன்மை பொருந்திய ஹம் என்றும், தோ ஆரம் எனப் பரித்து, சிவபெருமானுக்கு ஆரம் போல அழகு செய்வது என்றவாறு பொருள் கொள்வர்.

## சுந்தரர்

சுந்தரர், திருமுனைப்பாடி நாட்டில் பிறந்தவர். ஊர் திருநாவலூர், மணக்கோலத்தில் சிவபெருமானால் நடுத்தாட்க் கொள்ளப்பட்வர். தன்னை தடுதாட் கொண்ட சிவபிரானை, சிவன் வேண்டுகோளுக்கிணங்க, பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா எனும் முதல் பதிகத்தை பாடினார். இவர், இறைவனை நோக்கிப் பாடிய பாடல்களில், தோழமை உணர்வு விஞ்சி நிற்கும் இவரை இறைவன் என்பர். இவர் நெறியோக நெறி என்னும் ஞான நெறி ஈடுபாடு கொண்டவர். இவரது பாடல்களில் வாழ்வின் நடைமுறை இயல்புகளை காணலாம். திருத்தொண்டர் புராண நாயகராகிய, சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கினால் அருளப் பெற்றப் பதிகங்கள் 84 தேவாரங்கள் 1026 ஆகும்.

**"அரங்களும் மறை நான்னுடன் விளித்தான் இடம் அறிந்தோம்**
**தெங்களும் நெடும் பெண்ணையும் பழ் வீழ் மணல் படைப்பைச்**
**சங்கங்களும் இலங்கிப்பியும் வலம்புரிகளும் இடறி**
**வங்கங்களும் உயர்கூம் பொடு வணங்கும் மறைக்காடே!** **(தேவா: 847)**

சங்கு, முத்து, மணி இவற்றை திரைகள் கரையில் கொணர்ந்து ஒதுக்குவதோடு, வணிகக் கப்பல்களும் வந்து கரை சேர்க்கின்றன. மேலும், கப்பலில் கூம்பு தாழ்ந்து எழுவதை, மறைக்காட்டு இறைவனுக்கு வணக்கம் செலுத்துவதாகக் காண்கிறார் ஆரூரான்.

**அகப்பாடல்கள்**

**தமிழ் பாடல்களுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கவை அகப்பாடல்கள்.**
**தள்ளா பொருளியிற் தண்டமிழாய் வந்திலார்**
**கொள்ளாரிக் குன்று பயன்"** **(பரி 25-26)**

காதலன், காதலியின் ஒரு மனப்பட்ட இன்ப வாழ்வு என்றும் போற்றத்தக்கதுவே. நிலையான பேரின்பத்திற்கு வழி நடத்தும் என வாழ்க்கைப் பொருளிலக்கணம் வகுத்த தொல்காப்பியர், தமிழர் நெறியினை வரைந்தும் காட்டியுள்ளார்.

**தெய்வத்திரு தொண்டரின் இறைமைக் காதல்**

பண்டைத் தமிழரின் அகப்பொருள் நெறியினின்று, தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் பாவித்து கால் மீக்கூரப்பேசும் பாடல்கள் பல உள்ளன. தமிழுக்கு சிறப்புடைய, இந்த அகப்பொருள் நெறியை ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், உடன்பட்டுச் சில பதிகங்கள் பாடியுள்ளார் காதலினைப் பிரிந்து வருந்தும் நிலையில் தலைவி நாயகன் மாட்டு அன்னம், குருகு முதலிய பறவைகளை அனுப்பி தனது நிலையை எடுத்துரைக்குமாறு வேண்டும் தூதுப் பாடல்கள் சுந்தரர் வாக்கில் சிறப்பாகக் குறிப்பிட தக்கன.

**தூதுப்பாடல்கள்**

திருவாரூர்ப் பதிகத்தில் அன்னப்பெடை , குருகு, கிளி, குயில், கொண்டல், சக்கரவானப்புள், சேவல்நாரை, பூவை. வண்டு எனும் இவைகளை விளித்துத் தமது பிரிவுத் துயரையும் ஆற்றாமையையும் எடுத்துரைக்கின்றது. நம்பியாரூராய்,

**"பறக்கும் எம் கிள்ளைகாள் பாடும் எம் பூவைகள்**
**அறக்கன் என் எத்தகும் அடிகள் ஆரூரை**
**மறக்கில்லாமையும் வளைகள் நில்லாமையும்**
**உக்க இல்லாமையும் உரைத்தவல்லீர்களே!"** **(தேவா. 803)**

பிரிவு நிலையில் பெண்களின் உடல்மெலிந்து, உறக்கமில்லாமல் என்றும் தலைவன் நினைவாகவே இருத்தர் போன்ற மெய்பாடுகள் காதலில் வெளிப்படுதலை ஆரூரார் பதிகத்தில் காணலாம். மேலம் குயில்களிடம் நடனம் ஆடுகின்ற திருவாரூர் இறைவனை அடையும் பொருட்டு யான் பாடும் முறையும், புகழும் முறையும். பணிந்தேத்தும் முறையயும், ஊடும் முறையம் என் பொருட்டு அவனிடம் கூறுங்கள் என்றும் தூது விடுக்கிறார்.

**மங்கையர் காதல் - அச்சம்**

திருப்பைஞ்ஞீலி பதிகத்தில், பெண்கள் அவரை பார்த்துக் காதல் கொண்டு மொழிந்த சொல்லை உட்கொண்டும், சுந்தரர் பாடுகின்றார். இதில் மங்கையர் காதல் வெளிப்படுவதோடு, இறைவனுடைய திருக்கோலத்தைக் கண்டு வியந்து போற்றுவதும் மிக அழகாக அமைந்துள்ளது.

**"கையார பாம்பு அரை ஆஞ்சிதொர் பாம்பு**
**கழுத்தோர் பாம்பை பின்புதாழ்**
**மெய்யெலாம் பொடிக்கொண்டு பூ அதிர் வேதம் ஓத்திர் தமும்**
**பைய வேவழடங் காக நின்று பைஞ்ஞீலி யேன் என்றீர் அடிகள்நீர்**
**ஐயம் ஏற்கும் இது என் கொலோ கொலும்**
**ஆரணீய விடங்கரே"** **(தேவா. 267)**

வனமுறை அழகீரே! உமக்கு கை, அரை, கழுத்து, பின்புறம் ஆகிய இடங்களிலெல்லாம் இருப்பது பாம்பு. நீரோ! மேனி முழுதும் நீறு பூசியுள்ளீர் மறையும் ஓதுகிறீர். மெல்ல வந்து இழகுற நின்று யான் திருபைஞ்ஞீலி வாழ்பவன், இவ்வாறு மங்கைமார் பலர் பேசிய காதல் மொழிகளைக் கட்டுரைத்து, அஞ்சுவதை கூறுவதே இத்திருபைஞ்ஞீலிப் பதிகம்.

**உறுதியான அன்பு**

திரு நாட்டியததான் குடியில் எழுந்தருளியிருக்கும் பிரானிடம் அன்பு கொண்டதும் பந்தர் நீ என்னை விரும்பினும், விரும்பாவிடினும் உன்னை யான் விரும்புவேன். நான் கொண்ட இலக்கினை உயிருள்ள வரை அந்நிலையம் அடைந்தே தீருவேன் என்கிறார்.

**"எய்வான் வைத்தோன் இலக்கினை அனைதர**
**நினைத்தேன் உள்ளம் உள்ளவும்"** **(தேவா 90)**

**முடிவுரை**

**"திணை கொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்**
**செல்வத் தென்திரு நின்றியூரானே!** **(தேவா. 65)**

எனச் சுந்தரர் தமிழை திணை கொள் செந்தமிழ்! என்ற சிறப்பித்துள்ளார். இதன்மூலம் ஐந்திணை மரபினைக் கொண்ட அகப்பாடல்களையுடைய செந்தமிழ் சிறப்பிடம் பெறும் நிலையை, எடுத்து மேலும், பொருள் விளக்கத்திற்கு ஏற்ப, அனைவரும் எளிதில் ஏற்று அனுபவிப்பதற்குத் தக்கப்படி, சுந்தரர் தேவாரம் காணப்படுகிறது.

**துணைநின்றநூற்கள்**

1. சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம் புலவர் நடராசன்
2. இலக்கிய வரலாறு - ஆனந்தன்

ISSN: 2454-3993 மலர் 3 சிறப்பிதழ் 10 மே 2019

SHANLAX
INTERNATIONAL JOURNALS

editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

(A Peer - Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

பொருநை இலக்கியக் களம்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும்

இணைந்து அளிக்கும்

ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

# சங்கத் தமிழ் – தும்பை

# Certificate
OF PUBLICATION

We hereby certify that

முனைவர். நா.ஏ. திவ்யஜா, தமிழ்த்துறை,
உதவிப் பேராசிரியர்,
முஸ்லிம் கலைக் கல்லூரி.

In recognition of the Publication of the Paper Entitled

தேவாரத்தில் ஐந்திணை வளமும்
அகப்பொருள் நெறியும்

Published in

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

UGC Approved Journal Number: 40729

N. [signature] | [signature] | [signature]
--- | --- | ---

| ந.முருகேசபாண்டியன் | முனைவர் கி.சங்கர நாராயணன் | Er. S. Lakshmanan |
|---|---|---|
| முதன்மை ஆசிரியர் | ஆசிரியர் குழு உறுப்பினர் | The Publisher |

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2018-2019**

## S.No:14

| | |
|---|---|
| **Title of paper** | : Neethi Noolkal valiyuruthum Ilvalkai Nerikal |
| **Name of journal** | : Aayutha Eluthu Pannatu Tamiliyal Aaivithal |
| **Year of publication** | : 2019 |
| **ISSN number** | : 2278-7550 |
| **Link to article** | : https://www.muslimartscollege.in/naac/LALI_ETHAZ_UGC_CARE_LIST.pdf |

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118


## பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது
சேலம்.

தமிழ்த்துறை
இணைந்து நடத்தும்

5

பன்னாட்டுக் கருத்தரங்கம் டிசம்பர், 12 - 2018

## தமிழ் இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்



## டிசம்பர் – 2018


visit us: www.pallavipathippakam.in
https://ayidhaezhuthu.in

16. விவேகசிந்தாமணியில் அறச்சிந்தனைகள்

*எஸ்.ஜெயசுதா - 49

17. இலக்கியங்களில் அறநெறிகள்

*முனைவர் சீ.பிரேமகுமாரி - 52

18. சிலம்பு காட்டும் அறம்சார் கடமைகள்

*முனைவர் சு.லோகிதா - 54

19. சிறு பாணாற்றுப் படையில் உணவிடுதலாகிய அறம்

*முனைவர் பீ.ரகமத் பீபி - 57

20. சங்க இலக்கிய அகப்பாடல்களில் காணலாகும் ஆண்களுக்கான வாய்மை - (பேச்சு)

*சீ.ஹரிகிருஷ்ணன் - 60

21. புறநானூற்றில் தமிழரின் விருந்தோம்பல்

*பெ.கிருஷ்ணராஜ் - 63

22. திருக்குறளில் அறச்சிந்தனைகள்

*பெ.மீனாட்சி - 65

23. கும்மி மற்றும் தெம்மாங்குப் பாடல்களில் சமுதாய அறங்கள்

*மா.புனிதா - 67

24. தோல் புதினத்தில் வாழ்வியல் அறம்

*மா.அஜிதா - 69

25. சுப்ரபாரதிமணியன் நாவல்களில் அறச்சிந்தனைகள்

*ப.ராஜேஸ்வரி - 71

26. பரிபாடலில் வாழ்வியல் கூறுகள்

*ஜெ.நிஷா - 73

27. புறநானூற்றின் வழி அறம்

*செ.சௌந்தர்யா - 76

28. வண்ணச் சரபம் தண்டபாணி தேசிகர் கூறும் மகளிரின் ஒழுக்க நெறிகள்

*த. கார்த்திகா - 78

29. சங்க இலக்கியங்களில் அறமாகிய விருந்தோம்பல்

*முனைவர் ஐ.புவனாம்பிகை - 80

30. நீதி நூல்கள் வலியுறுத்தும் இல்வாழ்க்கை நெறிகள்

*முனைவர் ஜா.லாலி ஏதேஸ் - 82

# நீதி நூல்கள் வலியுறுத்தும் இல்வாழ்க்கை நெறிகள்

*முனைவர் ஜா.லாலி ஏதேஸ், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லீம் கலைக்கல்லூரி.

**முன்னுரை**

இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கையினை பிரதிபலித்துக் காட்டும் காலக் கண்ணாடி ஆகும். தமிழ் இலக்கியமானது இருபது நூற்றாண்டுகளுக்கு முந்தைய பழமை வாய்ந்தவை. இலக்கியங்கள் எழுந்த காலத்தில் காணப்பட்ட சமூகப் பிரச்சனைகள், மக்களின் வாழ்க்கை நெறிகள் அவர்களின் பண்பாட்டு பழக்கவழக்கங்களை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு உதவும் வரலாற்று கருவூலங்களாக திகழ்கிறது. உலக மக்களுக்கு அறத்தையும், பண்பையும், வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைக்கும் விதத்தில் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவைகளாக கருதப்படும்

> "அடிநிமிரில்லா செய்யுள் தொகுதி
> அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வகை
> திறம்பட உரைப்பது"

பதினெண் கீழ்கணக்கு நூற்கள் ஆகும் என்று பன்னிருபாட்டியல் விளக்கம் கூறுகிறது. இந்நூல் வலியுறுத்தும் இல்வாழ்க்கைக்கு தேவையான அறநெறிகளான வாழ்வைச் சிறக்க செய்யும் இல்லாளின் சிறப்பு, சுற்றத்தாரை பேணல் விருந்தோம்பல், ஒழுக்கம், புகழோடு வாழ்தல், மக்கள் பேறு, குடிப்பெருமை, இது போன்ற அறக்கருத்துக்களை இந்நூலின் வாயிலாக அறிய முடிகிறது. அவை என்ன என்பதை "நீதி நூற்கள் வலியுறுத்தும் இல்வாழ்க்கை நெறிகள்" என்னும் கட்டுரை வாயிலாக காணலாம்.

**இல்வாழ்க்கை நெறிகள்**

இல்லறம் நல்லறமாக திகழ வேண்டுமென்று இல்லற வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைக்கும் தம்பதியினரை சான்றோர்கள் வாழ்த்துவது தமிழர் பண்பாடு. ஒருங்கிணைந்த சமுதாயத்தை உருவாக்குவது ஆகும். அறநெறி தவறாது இல்வாழ்க்கை வாழ்கின்றவர்கள் சமுதாயத்தில் மதிக்கப்படுகின்றனர். இதனால்தான் வள்ளுவரும் இல்வாழ்க்கையின் மேன்மை பற்றி சிறப்புற உணர்ந்துள்ளார். இல்லத்தரசி நற்பண்பை உடையவளாக திகழ வேண்டும். கணவனுடைய பொருளாதாரத்தை தகுந்த விதத்தில் வாழ்க்கை நடத்த வேண்டும். கற்பு நெறி உடையவளாக திகழ வேண்டும் என்றும் கணவனைப் பாதுகாத்து பிறர் புகழக்கூடிய நிலையில் மன உறுதியுடன் வாழ வேண்டும். இதனை,

> "தற்காத்து தற்கொண்டாற் பேணித் துகை சான்று
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்று குறிப்பிடுகிறார். மேலும் இல்வாழ்க்கை என்பதன் பண்பு அனைவரிடமும் அன்புக் காட்டுதலாகும் இல்வாழக்கையில் ஈடுபடுவோர் பிறருக்கு அறத்தொண்டு செய்து வாழ வேண்டும் என்பதை,

> "அன்பும் அறனும் உடைத்து ஆயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது" (திருக்குறள் 45)

என்று குறிப்பிடுகிறார்.

**இல்லாளின் சிறப்பு**

ஒரு வீட்டுக்கு அழகு நல்ல மனைவி அமைவது. அயல் ஆண்களை ஈர்க்கும் இழிகுண[illegible] இல்லாத மனைவிதான் நல்லவள். வறுமையிலும், பெருமையுடன் விளங்க வேண்டும். கணவ[illegible] விருப்பத்திற்கு இணங்கியும் ஊரார் நெறிக்கு தகுந்த வாழ்க்கை வாழ்பவளே சிறந்த மனைவி. நல்[illegible] பெண் நாணம் உடையவள். நல்ல மனைவி அமைவது "ஒருவனுக்கு பாதுகாப்பாக அமைந்துள்ள [illegible] வாளுக்கு சமம்" ஆகும் என்று நாலடியார் கூறுகிறது.

மேகங்கள் தவழும் மேல் மாடம் உடையதாய் சிறப்பு மிக்க காவல் உடையதாய் ஒளிரு[illegible] ஒளிவிளக்குகள் ஒளிவீசுவதாய் இருப்பினும் நல்ல பண்புடைய மனைவியை பெற்றில்லாதவனுடை[illegible] வீடு கண்ணால் பார்க்கக்கூடாத சுடுகாடேயாகும். இதனை,

"மழை திளைக்கும் மாடம் ஆய், மாண்பு அமைந்த காப்பு ஆய

---

மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்,"

காண்டற்கு அரியது ஓர் காடு!" (நாலடியார் 37 [பலநெறி])

என்ற பாடல் வரிகள் வாயிலாக வீட்டுக்கு அழகு மாடமன்று, காவல் அன்று, ஒளிவிளக்கன்று நல்ல மனைவியே என்பதை வலியுறுத்துகிறது.

**சிறந்த பெண்ணின் கடமை**

ஒரு சிறந்த இல்லத்தரசி கண்ணுக்கு இனியவளாகவும் கணவன் விரும்பும் அளவு தன்னை அலங்கரித்து கொள்ளுபவளாகவும் அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சுபவளாகவும் ஊராரை கண்டு நாணும் குணம் உடையவளாகவும், அஞ்சி இடமறிந்து கணவனிடம் ஊடலும் கூடலும் கொள்பவளாக இருத்தல் வேண்டும். இதனை,

"கட்டு இனியாள், காதலன் காதல் வகை புனைவாள்

உட்கு உடையாள் ஊரான் இயல்பினாள்

---

மடமொழி மாதராள்-பெண்" (நாலடியார் 39 - கற்புடை மகளிர் 4)

என்று பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார்.

குழந்தைகளை பெறுதல் அறிந்தும் அறியாத மடன் உடையவராய் இருத்தல் விருப்பம் உடையவராக இருத்தல், கணவருடன் உறைதல், அவருடன் உண்ணுதல், தொண தொண எனப் பேசாதிருத்தல் எனும் குணங்கள் கணவரை மனைவியர் வசிகம் செய்யும் மருந்துகள் ஆகும். இதனை,

"மக்கள் பெறுதல் மடன் உடைமை, மாது உடைமை

ஒக்க உடன் உறைதல,:. ஊண் அமைவு" (சிறுபஞ்ச மூலம் - 51)

என்ற பாடல் வரிகள் வாயிலாக அறிய முடிகிறது.

**பெண்ணின் அறங்கள்**

குழந்தையைப் பெற்று வளர்த்தல், கருவுற்ற சூலினைப் பேணுதல், அனாதை குழந்தையை எடுத்து வளர்த்தல், திருமணமாகாமல் ஏமாந்த சூலுற்ற கன்னியையும், கணவனால் கைவிடப்பட்டவரையும் வைத்து பாதுகாத்தல். இவை பெண்ணின் அற நெறியாகும். இதனை,

"ஈன்று எடுத்தல், கால் புரஞ்செய்தல்

........................................................" (சிறுபஞ்சமூலம் 70)

என்ற பாடல் வரிகள் வாயிலாக அறியமுடிகிறது.

**மக்கள் பேறு**

சமுதாயத்தில் தங்கள் பெயரையும் குடும்பத்தின் பெயரையும் நிலைநாட்டுவதற்குரிய வாரிசை ஈன்றெடுப்பது ஒரு மகத்தான நிலை. மக்கட் பிறவி சிறப்புடையதாய் அமைதல் வேண்டும். குழந்தையை பெற்றால் மட்டும் போதாது. அவர்களை நற்பண்பு உடையவராகவும், அறிவுடையவராகவும் வளர்த்தல் வேண்டும். தந்தையை விட மகனது முயற்சியால் தான் ஒரு குடும்பம் பெருமை கூடும் என்பதை [நாலடியார் 20, தாளாண்மை 7] என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார்.

**பெருமை நாட்டும் அறங்கள்**

கரு கலையாமல் காத்தல், கர்ப்பம் சிதைந்தால் தாயை ஊறில்லாமல் காத்தல், குழந்தைபேறு துன்பமில்லாமல் நிகழ்தல், குழந்தைக்கு மருந்து கொடுத்தல், குழந்தையை அச்சுறுத்தாமல் வளர்த்தல் ஆகியன பெருமை நாட்டும் அறங்கள். இதனை,

"கலங்காமைக்காத்தல், கருப்பம் சிதைத்தால

இலங்காமை பேர்த்தரல் ..........."

........................................................

"சூலாமை சூலின் படும் துன்பம் - ஈன்ற பின்

ஏலாமை, ஏற்ப வளர்ப்பு அருமை

........................................................" (சிறுபஞ்சமூலம் 73)

ஆகிய பாடல் வரிகள் வாயிலாக அறிய முடிகிறது. மேலும், ஒலி கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்கட்கெல்லாமல் குழந்தைப் பேற்றை விட சிறந்த பேறு வேறு எதுவும் இல்லை என்பதை (முதுமொழிகாஞ்சி 6:7) பாடல் வரிகளில் குறிப்பிடப்படுகிறது. குழந்தைகளை, பெற்று வளர்ப்பவள் நல்ல மனைவி என்று (நீதிநெறி விளக்கம் 80-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்ல குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என்று நீதி வெண்பா 54-ல் கூறப்பட்டுள்ளது.

**விருந்தோம்பல்**

இல்லற நெறிகளில் ஒன்று விருந்தோம்பல் தம்மை எதிர் நோக்கி வரும் விருந்தினரை உபசரித்தல் சிறந்த பண்பாகும். ஒரு குடத்து நீரைக் காய்ச்சி உண்ணும் வறுமை துன்பம் வாட்டிய போதும் கடல் நீரையே கொடுத்தாலும், பொதாத அளவு, சுற்றத்தார் வந்த போதும் அவர் தம் முகம் கோணாதவாறு விருந்தோம்பலை கடமையாக செய்யும் பெண்ணே மாட்சிக்கு உரியவள் ஆவாள் என்பதை [நாலடியார் - 139 ; கற்புடை மகளிர் - 2], என்ற பாடல்வரிகளில் குறிப்பிடுகிறார். மேலும் இல்லத்திற்கு வரும் விருந்தினரை முகம் கோணி பார்த்தால் அவர்கள் அனிச்சப்பூ முகர்ந்த அளவிலேயே வாடிவிடும். அதுபோல முகம் வாடி விடுவர் என்பதை

"மோப்பக் குழையும், அனிச்சமும் முகம் திரிந்து
நோக்க குழையும் விருந்து" (திருக்குறள் 90)

என்ற பாடல் வரிகளில் இல்லத்திற்கு வரும் விருந்தினரை புன்சிரிப்போடு வரவேற்றல் வேண்டும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**விருந்தினர் சிறப்பு செய்தல்**

விருந்தினரை நல்ல உணவு அளித்துச் சிறப்பித்தலுடன் விருந்தினரை புன்முறுவலோடு இனிய சொற்களை கூறி வரவேற்றல், கால் கழுவ நீரளித்து அமர்வதற்கு இருக்கை அளித்தல், படுக்க பாய் தருதல் தங்க இடம் அளித்தல் வேண்டும் என (ஆசாரக்கோவை 54) -ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பசித்து வருவோரை அழைத்து புசிக்க செய்தலே போர் வெற்றியை விடவும், யாக வேள்வியை விடவும் சிறப்பாகும் என்று வெண்பாமாலை 215 ஆவதுப் பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார். விருந்தோம்பல் இல்லை என்றால் இல்லறம் சிறக்காது. ஆகவே இல்லம் நாடி வரும் விருந்தினரை சிறப்பு செய்தல்வேண்டும் என்று கூறப்படுகிறது.

**கற்புடைய பெண்ணின் கடமை**

நல்ல விருந்தினரை உபசரித்தல் மூலம் கணவனுக்கு நட்புடையவளாகவும் நாள் தோறும் வழுவாது இல்லறத்தை நடத்தலில் நல்ல தாயாகவும் தம் குடி பெருமை குன்றாத நல்ல குழந்தை பெற்று வளர்த்தலில் நல்ல மனைவியாகவும், இருத்தலே கற்புடைய பெண்ணின் கடமை என்பதை,

"நல் விருந்து ஓம்பலின் நட்டாளாம், வைகலும்
இல் புறஞ் செய்தலின் ஈன்றதாய் தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைகிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்" (திரிகடுகம் 64)

என்ற பாடல் வரிகள் வாயிலாக அறிய முடிகிறது.

**ஒழுக்கத்தொடு வார்தல்**

மானம் என்றால் ஒழுக்கம். ஒழுக்கம் மனித வாழ்க்கைக்குரிய இன்றியமையாத பண்பாகும். ஒழுக்கத்தை வருந்தி காத்தல் வேண்டும். அதுவே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மை ஆகும். நல்ல பெயர் வாங்க நீண்ட நாள் காத்திருத்தல் வேண்டும். கெட்ட பெயர் ஒரு நிமிடத்தில் கிடைத்து விடும். ஆகவே ஒழுக்கம் தவறினால் வாழ்வில் உயர்வு இல்லை என்பதை,

"பெருகத்து வெண்டும் பணிதல், சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு" (திருக்குறள் 963)

என்று குறிப்பிடுகிறார்.

உயிரைவிடவும் உடலை விடவும் மானம் பெரிது (நீதி நெறிவிளக்கம்) மானம் கெட்டு வாழ்வதை விடச் சாவதே நலம் என்பதை (நல்வழி 14) என்ற பாடலில் குறிப்பிடுகிறார். மானத்தை போற்றுபவருக்கு இம்மையிலும் மறுமையிலும் நல்லது விளையும் என்பதை (நாலடியார் 30, மானம் 4) என்ற பாடல் வரிகளில் கூறப்படுகிறது.

**புகழோடு வாழ்தல்**

அழிந்து போகும் உலகத்தில் அழியாத ஒன்று புகழ். அழிந்து போகும் பூத உடம்பிலும் அழியாப்புகழ் உடம் பே சிறந்தது என்று (நீதி நெறி விளக்கம் 39) ஆவது பாடல் வரியில் கூறப்படுகிறது. நாம் வாழும் உலகத்தில் தனக்கு மட்டுமின்றி மற்றவர்க்கும் பயன்படும் படி வாழ்தல் வேண்டும் என்பதை,

"கிழமைப்பட வாழ்" (ஔவையார் - ஆத்திச்சூடி 34)

என்று குறிப்பிடுகிறார். மேலும் உலகில் புகழ் மிகு செயல்களை செய்தவனும், சிறந்த கற்புடையவளை மனைவியாகப் பெற்றவனும், மக்கள் குடிப்பதற்காக கிணறு தோண்டியவனும் ஆகிய மூவரும் இறவாத புகழ் உடம்பை பெற்றவர் ஆவார் என்று (திரிகடுகம் - 164) என்ற பாடல் வரிகளில் நல்லாதனார் குறிப்பிடுகிறார்.

**சுற்றம் பேணல்**

திருக்குறள் பொருட்பாலில் சுற்றத்தை தழுவி வாழ்தல் இன்றியமையாதது. நாம் வாழும் நிலையற்ற உலகில் உறவினர்க்கு ஏற்ற சமயத்து இயன்றன கொடுக்கும், குணம் இருந்தால் ஒருவர் உறவினரால் அன்பால் சூழ்ந்து கொள்ளப்பெறுவான். செல்வத்தை அடைய பெற்றதின் பயன் எதுவெனில் உறவினர் ஒரு சேர வாழும் இன்பம் என்பதை (திருக்குறள் 524.: 525) என்ற பாடலில் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

"செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்" (வெற்று வேற்கை - 3)

பொருள் உடையவர்களுக்கு அழகு தம்முடன் இணக்கமாக உள்ள உறவினரைத் தாங்குதல் வேண்டும்.

"சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்" (கொன்றைவேந்தன் 30)

உறவினர்க்கு அழகு ஒருவர் துன்புற்ற காலத்திலும் அவரை விட்டு பிரியாமல் அருகில் இருப்பது ஆகும். இதுபொன்ற கருத்துக்கள் பல நீதி நூற்களில் காண முடிகிறது.

**வாழ்க்கை நலம்**

வாழ்க்கை சிறப்படைய வேண்டும் என்றால் வாழ்க்கை துணையாகிய இல்லாளோடு வாழ்தல் ஆகும். வாழ்க்கை சிறப்படைய கணவனை வணங்கல் கற்புடைய பெண்ணின் கடமை ஆகும் என்று (வெண்பாமாலை 279)ல் கூறப்படுகிறது. வாழ்க்கைக்கு மருந்து கற்படைய மனையின் தோள்கள் (திரிகடுகம் 1) வருவாய்க்கு தக்க செலவிடல், தெய்வம் தொழல் (திரிகடுகம் 41) மனையுடன் மட்டுமெ உறவு கொள்ளுதல் இவை வாழ்க்கை சிறக்கும் நலங்கள் ஆகும். இது போன்ற பல் வேறு வாழ்வியல் நெறிகளை நீதி நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**முடிவுரை**

சமுதாயத்தில் மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்ற வாழ்வியல் நெறிகளை கற்று தருபவை நீதி இலக்கியங்கள். மனிதன் பின்பற்றி நடக்க வேண்டிய வரியை வகுத்து தருவதோடு வீடு பேற்றை அடைய நல்வழி காட்டியாய் திகழ்கிறது. இதனை கடைபிடித்து இளைய சமுதாயத்தினர் வாழ வேண்டும் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**துணை நின்ற நூல்கள்**


1) பதினெண்கீழ்கணக்கு மூலமும், உரையும், சைவ பாலசுந்தரம், தி.சு. சைவ சித்தாந்தக் கழகம், டிடிகே சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை.
2) சமூகவியல் பார்வையில் அற இலக்கிய களஞ்சியம், கப, அறவாணன் தமிழ் கோட்டம், 2 முனிரத்தினம் தெரு, அய்யாகுடியிருப்பு, சென்னை - 600 029.
3) திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம்.
4) வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர் பாக்கிய மேரி.
5) ஐம்பெருங்காப்பியங்களில் அறம், தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு
6) பல்நோக்குப் பார்வையில் தமிழ்ச் செம்மொழி கருத்தரங்கு மலர்.


Jemila

89

8913740839

ISSN : 2278-7550
2278-7550

பல்லவி பதிப்பகம்

ஆய்த எழுத்து
தமிழியல் ஆய்வு இதழ்
AYIDHA EZHUTHU
AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550
UGC - பல்கலைக் கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெற்றது
UGC RECOGNISED JOURNAL
UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

# பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது
சேலம்.

தமிழ்த்துறை
இணைந்து நடத்தும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம் டிசம்பர், 12 - 2018
## தமிழ் இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

# சான்றிதழ்

திரு / திருமதி/ செல்வி/ முனைவர் ஜா.லாலி ஏதேஸ் என்பவர்/ என்பவர்களால் எழுதப்பட்ட நீதி நூல்கள் வலியுறுத்தும் இல்வாழ்க்கை நெறிகள்

என்ற ஆய்வுக் கட்டுரையானது ஆய்த எழுத்து - பன்னாட்டுத் தமிழியல் ஆய்வு இதழில் ( டிசம்பர் - 2018, மலர்-6, இதழ்-12, ISSN 2278-7550 )

பிரசுரிக்கப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒருங்கிணைப்பாளர் & துறைத்தலைவர் | முதல்வர் | செயலாளர் | தாளாளர் | பதிப்பாசிரியர் ஆய்த எழுத்து |

# Regional language to English: Translated copy of Print Journal

**Report: 2018-2019**

## S.No:15

**Title of paper** : **Akananooru Kurum sirappiyavukal**

**Name of journal** : Aayutha Eluthu Pannatu Tamiliyal Aaivithal

**Year of publication** : 2018

**ISSN number** : 2278-7550

**Link to article** : https://www.muslimartscollege.in/naac/MERLIN_MINI_UGC_CARE_LIST.pdf

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது


சேலம்.

தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

3

## தமிழ் இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்



டிசம்பர் - 2018

visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

ISSN : 2278-7550

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

மலர் : 6 டிசம்பர்-2018 இதழ் : 12



பதிப்பாசிரியர்

நல் நடராசன்

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



## EDITORIAL BOARD

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

## ஆசிரியர் குழு

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

**முனைவர் க.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

# பொருளடக்கம்


1. அறம் போற்றும் வள்ளுவம்
*முனைவர் இரா.சுந்தரமூர்த்தி - 1
2. தொல்காப்பியத்தில் பண்பாட்டுச் சுவடுகள்
*முனைவர் க.செல்வராணி - 3
3. அண்ணாவின் படைப்புகளில் பெண்ணிய மறுமலர்ச்சி
*கோ.சுசீலா - 6
4. தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்
*முனைவர் அ.பாக்கியமுத்து - 10
5. புறநானூறு காட்டும் அறச்சிந்தனைகள்
*முனைவர் ர.தமிழ்ச்செல்வி - 13
6. தமிழ் இலக்கியங்கள் இயம்பும் அறச்சிந்தனைகள்
*சே.சித்ரா - 16
7. நாலடியாரில் அறச் சிந்தனைகள்
*முனைவர் செ.யோகம் - 19
8. கீதாரி நாவலில் அறச்சிந்தனைகள்
*ஆ.ஆவுடையம்மாள் - 22
9. புதுமைப்பித்தன் சிறுகதைகளில் அறச்சிந்தனைக் கருத்துகள்
*ப.விசாலாட்சி - 24
10. பாவலர் நாச்சியப்பன் கவிதைகளில் வாழ்வியல் அறம்
*முனைவர் திருமதி ஜெ.காவேரி - 28
11. புறநானூற்றில் வாழ்வியல் அறம்
*முனைவர் தே.மெர்லின் மினி - 31
12. இலக்கியம் காட்டும் பொருள் அறம்
*முனைவர் ம.வனத்தையன் - 33
13. இலக்கியங்களில் தனிமனித அறச்சிந்தனைகள்
*முனைவர் அ.அன்னம்மாள் - 36
14. தமிழ் இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்
*ச.ரூபா - 40
15. தமிழ் இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்
*நா.பிருந்தா - 42

# புறநானூற்றில் வாழ்வியல் அறம்

*முனைவர் தே.மெர்லின் மினி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு.

**முன்னுரை**

சங்ககாலத்தின் வரலாற்றுப் பெட்டகமாகவும், வாழ்வியல் களஞ்சியமாகவும் விளங்குவது புறநானூறு என்னும் இலக்கியமாகும். சங்ககாலத்தில் அகவாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற அகஇலக்கியங்கள் மிகுந்திருப்பினும் புறவாழ்வியலை, அறநெறித் தத்துவங்களை, பண்பாட்டு அடையாளங்களோடு கூடிய உயர் பண்பு நெறிகளை அடுத்த தலைமுறையினருக்குக் கடத்துவதில் புறநானூறு இன்றளவும் தன்னை முழுமைப்படுத்தியுள்ளது. சமூக அறத்தைப் போற்றிப் பாதுகாக்கும் புறநானூற்றில் பொதிந்துள்ள தனிமனித ஒழுக்க நெறிகளை அறிவுறுத்துவதே இக்கட்டுரை நோக்கமாகும்.

**அறம்**

"அறம் என்ற சொல்லை அறு+அம் எனப் பிரித்துத் தீமையை அறுப்பது, நீக்குவது என்றும், அறு-அறுதி செய்வது, கடமைகளை வரையறுப்பது என்றும் பொருள் காண்பர்."[1] இவ்வாறு சான்றோர் விலக்கியன ஒழித்தலும் விதித்தன செய்தலும் அறம் எனக்கொள்ளுதல் பொருத்தமாகும். இதனையே "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்"[2] எனக் கூறும் புறநானூற்று அடிகளும் இக்கருத்தினையே புலப்படுத்தும். உலகப் பொதுமறை தந்தருளிய திருவள்ளுவரும் கூட,

> **"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
> **இழுக்கா இயன்ற தறம்"[3]**

என்று ஒரு மனிதன் தன் வாழ்வில் தள்ளத்தக்க செயல்களை களைந்து வாழ்வதே அறம் என்கிறார்.

**தனிமனித அறம்**

தனிமனிதனின் ஒழுக்க உணர்வே சமுதாயத்தை மேன்மையுறச் செய்யும். இதனை கருதியே பல்வேறு அறங்கள் தனி மனிதர்களுக்கு வலியுறுத்தப் பெறுகின்றன. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் அறமே வலிமையுடையது என்பதை,

> **"சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்**
> **அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல"[4]**

என்கிறது புறநானூறு.

**ஒழுக்கம்**

'ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை' என்கிறது கலித்தொகை. ஒழுக்கம் தான் ஒருவனை உயர்ந்தவனாகவும், சான்றோனாகவும் மாற்றும். அது உயிரை விட மேலானது.

> **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
> **உயிரினும் ஓம்பப் படும்"[5]**

ஒருவன் ஒழுக்கம் தவறினால் உலகம் அழியும் வரையும் அப்பழியிலிருந்து மீள முடியாது. இந்த ஒழுக்கம் தனிமனித வாழ்வில் கடைப்பிடிக்கும் பொழுது வாழ்வு இன்னும் மேம்பாடு அடையும். ஓர் ஆடவனின் உழைப்பும், முயற்சியும் சமூகத்தில் முக்கிய இடம் பெறுகின்றது. குடும்பமும், சமூகமும் ஆடவனின் உயரிய சிந்தனையால் வழி நடத்தப்படுகின்றது. இதனால் சமூகத்தில் ஆடவனின் ஒழுக்கம் போற்றப்பட்டது. ஆடவர்கள் நல்லவர்களாகவும் ஒழுக்க வாழ்வைக் கடைப்பிடிப்பவர்களாகவும் உள்ள நாடே வளம் செழிக்கும் நாடாக அமையும் என்பதனை புறநானூற்றில் ஔவையார்

> "நாடா கொன்றோ! காடா கொன்றோ!
> அவலா கொன்றோ! மிசையா கொன்றோ!
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை; வாழிய நிலனே!"[6]

என்று குறிப்பிடுகிறார்.

**வாய்மை**

> "வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்று
> தீமை இலாத சொலல்"[7]

பிறர்க்கு தீமை பயக்காத சொல்லே வாய்மை என்கிறது திருக்குறள். சங்ககாலப் புலவர்களில் பலர் பொய்யாமையை மேற்கொண்டு வாழ்ந்தனர். வறுமையிலும் பொய்யாமையைக்

கடைப்பிடித்தனர். அவர்களுள் ஒருவர் மருதன் இளநாகனார். இவர் நாஞ்சில் வள்ளுவனிடம் பரிசில் வேண்டிச் சென்ற போது அவனை வாழ்த்தி போர் ஏற்படுமாயின் தன் சுற்றம் பசியால் அழிந்துவிடும். ஆதலால் விரைந்து பொருள் செய்க என வேண்டினார். அப்போது அவர் பொய்யாமை அறத்தை நினைந்து

**"வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்**
**மெய் கூறுவர்"[8]**

என மொழிந்தார். இவ்வரிகள் வறுமையுற்ற காலத்தும் புலவர் கூறுவதற்கு அஞ்சும் உயர்ந்த பண்பை எடுத்துரைக்கிறது.

வன்பரணர் என்ற புலவர் பொய்யாகப் புனைந்து கூறிப் புகழ்ந்து பொருள் பெறுதல் தம் இயல்பு அன்று என்பதை

**"பீடு இல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்**
**செய்யா கூறிக் கிளத்தல்**
**எய்யா தாகின்று எம்சிறு செந்நாவே"[9]**

என்று பெருமிதமும் பணிவும் தோன்றக் கூறினார்.

**செய்ந்நன்றி மறவாமை**

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது"**

என்று செய்ந்நன்றியைச் சிறப்பிப்பார் வள்ளுவர். செய்ந்நன்றி மறத்தல் மிகக் கொடிய பாவம் என்று ஆலந்தூர் கிழார் என்ற புலவர் குறிப்பிடுகின்றார்.

**"ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென**
**அறம் பாடிற்றே ஆயிழை கணவ"**

என்பது புலவர் வாக்கு. புலவர் தம் பாட்டின் முன் அடிகளில் பசுவின் மடியை அறுத்து அதனால் பெறும் பயனைக் கெடுத்தோர், கல்வி புகட்டிய ஆசிரியரைப் பழித்துக் கொடுமை செய்தோர் ஆகியோரை மிகப் பெரிய குற்றவாளிகளாகக் குறிப்பிடுகிறார். இப்பெரும் பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எவ்வகையான வழிமுறையும் இல்லை என்பது சமூக நியதி. இந்தத் தனிமனித நியதியை தான் புறநானூற்றில்

**"ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்**
**மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்**
**வழுவாய் மருங்கின் கழுவாயும் உள"**

என்று ஆலந்தூர்கிழார் தெளிவுப்படுத்துகிறார்.

**ஈகை**

ஈகை என்பது பொருள் உள்ளவன் பொருள் இல்லாதவனுக்கு கொடுக்கும் செயல் ஆகும். வறியவருக்கு ஒன்று ஈவதே ஈகை என்கிறது வள்ளுவம். சங்ககாலத்தில் ஈதல் பற்றிய எண்ணம் பரவலாக இருந்த போதும் இரத்தல் பற்றிய சிந்தனையும் இருந்துள்ளது. என்பதை

**"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று**
**கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"[10]**

என்று கொடுக்கும் தன்மையில் முறையறிந்து கொடுத்தல் அவசியம் என்பதை புறநானூறு குறிப்பிடுகின்றது. இதனால் தான் ஔவையார் காலம் தாழ்த்தி தனக்கு பொருள் கொடுத்த மன்னனைப் பார்த்து 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்று காலம் தாழ்த்திக் கொடுத்தப் பொருளை பெறாமல் 'கொள்ளேன்' என்று மறுத்துரைக்கிறார்.

**முடிவுரை**

சமூக முன்னேற்றத்திற்குத் தனிமனித ஒழுக்கமே தலை சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. தனிமனித உணர்வில் இயல்பாகக் குடி கொண்டிருக்கும் பண்பு நெறிகளை ஊக்குவிக்கும் போது அவை மேலும் வலுப்பெறுகின்றன. சமூகத் தேவைக்காக ஒழுங்கமைவிற்காக மனிதனுக்கு அச்சமூகமே அறநெறிகளை அதிகமாக போதித்துள்ளது என்பதை புறநானூறு என்ற வாழ்வியல் பெட்டகம் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சாரங்கபாணி, இரா.சங்கத்தமிழ் வளம், ப.39
2. புறம், 195: 6 -7
3. திருக்குறள், 36
4. புறம், 31: 1-2
5. திருக்குறள், 131
6. புறம், 187
7. திருக்குறள், 291
8. புறம், 139 : 5-6
9. புறம், 148 : 5-7
10. புறம், 204: 1-4